மங்கையர் மலர்

MANGAYAR MALAR

டிசம்பர் '85 விலை ரூ 3/-




MAGGI
HOT&SWE
TOMATO CHILLI SAUC
புதிய
மேகி ஹாட் அண்ட் ஸ்வீட்
டொமேடோ சில்லி ஸாஸ்
காரசாரமானது! விருவிருப்பூட்டும்
ருசியுள்ளது!
உணவுப் பொருள்களுக்கு உயிரூட்டவே வருகிறது!
ஹும்ம்...என்ன இருந்தாலும் மேகி அல்லவா!
தக்காளியில் மிளகாய் கலந்த இந்த உலகப் பிரசித்தமானச் சுவை, உங்கள் உணவுப் பொருள்களுக்கு உயிரூட்டும்!
கட்லெட், சமோசா, பக்கோடா, உருளைக்கிழங்கு சிப்ஸ், அல்லது வெறும் தோசை-இவைகளின் ருசியை மேகியின் ஹாட் அண்ட் ஸ்வீட் டொமேடோ சில்லி ஸாஸுடன் ஒரு புதுமையுடன் கண்டுணருங்கள்!
பிறகு, மேகியின் டொமேடோ கெச்சப்பையும் ருசி பாருங்கள்! குடும்பத்தில் அனைவரும் விரும்பத்தக்க ஒரு சிறந்த தக்காளித் தயாரிப்பு.
மேகியின் ஹாட் அண்ட் ஸ்வீட் டொமேடோ சில்லி ஸாஸ் மற்றும் மேகியின் டொமேடோ கெச்சப்....
ருசி பார்க்கத் தூண்டும் இரண்டு அருமையான ஸாஸ் வகைகள்!
உணவுப் பொருள்களின் ருசியைத் தட்டியெழுப்பி உயிரூட்டும் இரண்டு ஸாஸ் வகைகள்!
மேகி ®
ஸாஸ்
MAGGI
HOT&SWE
TOMATO CHILLI SAUCE
MAGGI
Tomato Ketchup
மேம்படுத்தும் சுவையைச் சேர்ப்பீர்
இணைந்துவரும் ருசியை ரசிப்பீர்!

மனம் விட்டு...



அன்புள்ள ஆசிரியருக்கு,

வணக்கம். மனம் விட்டு என் சகோதரிகளுடன் தங்கள் 'மங்கையர் மலர்' மூலம் பேச விரும்புகிறேன். சுமார் இரண்டு மாதத்திற்கு முன்பு என் தோழி தன் கணவருடன் அவர்கள் ஆபீஸ் 'சுற்றுலா' சென்று வந்தாள். பம்பாய், கல்கத்தா, காசி, காஷ்மீர் எல்லாம் சென்று வந்தாள். எல்லா இடங்களும் பார்த்தாகிவிட்டது. 'கல்கத்தா' தான் பாக்கி. மொத்தம் 150 பேர். எல்லோரும் குறிப்பிட்ட இடத்திற்கு வந்து கூடும்படி சொல்லி இருந்தார்கள். என் தோழியின் கணவர் வரவே இல்லை. எல்லோரும் இங்கும் அங்குமாக அலைந்து தேட முயன்றனர்.

என் தோழி உடனேயே கல்கத்தா காளியிடம் தன் கணவர் கிடைத்தால் தன் 'தாலிச் சரடு' அவிழ்த்துப் போடுவதாக வேண்டிக் கொண்டாளாம். நீண்ட நேரத்திற்குப் பின் முன்பின் தெரியாத பாஷையில் பேசி அவளது கணவர் வந்து சேர்ந்து விட்டார். உடனே எல்லோரும் அந்த ஊரை விட்டு கிளம்பினால் போதும் என கிளம்பி பம்பாய் வந்து கொண்டு இருந்தனர்.

என் தோழி ஜன்னல் அருகே அமர்ந்து ஆழ்ந்து உறங்குகையில் ஏதோ ஒரு கரம் கைவிட்டு கழுத்தில் உள்ள ஆறு பவுன் சங்கிலியை அறுத்துக் கொண்டு ஓடிவிட்டது. 'அய்யோ, அம்மா' என அலற, நான் தேவிக்குத் தன் கணவன் கிடைத்தால் அர்பணிப்பதாக சொன்ன வாக்கை காப்பாற்ற மறந்ததின் பலன் கைமேல் என அழுதாள்.

சகோதரிகளே, சுற்றுலா செல்லும் பொழுது 'கவரிங்' நகைகள் போதாதா? ஏன் இந்த விஷப் பரிட்சை? மேலும் பெண்களுக்கு தன் கணவனுக்கு ஏதாவது ஆபத்து என்றால் உயிரையும் தருவார்கள். ஆனால் நம்மால் வேண்டுதலைச் செய்ய முடியுமா என யோசிக்க வேண்டும்.

எனது தோழி தனது வியாதி தீர தனது தம்பியைதிருப்பதியில் 'அங்கப்பிரதக்ஷணம்' செய்ய சொன்னாள். இதே போல் எனக்குத் தெரிந்த பெண் குழந்தைக்கு 15 தரம் 'மொட்டை' அடித்துள்ளனர். இதே போல் பலர் அவசரத்தில் பல வேண்டிக் கொண்டு பின்பு நிறைவேற்ற முடியாது 'பகவான் சோதிப்பாரோ?' என வருத்தம் அடைவதுண்டு.

எத்தனையோ கோயில்கள், தீபம் என்ற எண்ணெய் இன்றி, செப்பனின்றி, மின் விளக்குகள் இன்றி இருள் சூழ உள்ளது. கோயிலுக்கு விளக்குகள், ஒரு வருடம் விளக்கு ஏற்ற எண்ணெய், அல்லது மலர், புஷ்பம், போன்றவைகளைத் தருவதாக வேண்டிக் கொள்ளக் கூடாது? பொன்னும், வெள்ளியும் சக்தி இருந்தால் தாராளமாக அளிக்கலாம். ஆனால் செய்ய மறந்து பின்பு இக்கட்டான நிலை உண்டாகி ஆண்டவனைப் பழித்து பலன் இல்லை.

எந்தத் தெய்வமும், நமது காணிக்கையை எண்ணி, எந்த உதவியும் செய்வதில்லை. நேர்மையான வழியில் ஈன்ற பொருளையும், தூய்மையான பக்தியையும் ஆண்டவன் எதிர்பார்க்கிறார்.

— மீரா வீரராகவன், சென்னை.

அவள் எனக்கு ஆசிரியை

மகாத்மா காந்திஜி, தன் மனைவி கஸ்தூரிபா விடத்தில் பல சமயங்களில் கடுமையாக நடந்து கொண்டிருக்கின்றார். ஆனால் அவர் அதே சமயம் தன் மனைவியிடத்தில் உண்மையான அன்பு கொண்டிருந்தார் என்பதை அவர் சொற்களே புலப்படுத்தும். அவர் கூறியவற்றில் சில:—

காபியோ, தேனீரோ அருந்துவது பாவச் செயல் போன்றது என்ற எண்ணமுடையவர் காந்திஜி. "பா" என்னுடன்தான்



வாழ்ந்து வருகின்றாள் என்றாலும் தேனீர் குடிக்கின்றாள்; காபியும் அருந்துகின்றாள். நான் அவளுக்காக அன்போடு அவற்றைத் தயாரிப்பேன்'' என்று கூறியுள்ளார்.


''இளமையில் நான் என் கோபத்தை அவள் மீது கட்டவிழ்த்து விடுவது வழக்கம். தலைவனும் எஜமானனும் ஆகிய எனக்கு ஒவ்வொன்றிலும் கீழ்ப்படிந்து நடக்க வேண்டியது அவளின் கடமை என்ற கருத்து எனக்கிருந்தது. அவளின் வாழ்வை சரியான நரகமாக ஆக்கினேன். என் வீட்டை மாற்றினேன். அவளின் ஆடையைப் பற்றி உத்திரவிட்டேன். தீண்டாமை அனுசரிக்கப்பட்டு வந்த வைதிகமான குடும்பத்தில் வளர்க்கப்பட்ட அவளை, அவளின் கணவன் வீட்டில் முஸ்லிம்களையும் தீண்டாதவர்களையும் ஏற்றுக் கொள்ளும்படி உத்தரவிட்டேன்.

அவளின் எதிர்ப்பில்லாத பணிவு என் கண்களைத் திறந்துவிட்டது. அத்தகைய குறிப்பிட்ட அதிகாரங்கள் அவள் மீது எனக்கில்லை என்பதும் அவளின் கீழ்ப்படிதலை நான் விரும்பினால் நியாயவாதத்தால் அவளை இசையச் செய்ய வேண்டும் என்பதும் எனக்கு நிதானமாகத் தோன்ற ஆரம்பித்தது. இவ்வாறாக, சத்தியாகிரகத்தில், அகிம்சையில் அவள் எனக்கு ஆசிரியையானாள்.

அண்ணல் சிறையிலிருந்து விடுதலை செய்யப்பட்ட போது இறந்து போன தன் மனைவியின் நினைவாக, கஸ்தூரிபாவின் மருந்துப் புட்டி, ஒரு பென்சில், சேலையின் ஒரு துண்டு ஆகியவற்றை தேடி எடுத்துச் சென்றார். அக்காட்சியைக் கண்டவர்களின் கண்கள் கலங்கின.

— தேவகோட்டை பி. நாராயணன்.

சமையலறையில் ...ப்ரிட்ஜா?



''சிறந்த சமையலறை'' இப்படித்தான் இருக்கும்'' என்ற தலைப்பில் சமீபகாலமாகப் பிரசுரிக்கப்பட்டு வரும் கட்டுரைகளைப் படித்தேன். நன்றாக இருக்கின்றன. இருந்தாலும் பொதுவாக தெரிவிக்கப்பட்டுள்ள ஒரு தவறைக் குறிப்பிட விரும்புகிறேன். குளிர் சாதனப் பெட்டியைச் சமையலறையில் வைக்கலாம் என்று எழுதப் பட்டிருக்கிறது. இது ஓர் அபாயகரமான கருத்து.

சமையலறையில் நிகழும் தீ விபத்துக்களில் பெரும்பான்மையானவை இதனுடைய விளைவு என்று ஒரு தீயணைக்கும் காரியாலயத்தைச் சேர்ந்த அதிகாரி என்னிடம் கூறியிருக்கிறார். இப்பொழுது எரிவாயுவை எல்லோரும் உபயோகப்படுத்துகிறார்கள். எரிவாயு கசிந்து அதன் வாசனை வந்தால் உடனே எல்லா மின்சார சம்பந்தப்பட்ட பொருள்களையும் வேலை செய்யாமல் நிறுத்த பொத்தானை ''ஸ்விட்ச் ஆப்'' செய்ய வேண்டும். அப்படிச் செய்யும் பொழுது குளிர் சாதனப் பெட்டியின் அடியில் உள்ள ''கம்ப்ரெஸரில்'' ஒரு பொறி பறக்கும். பரவியுள்ள எரிவாயு அதில் பற்றி தீ பரவி சமையலறையில் உள்ளவர்களுக்குத் தீங்கு விளைவிக்கும். ஆகவே எரிவாயுவை உபயோகிப்பவர்கள் குளிர் சாதனப் பெட்டியைச் சமையலறையில் வைப்பது தவறு.

— ஏ. சேஷன்.


OVER
8 CRORE
SETS SOLD
WORLD-WIDE!
The same German
GRUNDIG technology
is now yours
in
Watch. Listen. Compare.
We know what you'll
choose!
In Colour or B&W.
Meet your nearest
Sinclaire Dealer. He may
have some great news,
for you!
Sinclaire
TV
PRESTIGE PLUS PERFORMANCE



வெள்ளத்தில் நீந்தி



மற்றவர்கள் எத்தனை துன்பத் தீயில் வெந்தாலும் அதிலே குளிர்காயும் சுயநலம் படைத்தவர்களைப் பார்க்கத்தான் செய்கிறோம்.

தமிழ்நாட்டின் பெரும்பகுதி வெள்ளத்தில் மூச்சுத் திணறிக் கொண்டிருந்தபோது, கிடைத்தவரை லாபமெனச் சுருட்டிக்கொண்டிருந்தவர்களை பார்த்தபோது அனுதாபம் கலந்த சிரிப்புதான் வந்தது.

அடையாறு பாலத்தில் வெள்ளமோ கரை புரண்டு ஓடிக் கொண்டிருந்தது. வேடிக்கை பார்க்கத்தான் அந்த மழையிலும், குளிரிலும் எத்தனை பேர்!

"அதோ அதோ ஒரு ஆடு!"

"அந்த மூலையில் பாரு. குடிச மேல் கூரை வருது!"

"இல்லேடா, அது ஓல குடிச இல்ல; ஏதோ பங்க்!"

"பார்க்கலாமா, எவ்வளவு பெட்?"

"அஞ்சு ரூபாய்!"

மிக சுவாரஸ்யமாக ஏழை மக்களின் கண்ணீரின் மேல் இவர்கள் 'பெட்' கட்டிக் கொண்டு இருக்க மற்றொருவர் ஏதோ கவலையாக மேலே வந்து இடித்தார். என்னவென்று திரும்பிப் பார்த்தால், கையில் நீண்ட 'தொரட்டுக் கோல்!' அவருக்கு இந்த உலக பிரக்ஞை [illegible] இல்லை!

வெள்ளத்தில் வருகின்ற மரப் பலகைகள், ஓலைகள், பெட்டிகள் இவற்றின் மீதே கண்! கழிந்து ஓடும் ஆற்றின் வயிற்றிலிருந்து இழுத்து இழுத்துச் சேர்த்துக் கொண்டிருந்



இழந்தவை



தார் அவர்! மூலையில் ஒரு மரவீடு கட்டும் அளவுக்கு பலகைகள் சேர்ந்துவிட்டிருந்தது.

"நந்தனத்துல கலர் டீ.வி.யெல்லாம்போச் சாமே, இந்தப் பக்கம் வருமா?"

கண்களில் ஆவல் மினுமினுக்க கேட்டுக் கொண்டிருந்தார் ஒருத்தர்!

அந்தப் பெண்மணி அழுது கொண்டே பேட்டி கொடுத்தது நினைவுக்கு வந்தது —

"நான் குருவி மாதிரி சிறுகச் சிறுக சேர்த்த தெல்லாம் என் கண் முன்னாலேயே போச்சு! பணம், டீ.வி. ரேடியோ, கிரைண்டர் எல்லாம் இருந்து என்ன பிரயோஜனம்? என்னைக் காப்பாத்த யாராவது வருவாங்களான்னு இன்னொரு மனுஷனைத்தான் நான் தேடி னேன்.

'பணம் உயிரைக் காப்பாத்தாது. மனுஷன் தான் காப்பாத்துவான்'னு அந்த நேரம் ஞானோதயம் வந்தது."


என்றார். இவர்கள்?

நந்தனத்துல நிமிஷத்துக்கு நிமிஷம் தண்ணீர் ஏறிக் கொண்டிருந்தது. கடல் நடுவே படகு போல நின்றிருந்த அந்த நந்தனம் குடியிருப்புக்களின் மாடியில் நின்று நம்மை வேடிக்கைப் பார்க்கும் குடும்பங்களைப் பார்த்தபோது நெஞ்சம் பதைத்தது.

"ஏன் இவர்களை யாரும் காப்பாற்றவில்லையோ?" எனக் கேட்டபோது,

"அங்க படகுலே போனோம். அவங்க வர மாட்டேன்னு சொல்லிட்டாங்க. வீட்டுக்குக் காவலா இருக்காங்களாம்!"

வீடே அடித்துக் கொண்டு போய்விட்



டால்.....? பக்கத்தில் இரண்டு பெண்கள் ரொம்ப சீரியஸாகப் பேசிக் கொண்டிருந்தார்கள்.

"காலையில சேகர் மூலமா டிபன் அனுப்பிட்டேன். நாத்தனார் காப்பிக்குப் பால் கேட்டுச்சு. பால்தான் ரொம்ப டிமாண்ட். எப்படி யாச்சும் வாங்கி அனுப்பணும்!"

என்னவென்று விசாரித்தால், நந்தனம்—கோட்டூர்புரம் இணைப்புப்பாலத்தின் வழியே பாதி தூரம் போய், பிறகு கயிறு மூலமாக வெள்ளத்தின் நடுவில் இருக்கும் வீட்டிற்குப் போகலாமாம். அப்படி நாத்தனாருக்கு டிபன், காப்பி அனுப்புகிறாள் இந்தப் பெண்!

கோட்டூர்புரத்தில் இடுப்புவரை ஓடிய தண்ணீரில் நடுங்கிக் கொண்டு நின்றிருந்தார்கள், போலீஸாரும், வெள்ளத்தில் சிக்கியவர்களைக் காப்பாற்ற வந்திருக்கும் மீனவர்களும். அதில் ஒருவர் சிரித்துக் கொண்டே சொன்னார்,

"எங்க டிரஸ்ஸைப் பாத்துட்டு, அந்தக் குவார்ட்டர்ஸ்ல இருந்த பொம்பளைங்க கேலி பண்ணுங்க. வரமாட்டேன்னுங்க. உங்க உசுர காப்பாத்தத்தான் நாங்க வந்திருக்கிறோம்னு சொல்லி அவங்கள வெளியேத் தறத்துக்குள்ள போதும் போதும்னு ஆயிடிச்சு.....

கொஞ்ச தூரத்தில் சுழித்தோடும் வெள்ளத்தைக் காண்பித்தார். "இதுக்குள்ளார ரெண்டு அம்பாஸிடரும், ஒரு 'பைக்'கும் கிடக்கு!"

அவ்வளவு ஆழமா? நின்று கொண்டிருந்த கால்கள் நடுங்கின.

"கமிஷனர் வந்திருக்காருப்பா.... இத்த விடக்கூடாது.... என்ன கொடுத்தாங்க இவங்க? நா போய்ச் சொல்றேன்...."

இழுத்துக் கட்டிய லுங்கியுடன் துள்ளிய ஒரு மீசைக்காரரை இழுத்து ஓரம் தள்ளினார் ஒரு போலீஸ்காரர். யாரைக் குறை சொல்வது, பாவம்.... அவரவர்கள் சிரமம் அவரவர்களுக்கு....

நான்கு நாட்கள் கழித்துச் சந்தித்த ஒரு சமூக சேவகி பிரலாபித்தார்.....

"எல்லோரும் திரும்பத் திரும்ப மெட்ராஸைப் பத்தித்தான் பேசினாங்க.... ராஜீவ் காந்தி போன வழியாவே பிரஸ்ஸையும், டி.வியையும் போகவிட்டுட்டாங்க.... மகாபலிபுரத்துக்கிட்ட புயல் கடந்துச்சே.... அதப் பத்தி யாரு கேட்டா.....?

அ ங்க எவ்வளவு வெள்ளம், சேதம் தெரியுமா? இப்ப அங்கேருந்துதான் நேரா வரேன், ஐயையோ, அந்தக் கண்றாவிய என்னன்னு சொல்றது?

அவர்பாட்டுக்கு விடாமல் புலம்பிக் கொண்டே இருந்தார்.

அடுத்த செவ்வாய்க்கிழமை —

அடையாறு வழக்கம் போல சிறுசிறு கால்வாய் போல குட்டையாகத் தேங்கி, பிறகு அமைதியாக ஓடிக் கொண்டிருந்தது.

சைதாப்பேட்டை பாலத்துக்கடியில் மீண்டும் வாழ்வின் நம்பிக்கையோடு குடிசைகளை போட்டுக் கொண்டிருந்தார்கள்.

ஒரு பயங்கரச் சொப்பனம் வந்து, கண் விழித்தவுடன் மாயமாக மறைந்துவிட்டது போல வியப்பாக இருக்கிறது. ஆனால் வாழ்வை, வசதியை இழந்தவர்களின் குரல் தீனமாக ஒலித்துக் கொண்டுதான் இருக்கிறது.

மஞ்சுளா ரமேஷ்

புகைப்படங்கள்: யோகா,

அறிஞர்கள் சிந்திப்பார்களா?



அண்மைக் காலங்களில், 'புதிய கல்விக் கொள்கை' என்ற ஒரு தொடர் மிக அதிகமாக அடிபட்டுக் கொண்டிருப்பதைத் தாங்கள் அறிந்திருப்பீர்கள். அறிஞர், சிந்தனையாளர், கல்வியியலில் சம்பந்தப்பட்டோர் என்று பலர் (இவர்களெல்லோரும் ஆண்களே!) தொலைக்காட்சியில் அன்றாடம் தோன்றித் தத்தம் கருத்துக்களைப் பற்றிச் சொல்ல வாய்ப்பளிக்கப்பட்டிருக்கிறது. இவர்கள் அனைவருமே அநேகமாக இரண்டு விஷயங்களைத்தான் திரும்பத் திரும்பப் பேசுகிறார்கள். 1. வறுமை காரணமாகத் தொடர்ந்து படிக்க இயலாத (drop outs) வர்; 2. தொழிற் கல்வி முக்கிய இடம் பெற வேண்டும், என்பது.

இந்த முக்கியமான இரு கூறுகளுக்கப்பால், 21ம் நூற்றாண்டில் புக இருக்கும் நமது இளைய சமுதாயத்தினருக்கு என்ன மாதிரியான மாற்றங்கள் தேவைப்படுகின்றன என்பது பற்றிய விவரங்களை எவரும் குறிப்பிட்டிருக்கவில்லை.

நாம் எந்த மாதிரியான கல்விப் பயிற்சியை அளிக்க வேண்டும். இதுகாறும் அளிக்கப்பட்ட கல்வியில் என்னென்ன குறைகள் இருந்து, இந்நாளைய இளைஞரின் நல்ல மன வளர்ச்சியையும், சமுதாய முன்னேற்றத்தைப் பாதித்திருக்கின்றன என்பதை யாரும் குறிப்பிடவில்லை.

இன்றைய நிலை என்ன?

மிகப் பெரும்பாலோரும், ஒரு கல்லூரிப் பட்டம் பெற்றுவிட்டு, அலுவலக, வங்கி, எழுத்தர் என்ற உதிரிகளாக நிறுவனத்தில் சேர்ந்து, நான்கு இலக்கச் சம்பளம் பெறும் வாழ்க்கை நோக்கையே கொண்டிருக்கின்றனர் என்பதை மறுக்க முடியுமா?

நல்ல வசதியும், செல்வாக்கும் உள்ள பெற்றோர், தம் மக்களைத் தொழிற் கல்வி என்று கட்டிட வேலை, தச்சு வேலை, மற்றும் பட்டறைத் தொழில்களில் தேர்ச்சி பெற விடுவார்களா? தொழிற் பள்ளிகளில் சேர்ப்பார்களா? இல்லை. தொழிலியல் கல்லூரி— அழுக்குப் படாத காகித நகர்த்தல்— தான் இலக்கு.

பெரிய தொழிலதிபர் என்றால், அப்பழுக்கில்லாத உயர் ரக உடை தரித்துக் காரில் வந்து இறங்குபவரின் பிம்பமும், தொழிலாளி என்றால், கையில் கரியும், பிசுக்கும் அழுக்குடையும் அணிந்து எளிய குடியிருப்புகளில் வாழும் மனித உருவமும்தான் நிலையாக்கப்பட்டிருக்கிறது.

எனக்குத் தெரிந்து, சில ஆண்டுகளுக்கு முன்புவரையிலும் (மிக அண்மையில் மாற்றம் இருக்கிறதா என்று கவனிக்கவில்லை) ஆரம்பக் கல்வியிலும் சிறார்களின் பாட நூல்கள், சில வாடிக்கையான பிம்பங்களையே அவர்கள் மனங்களில் உறுதிப்படுத்தியிருந்தன.

குடும்பத்தில் தந்தை என்பவர், சாய்வு நாற்காலியில் அமர்ந்து பத்திரிகை படிப்பார். காய்கறி வாங்கி வருவார். அலுவலகம் செல்வார். சம்பளத்துக்கேற்ற செலவு செய்வார்; கடன் வாங்க மாட்டார்.

தாய், சமையலறையில் வேலை செய்வாள். அக்கா, அம்மாவுக்கு உதவியாக வீடு பெருக்கி எல்லா வேலைகளையும் செய்வாள்.

இத்தகைய பிம்பங்கள், சராசரி, அலுவலகத்தில் வெள்ளைச் சட்டை அணிந்து எழுத்தர் நிலையில் பணியாற்றும் ஒரு குடும்பத்தினரைச் சார்ந்தே வலியுறுத்தப்படுகின்றன.

ஏன்?

இவர் தந்தை; இவர் தச்சு வேலை செய்யும் சிறந்த தொழில் வல்லுநர். இவர் தாய்; இவர் மருத்துவர்.

காலையில் மருத்துவமனைக்குச் செல்லு முன், தந்தை சமையலறையில் தாய்க்கு உதவியாக வேலைகள் செய்கிறார் என்று மாற்றப்படலாகாதா?

இந்த அடிப்படை மாற்றங்களில்லாமல் மனமாற்றம் வானிலிருந்து இழிந்து வருமா?

செய்யும் தொழில்களில் ஏற்றத் தாழ்வு இல்லை என்று 'கலோகம்' சொல்லிக்கொண்டிருந்தால் மட்டும், சாதிகள் இல்லாமலா போகும்?

மன மாற்றமின்றி, தொழிற் கல்வியைப் பற்றி வருங்கால சந்ததியினரின் மனதில் சீர் செய்யப்படுவது சாத்தியமில்லை. மன மாற்றத்துக்கு, தொழில்களைப் பற்றிய மதிப்பு, அடிநிலைக் கல்வியிலேயே சமமாகக் கருதப்பட வேண்டும். சிறாரின் இளம் மனங்களில், வேற்றுமை விதைகள் எந்த நிலையிலும் விழுந்து விடாமல் பாதுகாக்கும் கல்வி இன்றியமையாததாக இருக்கிறது.

அறிவியல் பற்றி,- மிகவும் சிறப்பாகப் பேசப்படுகிறது. உண்மைதான். அறிவியல் சாதனைகள், இந்நாள் மாந்தரைப் பிரமிக்க வைக்கின்றன. மனிதர் காற்றிலேறி விண்ணைச் சாடி, விந்தைகள் புரிவதை, வீட்டுக்குள் திண்டில் சொகுசாக அமர்ந்து, கனிச்சாற்றை ரசித்துக் கொண்டு இன்பமாகக் கண்டு களிக்கிறோம்.

ஆனால், இதே அறிவியல், மனிதத் தத்துவத்தைக் காலில் மிதித்துக் கொண்டு கோர நடம் புரியும் செய்திகளையும் கேட்டுக் கொண்டிருக்கிறோம். அஞ்சிக் கொண்டிருக்கிறோம் என்பதை மறந்து விடுவதற்கில்லை. எதிர்கால நம்பிக்கைகளும் கனவுகளுமாகக் குலுங்கிக் கொண்டு, பயணம் செய்யப் புறப்பட்ட அத்தனை நூற்றுக்கணக்கான உயிர்களையும் கவடு தெரியாமல் கடலுக்குள் அழுத்தி விடச் செய்த கோரம், போர்க்களத்தில் நிகழவில்லை. நாள்தோறும் கேட்கும் செய்திகளில், காணும் நிகழ்ச்சிகளில், எத்தனை இரத்தக் கறைகள்? எத்தனை பயங்கரங்கள்?

21ம் நூற்றாண்டில் புக இருக்கும் நமது சிறாருக்கு, அறிவியலுக்கப்பால், மனிதாபிமான, அன்பும் நம்பிக்கையும் வளரக் கூடிய வகையில், நல்ல பண்புகளுக்கான கல்வியை அளிப்பது மிக அவசியமாக இருக்கிறது.

இந்நாள், நமது இளந்தலைமுறையினரிடையே பொருள் ரீதியாக, எல்லா வகை இன்பங்களையும் பெறுவதற்குரிய சாதனைகளைச் செய்வதுதான் மேன்மை என்ற கருத்து உருவாகியிருக்கிறது.

வாழ்க்கையின் குறிக்கோள், தன் குடும்பம், சமுதாயம், அல்லது நாடு என்ற நோக்கில், சிறிதளவேனும் தனது சக்தியை, செல்வாக்கை•சடாக்க வேண்டும் என்ற தடத்தில் உருவாகவில்லை.

ஒருவரின் அன்றாட வாழ்வுக்கு இன்றியமையாத சிறிதளவு உடல் உழைப்புக்கும் கூட (வசதியுள்ள—இல்லாத)ப் பெற்றோர் சிறுவர் சிறுமியரைப் பழக்கப்படுத்தாமல் இருப்பதை உயர்வாக நினைக்கின்றனர்.

உடலுழைப்பு, அறிவியல் சாதனங்கள் பெருகியிராத நாட்களை விட, இந்நாளில் மிகவும் கீழாக மதிக்கப்படுகிறது. தேசிய மாணவர் திட்டம் போன்ற அமைப்புக்கள், உடலுழைப்பை வற்புறுத்த அப்போதைக்குச் சில சந்தர்ப்பங்களைக் கொடுத்தாலும், கல்லூரிக் காலத்தில் போடும் பூச்சு வேஷ நாடகமாகவே, இளைஞர் மனதில் எந்த ஆக்க பூர்வமான பாதிப்பையும் விளைவிக்காமல் முடிந்து விடுகிறது.

இறுதியாக, நான் முக்கியமாகக் கருதும் விஷயத்துக்கு வருகிறேன்.

பெண்கள் முழுதும் இல்லத்து அரசிகளாகவே சமையல், வீடு, குழந்தைகள் என்று தங்கிவிடும் நிலை இந்நாள் வெகுவாக மாறிவிட்டது. குடும்பத்தில் ஆண்—பெண் இருபாலரும் பொருளீட்டினாலே வசதியாக வாழ முடியும் என்ற மாற்றத்தை, பழைய மனப்பான்மையுடைய குடும்பத்தாரும் கூட ஏற்றுக் கொண்டாக வேண்டிய கட்டாயம் ஏற்பட்டிருக்கிறது என்றால் மிகையில்லை.

இதன் காரணமாக, பெரும்பான்மையான பெண்கள் இரட்டைச் சுமை சுமக்கின்றனர். இன்று கல்வி கற்றுப் பல துறைகளிலும் அடி வைத்து வெளி வேலைப் பொறுப்பேற்றிருக்கும் லட்சக்கணக்கான பெண்களும், புதிய தலைமுறையினர்—ஆண்—இருகாராருடனும் இணைந்து போக இயலாத நிலையில் குடும்பம் என்ற ஒத்திசையில் பிதுங்கும் விரிசல்களில் அழுத்திக் கொண்டோ, குமுறிக் கொண்டோ வாழ்க்கை நடத்த வேண்டி இருக்கிறது. கல்வியறிவும் முன்னேற்றமும் இல்லாத நிலையில் பெண்ணுக்கு அளிக்கப்பட்டிருந்த கௌரவம் இந்நாளில் இல்லை.

சாம்பார் பண்ணி இறக்கியதும் அதில் சிறிது தேங்காய் எண்ணெய் (பச்சையாக)த் தெளித்து மசாலாப் பொடியையும் தூவினால் அதன் ருசியும் மணமும் அலாதியாக இருக்கும்.

— கௌசி.


இரவு மருதாணி வைத்துக் கொண்டபின் கூடுகளை விளக்காமல் சிறிது நீர் தெளித்துத் தலையில் தேய்த்து ஊற வைத்துக் குளிக்கவும். கண்ணுக்கு மிகவும் குளிர்ச்சி, கூந்தலும் செம்பட்டை நீங்கிக் கருகருவென இருக்கும். அனுபவத்தில் கண்ட பலன்.

— வேதநாயகி.



குழந்தைகளுக்கான
அமுல்ஸ்ப்ரே
பாலுணவு இப்போது நருவிசான புதிய டிசைனிலே வருகிறது

ஸ்ப்ரே-ட்ரை செய்முறைப்படி தயாரிக்கப்பட்டு, வைட்டமின்களும் இரும்புச் சத்தும் சேர்த்து வளமூட்டப்பட்ட அமுல்ஸ்ப்ரே. இந்தியாவில் எங்குமுள்ள தாய்மார்களால் மிகவும் விரும்பப்படும் குழந்தைப் பாலுணவு—உங்கள் குழந்தைக்கு அமுல்ஸ்ப்ரே துவங்கு முன்பாக உங்கள் டாக்டரிடமோ அல்லது ஆரோக்கிய நலம் காக்கும் ஊழியரிடமோ ஆலோசனை கேட்டுப் பெறுங்கள். மறவாதீர்கள், உங்கள் பாப்பாவின் உடல் நலம் கெடாதிருக்க, டின் மீதுள்ள வழிமுறைக் குறிப்புகளைக் கவனமாகப் பின்பற்றுங்கள்.



அமுல்ஸ்ப்ரே

குழந்தைக்குத் தாய்ப்பால் தான் சிறந்தது.

அரசாங்க விதிமுறைகளின்படி, டின் மீதிருந்து பாப்பாவின் படம் அகற்றப்பட்டு, வழிமுறைக் குறிப்புகளில் இதர மாற்றங்களும் செய்யப்பட்டுள்ளன.

விற்பனைக்கு விநியோகம்:
குஜராத் கோ-ஆபரேடிவ் மில்க் மார்க்கெட்டிங் பெடரேஷன் லிமிடெட், தபால் பெட்டி எண் 13,
ஆனந்த் 388 001, குஜராத் மாநிலம்.

OPERATION FLOOD

ASP/AS-6F/85 Tam

• மறந்தும் ஆண் துடைப்பமோ, துடை துணியோ தொடலாகாது; மனைவி, குழந்தைகளின் உடைகளைத் துவைத்து உலர்த்துவது கேலிச் சித்திரத்திற்குரிய செயல் என்பன போன்ற மனப்பான்மைகள் முற்றிலுமாக அகற்றப்பட வேண்டும்.

வீட்டுப் பொறுப்பு என்ற மனையியல் அறிவும் பயிற்சியும், பள்ளியில் இருபாலருக்கும் ஒரு கட்டாய பாடமாக இருந்தால் நலம்.

ஆணும் பெண்ணும் சம உரிமையும் சக உணர்வுமாகக் குடும்பப் பொருளாதார உற்பத்தியிலும் உழைப்பிலும் ஒருவருக்கொருவர் உதவும் மனப்பாங்குடன் பங்கேற்று, முன்னேற்றமும், சமுதாய வளர்ச்சியும் காணக் கூடிய கல்வி முறைச் சீர்திருத்தம் பற்றி நமது 'அறிஞர்கள்' சிந்திப்பார்களா?

ராஜம் கிருஷ்ணன்.

புக்ஷெல்ஃப்

மங்கையின் டைரி

ஒவ்வொரு பெண்ணும் அவசியம் படித்துத் தெரிந்து கொள்ள வேண்டிய விஷயங்கள் உள்ளன. விஞ்ஞான, அந்தரங்க, மனோதத்துவ ரீதியில் பல கட்டுரைகளை எழுதியுள்ளார் ஆசிரியர், எஸ். லட்சுமிசுப்பிரமணியம். விலை. 9/–.

ஸ்ரீமாதா

அம்பிகையின் வரலாற்றைப் பக்தி மயமான தொடராக மங்கையர் மலரில் எழுதினார் ரா. கணபதி. 'லலிதோபாக்யான'த்தைச் சுருக்கமாக, கதையாகத் தந்திருக்கிறார். விலை. ரூ. 11/–.

மேற்கண்ட இரண்டு புத்தகங்களின் வெளியீட்டாளர்கள்: கலைஞன் பதிப்பகம், 10, ஹென்ஸ்மென் ரோடு, தி. நகர், சென்னை – 17.

குடும்பப் பெண்களுக்கு ஆயிரம் குறிப்புக்கள்

சமையல், உடல்நலம், குழந்தை எனப் பல்வேறு துறைகளில் பெண்களுக்காக உபயோகமான 1000 குறிப்புகளைத் தந்திருக்கிறார்கள். தௌரவர்களின் நூறு பெயர்களின் பட்டியல் போன்ற சுவையான தொகுப்பாகச் செய்திருக்கிறார் ஆசிரியர் சரோஜினி சங்கர். விலை. ரூ. 11.50/–.

சமையல் கலை

330 சமையல் குறிப்புகள் அடங்கிய புத்தகம் புது மணப்பெண்ணிற்குப் பரிசாகத் தரலாம். அன்றாட, விசேஷ கால ,சமையல் குறிப்புக்கள் அத்தனையும் தந்திருக்கிறார் ஆசிரியர் சீதாலக்ஷ்மி.
விலை. ரூ. 5.00/–.

சகல ஐஸ்வர்யங்களும் தரும் அஷ்டலக்ஷ்மி

அஷ்ட லக்ஷ்மிகளைப் பற்றிய புராணக் கதை, வணங்குவதால் வரும் சிறப்புப் போன்றவற்றைத் தந்திருக்கிறார் ஆசிரியர் சூடாமணி ஸ்ரீனிவாசாச்சாரி.
விலை. ரூ. 2.75/–.

மேற்கண்ட மூன்று புத்தகங்களின் பதிப்பாளர் பாரதி பதிப்பகம், 108, உஸ்மான் சாலை, சென்னை – 17

கீத கோவிந்தம்

ஜெயதேவரின் அஷ்டபதியைக் கவிதையாக, அழகுத் தமிழில் தந்திருக்கிறார் ஆசிரியர் அ. ச. நடராஜன். படிக்க, பக்திப் பரவசப்படச் சுவையான நூல். விலை. ரூ. 9.50/–.

ஸ்ரீ காந்திமதி நூலகம், இருநகர், ஜாபர்கான் பேட்டை, சென்னை – 95.

பெண்கள் அழகாக தோற்றமளிப்பது எப்படி?

தலையிலிருந்து கால் வரையிலும், சருமம், புடவை கட்டுதல், பல்வேறு அமைப்புள்ள பெண்கள் எனப் பல்வேறு வகையில் அழகுக் குறிப்புக்களைத் தருகிறார் அருணா முகர்ஜி. விலை. ரூ: 5/–.

அநுராகம், 34, பாண்டிபஜார், சென்னை – 17.

ஸ்தோத்திரமஞ்சரி

பல்வேறு தெய்வங்களுக்கான அஷ்டோத்திரம், ஸ்தோத்திரம், நாமாவளி எனத் தொடுக்கப்பட்டுள்ளது. அன்றாடம் ஸ்லோகம் சொல்லும் பெண்களுக்கு இருக்கும்.
கைக்கு உதவியாக ஒரே புத்தகமாக இருக்கும்.
விலை. ரூ. 9/–.

அன்னை பதிப்பகம், 38, இரயில்நகர், கீழ அம்பிகாபுரம், திருச்சி – 620 004.

ஸ்ரீராமகிருஷ்ணர் வாழ்க்கையும் உபதேசங்களும்

ஸ்ரீ ராமகிருஷ்ணரின் வாழ்க்கைவரலாற்றைக்கூறுவதுடன், பல்வேறு துறைகளைப் பற்றிய அவருடைய உபதேசங்களையும் தந்திருக்கிறார். விலை ரூ. 2/–.

ஸ்ரீசாரதாதேவி வாழ்க்கையும் உபதேசங்களும்

அன்னை சாரதா தேவி பிறப்பு முதல் மறைவு கூறி, அவருடைய உபதேசங்களையும் தொகுத்துள்ளார். இரண்டு நூல்களின் ஆங்கில மூலம் சுவாமி தபஸ்யானந்தர். தமிழில் மங்கையர்க்கரசி. விலை. ரூ. 2/–.

இரண்டு நூல்களின் வெளியீட்டாளர்கள்: ஸ்ரீ ராமகிருஷ்ண மேடம், 16, ராமகிருஷ்ண மடம் ரோடு, மயிலாப்பூர், சென்னை – 4.



இன்னொரு

ரஜனி சந்தானம்.

மூன்றாம் மனிதரின் முன்னால் தன் அந்தரங்கங்களை வெளியிடுவது அநாகரீகம் என்பது மறந்தேவிட்டது அவர்களுக்கு.

சீதாவின் கண்கள் சிவந்து, கண்ணீர் பெருக, மூக்கின் நுனி செக்கச் செவேலென்றாகிவிட்டது. கைகால்களில் ஆத்திர மிகுதியால் ஒரு படபடப்பு.

சீதாவை அந்த கோலத்தில் பார்த்ததே இல்லை சபேசன்.

ஆறடி உயரத்தையும், கம்பீரமான பருமனையும் அந்த நாற்காலிக்குள் திணித்தபடி, தலை குனிந்து அமர்ந்திருந்தான் சங்கர்.

தலைதான் குனிந்திருந்ததே தவிர, அவனும் அதிகமான உணர்ச்சி வசப்பட்டிருந்தான். காதுகளின் நுனி சிவப்பேறி இருந்தது. நாற்காலியை பற்றி இருந்த அவன் கைகளின் அழுத்தத்தில் சின்ன அதிர்வு தெரிந்தது.

நன்னா யோசிம்மா சீதா.... கூட்டை கட்ட நாள் பிடிக்கும். கலைக்க போட நிமிஷம் நாழியாகாது....

"இப்பவா மாமா யோசிக்க சொல்றீங்க. இரண்டு, மூன்று மாசமாவே யோசிச்சுட்டேன். என்னால இனிமே முடியாது. இவர் கூட சேர்ந்து வாழவே முடியாது...."

சட்டென்று தலை நிமிர்ந்தான் சங்கர். கண்கள் அகன்று, கருவிழி நடு மையத்தில் குத்திட்டு நின்றது.

"அப்பா.... என்னால மட்டும் முடியுமா இவ கூட வாழ..... ராட்சஸி....."

"வார்த்தையை அளந்து பேசுங்க."

"உனக்கென்னடி பெரிய மரியாதை.... அறைஞ்சேன்னா தெரியும்."

"பார்த்தீங்களா மாமா.... நீங்க எதிரில இருக்கிறதாலதான் வாயோட நிறுத்திண்டுட்டார். இல்லைன்னா இத்தன்னாழி ஒரு நாயாட்டமான்னா என்னை குதறி அடிச்சிருப்பார்..."

"ஏய்.... என்னையா நாய்ன்றே.... சந்தேக பிசாசே.... எப்பப்பாரு நான் எங்கே போறேன். எவ கூட பேசறேன்றதை நாயாட்டம் மோப்பம் பிடிக்கறவ நீ. நான் வீட்டுக்கு வந்தாவிட்டு கூட ஸ்கூட்டரின் பின் சீட்டைத் தொட்டுப் பார்ப்பே. சூடு இருக்கா, யாராவது உக்கார்ந்தாளான்னு.... நானில்லாத போது என் சட்டை பாக்கெட்ல கையை விட்டு குடைவே.... தூ..... இந்த ஐந்து வருஷ வாழ்க்கைல நான் ஒரு நாளாவது நிம்மதியா இருந்திருப்பேனா....."

ஆஹா.... நான் மட்டும் அப்படியே சந்தோஷ சாகரத்திலே மூழ்கிண்டு இருக்கேன். என் வயசு பெண்களெல்லாம் நாள் கிழமைன்னா புருஷனோட சந்தோஷமா கொண்டாடறச்சே, இவர் மட்டும் பெங்களூர், டெல்லின்னு எவ கூடவாவது சுத்திண்டு இருப்பார்...."

"நீ கண்ணால பார்த்தியா?"

"நான் நேர பார்த்திருந்தா, வெறுமே விட்டு இருப்பேனா.... சுட்டுத் தள்ளி இருப்பேனே இரண்டு பேரையும்...."

"எவனோ பொறாமைப் பிடிச்சவன் எதையோ சொன்னா நம்பிடறதா? அடிப்படை நம்பிக்கை வேணும், புருஷன் பெண்டாட்டிக்குள்ள...."

"எப்படி வரும் நம்பிக்கை. எங்கூட எப்பவாவது ஆசையா, அன்பா பேசி இருந்தாத்தானே...."

"அதுக்கு நீதான் காரணம். எப்பப்பாரு மூஞ்சியை தூக்கி வெச்சுண்டு, சின்ன விஷயத்தையெல்லாம் பெரிசு பண்ணிண்டு.... வீடா இது.... நரகம்னா...."

"பார்த்துக்கோங்க மாமா. இது நரகமாம். அதான் சொர்க்கத்தை தேடிண்டு போறாராம். இந்த இரண்டு மூணு மாசத்தில எத்தனை நாள் என்னை வெளியில ஆசையா கூட்டிண்டு போயிருக்கார். என்ன சுகம் இருக்கு எனக்கு. காலைலேந்து சாயங்காலம் வரை ஆபீஸில் உழைச்சுட்டு வீட்டுக்கு வந்தா, 'ஓ'னு ஒரு தனிமை. எத்தனை நாழி நாலு சுவத்தையே பார்த்துண்டு இருப்பேன். எல்லோருக்கும் ஐந்து மணிக்கு ஆபீஸ் விட்டா இவருக்கு மட்டும் எட்டு ஒன்பது மணின்னு ஆகும். ஆபீஸ்லயா இருப்பார்னு நினைக்கறீங்க. எவ கூடவாவது சுத்திட்டு வருவார். போன மாசம் என் ஃப்ரெண்ட் இவரை மவுண்ட் ரோட்ல பார்த்தாளாம். ஸ்கூட்டர் பின்னால ஒருத்தி இருந்தாளாம்...."

"அப்பா, அவ எங்க ஆபீஸ் ரிசப்ஷனிஸ்ட். கல்யாணம் ஆனவ. ஸ்கூல்ல படிக்கற அவ குழந்தை திடீர்னு மயக்கமா விழுந்துடுத்துன்னு ஃபோன் வந்தது. கூட்டிண்டு போனேன். தப்பா? அந்த நிலைல வேற ஒரு ஆண் இருந்தாலும் கூட்டிண்டுதான் போயிருப்பேன்.

"மாமா, இவர் ஆபீஸ்ல இவர் ஒருத்தர்தான் ஆம்பிளை. இவர்கிட்ட மட்டும்தான் ஸ்கூட்டர் இருக்கோ.... அதேன் பெண்களுக்கு உதவணும்னா மட்டும் உடனே சிலிர்த்துண்டு எழுந்துடறார்."

"மூடு வாயை.... அந்த மெஸேஜை ரிசீவ் பண்ணதே நான்தான். அதனாலதான் ஹெல்ப் பண்றேன்னு சொன்னேன்."

பக்கம்

"ஓ.... பத்து நாளுக்கு முன்னாடி ஒரு சனிக்கிழமை. பக்கத்து வீட்டு ருக்கு வந்து சொல்லு, மாமா, 'உங்க வீட்டுக்காரரை 'சபையர்ல' பார்த்தேனென்னு. அது மட்டுமா, பக்கத்துல ஒரு பொண்ணு இளிச்சுண்டு இருந்தாளே, யாரவன்னு எங்கிட்டையே கேக்கறு மாமா. அவளும் ஆபீஸ்ல வேலை பண்ற கல்யாணமான பொண்ணோ....."

"அப்பா, இவ ரொம்ப பேசறு. அந்த சாட்டர்டே, இரண்டு டிக்கெட் பிக்சர்க்கு புக் பண்ணினேன். இவளை எத்தனை நாழி கூப்பிட்டாலும் மூஞ்சியைத் தூக்கி வெச்சுண்டு வர முடியாதுன்னு. வெறும கெஞ்ச நானென்ன இளிச்சவாயனு.... தியேட்டர்ல என் பிரெண்ட் பிரகாஷ் அவனோட பேமலியோட வந்திருந்தான். அவனோட சிஸ்டர்—இன்—லா திடீர்னு ஊர்லேர்ந்து வந்துட்டா. அவளுக்கும் டிக்கெட் கிடைக்குமான்னு 'டிரை' பண்ணிண்டிருந்தான். இவளுக்காக வாங்கின டிக்கெட் இருந்தது. அதை கொடுத்தேன். இவளையே நான் பார்த்துண்டு இருக்கணும். மத்தவங்க கூட பேசக்கூட கூடாதுன்னு படுதா போட்டுண்டுதான் போக



ணும். நம்ம புருஷன் ஒருநாளும் நமக்குத் துரோகம் பண்ண மாட்டான்ற நம்பிக்கை இருக்கணும் ஒரு பெண்ணுக்கு.''

அதெல்லாம் நல்ல புருஷனா அமைஞ்சிருந்தா இருக்கும். உங்களைப் போல லோல் படற புருஷன் அமைஞ்சா பைத்யம்தான் பிடிக்கும். வெளியில் தலைகாட்ட முடியலே. எல்லாரும் என்னை ஐயோ பாவம், ஏமாந்தாங் கொள்ளின்ற மாதிரி பார்க்கறா.''

''நீயா இமாஜின் பண்ணிக்காதே.''

''சரி, நான்தான் ராட்சஸி, கண்டதை இமாஜின் பண்ணிக்கறேன். நீங்க உத்தம புருஷன். ஏக பத்தினி விரதன். இத்தனை நல்ல புருஷனோட வாழ எனக்குத் தகுதி கிடையாது. சரியா.... நான் ஒதுங்கிடறேன்.''

''வாய்ல சொல்லாதே.... ஒழிஞ்சு போ.''

விருட்டென்று மாடிக்குப் போகக் கிளம்பினான் சங்கர்.

சபேசனின் அருகில் அமர்ந்து குலுங்கி அழுதாள் சீதா.

இத பாரும்மா சீதா. டேய் சங்கர் வாடா இங்க. எம் பேச்சை கொஞ்சம் கேளுங்கோ. ரெண்டு பேர் மேலயும் தப்பு இருக்கு. சீதா உன்னை அத்தனை கண்காணிக்கறான்னா என்னடா அர்த்தம். உன் மேல அத்தனை ஆசை வெச்சிருக்கான்னு அர்த்தம். கொஞ்சம் பொஸஸிவ்வா இருக்கா. இதமா



பேசினா புரிஞ்சுப்பா. அந்தப் பொறுமை இல்லையா உனக்கு? நீயும்தான் சரி. நடந்ததை சரியா அவகிட்ட சொல்றதுதானே... வீட்ல நமக்குன்னு ஒருத்தி காத்துண்டு இருப்பாளேங்கற எண்ணம் இல்லாம நடந்துக்கலாமா. அவகிட்ட பொறுமையா இரண்டு வார்த்தை பேசினா தேஞ்சாப் போயிடுவே."

"எங்க பேச விட்டா. எப்பப்பாரு உர்ருனு மூஞ்சியைத் தூக்கி வெச்சுண்டு...."

கீதா.... நீ படிச்சவ. உத்யோகத்தில இருக்கே. இத்தனைச் சந்தேகப்படலாமா? இத்தனை பொஸஸிவ்னஸ் இருக்கலாமா உனக்கு?

"என்னை என்ன பண்ணச் சொல்றீங்க. இவர் ஊர் சுத்திட்டு வர்றதை எல்லோரும் எங்கிட்ட வந்து கதையாச் சொல்றச்சே கேட்டுண்டு. வாயே திறக்காம இருக்கணும்றீங்களா? இல்லே ஆரத்தி கரைச்சு அவரை வழி அனுப்பணும்றீங்களா."

சிவ, சிவா.... உங்க ரெண்டு பேருக்குமே எம் பேச்சு ஏற்காது. சரி இப்போ. நீங்க பிரிஞ்சு போயிடணும்னு ஆசைப்படறீங்க. அப்படித்தானே....."

"ஆமா" சேர்ந்தே பேசினார்கள்.

"நல்ல வேளை, உங்களுக்கு இன்னும் குழந்தை இல்லே. இருந்திருந்தா நடுவில ஆட்டுண்டு அது திண்டாடி இருக்கும். உங்க இஷ்டப்படியே பிரிஞ்சு போங்க. ஆனா ஒரு கண்டிஷன். இன்னிக்கு ஒரே ஒரு நாள் மட்டும் இரண்டு பேரும் தனியா உட்கார்ந்துண்டு. சாந்தமா நீ அவன்கிட்ட பார்த்த ப்ளஸ் பாயிண்டுகளையும் அவன் உன்கிட்ட பார்த்த ப்ளஸ் பாயிண்டுகளையும் யோசிச்சுப் பாருங்க. கார்த்தால எங்கிட்ட சொல்லிட்டுக் கிளம்பிடுங்க. சரியா. சின்சியரா யோசிங்க."

அறைக்குள் சென்று கதவை மூடிக் கொண்டாள் கீதா.

"ப்ளஸ் பாயிண்டாம். இவருக்கென்ன இருக்கு ப்ளஸ் பாயிண்ட். யோசித்தாள். நீண்ட நேரம் யோசித்தாள். முதலிலிருந்து திருமணத்திற்கு முன்பிருந்து யோசித்தாள்.

பளிச்சென்று வெள்ளைப் பற்கள் தெரிய அவள் தந்தையிடம் அன்று, 'உங்க பெண் கீதாவும், நானும் ஒருத்தரை ஒருத்தர் விரும்பறோம். எனக்கு அம்மா இல்லே. அப்பா மட்டும்தான். எனக்கு எதுவும் நீங்க செய்ய வேண்டாம். உங்களுக்கு இஷ்டம்னா....."

கொஞ்சம்கூட ஒளிவு மறைவில்லாமல் அவன் கேட்டது. காசு வாங்கிக் கொள்ளாமல் கோவிலில் எளிமையாய் திருமணம் செய்து கொண்டது. ஹனிமூன் கோவா அழைத்துப் போனது. அவனுக்கென்று. அவள் நினைத்ததையே அவனும் நினைந்து வாங்கித் தந்தது. இஷ்டமானா வேலைக்கு அப்ளை பண்ணு. இல்லாட்டி வேண்டாம். இதெல்லாம் உன் விஷயம்னு பூர்ண சுதந்திரம் கொடுத்தது. அவன் தங்கை ராதா அவர்கள் வீட்டிற்கு வந்திருந்தபோது, தன் தங்கை போல் அவளிடம் பழகியது.

"ம்.... சங்கர், நீங்க இத்தனை நல்லவரா? பின்ன ஏன் இப்படி மாறினீங்க?"

இட்லி மாவு தயாரித்துப் பாத்திரத்தில் வைக்கும்போது, பாத்திரத்தின் வாய்ப்பாகத்தை ஒரு கெட்டியான துணியால் மூடி நன்றாகக் கட்டி வைக்கவும். பிறகு மறுநாள் காலையில் இட்லி தயாரிக்கும்போது இப்பாத்திரத்தைத் திறந்து மாவைக் கிளறாமல் அப்படியே கரண்டியில் எடுத்து இட்லித் தட்டில் ஊற்றி இட்லி செய்யுங்கள். இட்லியின் அதி மிருதுத் தன்மையை உணர்ந்து அசந்து விடுவீர்கள்.

— ராஜி.

கண்கள் லேசாய் கலங்க, மனத்தின் ஒரு மூலை இளக ஆரம்பிக்கவே, விம்மல் வெடித்து வந்தது.

சங்கரும் யோசித்தான்.

'சட் முட்டாள் நான். எம்மேல எத்தனை உசிரையே வெச்சு இருக்கா. ரிசப்ஷனிஸ்ட் பையன் மயக்கமான விஷயத்தை இன்னிக்கு அப்பா எதிரிலதானே சொன்னேன். அன்னிக்கே சொல்லி இருந்தா, அவ மனசு தவிக்கறது தெரிஞ்சும் வீணா ஒரு குழப்பத்துக்கு சான்ஸ் குடுத்துட்டேன். வேணும்னே அவ குமும்பட்டும் தவிக்கட்டும்னு பேசாம இருந்தேன். ப்ரகாஷ் சிஸ்டர் இன்லா வந்திருந்ததையும் சொல்லி இருக்கலாம். அவ குறுக்கு கேள்வி கேக்கச்சே பேசாம ஏன் இருந்தேன். இதென்ன வக்கிர புத்தி? பாவம் ஆபீஸுக்கும் போயிட்டு 'வீட்டையும் மேனேஜ் பண்ணிண்டு. எல்லாத்துக்கும் மேலாய் அப்பாகிட்ட எத்தனைப் பாசமா இருக்கா. குழப்பத்துக்கெல்லாம் காரணம் நான்தான். என் 'ஈகோ'தான். என்னை குழப்ப அடிச்சது. என்னை ஒருத்தர் கேள்வி கேக்கறதான்ற ஆத்திரம். ஜலதோஷம்னா கூட ஐந்து நிமிஷத்துக்கு ஒருமுறை நெத்தியத் தொட்டுப் பார்க்கற அன்பைதான் எப்படி மறந்தேன்? ரொம்ப தான் இம்சிச்சுட்டேன். அவ நிஜமாகவே என்னை விட்டுப் போயிட்டா என்னால தாங்க முடியுமா? நோ. நானே போய் அவகிட்ட மன்னிப்பு கேக்கறேன். புருஷன் பெண்டாட்டிக்குள்ள என்ன உசத்தி தாழ்த்தி வேண்டி இருக்கு."

"நானே போய் அவர்கிட்ட மன்னிப்பு கேக்கறேன்."

கதவைத் திறந்து கொண்டு வெளியே வந்தாள் கீதா.

உள்ளம் நெகிழ ஒருவரை ஒருவர் பார்த்துக்கொண்டனர். அவனுடைய கைகளுக்குள் சிறைபட்டதும் முதல் முதலாய் இருவர் வாயிலிருந்தும் வெளியே வந்த வார்த்தை —

"ஸாரி, டார்லிங்......"

கீழிருந்து பார்த்துக் கொண்டிருந்தார் சபேசன். காலம் காலமாய் நடப்பதுதான். சரியான பாதையில் யோசிக்க தெரிந்துவிட்டால் பிரச்னைகளை சமாளிக்க முடியுமே. கண்டவை அனைத்தும் உணர்ச்சிகளின் தொடர்ச்சிகள்தான். அவற்றை புரிந்து கொண்டால் உறவுகளில் மலர்ச்சி தோன்றுமல்லவா?

சப்கோ தன்னேவாத்

சோனியா காந்தியைப் பற்றி வர்ணிப்பதைக் கேட்க வேண்டும். முன்போல் முடுக்காக இல்லை. இப்பொழுது ஒரு நாளைக்கு ஓரிரு மணிநேரம் விசிட்டர்களைச் சந்திக்க ஒப்புக் கொண்டுள்ளார். புகைப்படங்கள் எடுப்பதை தடுக்கும் சோனியா காந்தி, தற்போது தினமும் டெலிவிஷனில் தோன்றுகிறார். மழலை போன்ற அந்நிய நாட்டினர் பேசும் ஹிந்தி போன்று சமீபகாலமாக சோனியாவின் உச்சரிப்பு இல்லை. காரணம் பிரபல ஹிந்தி ஆசிரியர் ரத்னாகர் பாண்டே வாரத்தில் மூன்று நாட்கள் 5 ரேஸ்கோர்ஸ் ரோடு, பிரதமரின் இல்லம் வந்து ஹிந்தி உச்சரிப்பு, எழுத்து இரண்டையும் கற்றுத் தருகிறார்.

தலைநகர் அரசியல்வாதிகளிடையே ரத்னாகர் பாண்டேயை அறியாதவர்கள் இல்லை. வாரணாசி பண்டிதர் சுதாகர் பாண்டே, தற்போதைய ராஜ்யசபை உறுப்பினர் ம.பொ.சி. கி. வா. ஜ. மற்றும் சௌந்திரா கைலாசம் போன்றவர்கள் எப்படி தமிழ் இலக்கியங்களில் காவியங்களில் 'பாண்டித்யம்' உள்ளவர்களோ, அதே போன்று ஹிந்தியில் சுதாகர் பாண்டே. இவரது தம்பி அண்ணனை "ஓவர் டேக்" செய்யும் அளவுக்குப் படித்தவர். அந்தமச்சரைத்தேடிப்பிடித்துசோனியா காந்திக்கு ஹிந்தி சொல்லித் தர ராஜீவ் காந்தி சம்மதப்பட்டார். இந்த ஏற்பாட்டில் ஏதோ விஷயம் இருக்கிறது. சோனியா காந்தி அரசியலில் நுழைவாரா? நாடாளுமன்ற சீட்டிற்கு 'நாமிநேஷன்' போடுவாரா? பொறுத்துப் பார்க்க வேண்டிய விஷயம்!

லைன்ஸ் கிளப், ரெட் கிராஸ் போன்ற சமூக அமைப்புகள் வருடாந்திரக் கூட்டங்களில் சோனியாவை அழைக்கும் 'மேனியா' வந்துவிட்டது. செப்டம்பரில் மட்டும் டில்லியில் இரண்டு சமூக விழாக்களில் பங்கேற்றார், பிரதமரின் மனைவி. ஐந்தாறு வார்த்தைகளை ஆங்கிலத்தில் பேசி முடிவில், 'சப்கோ தன்னேவாத்' என்றார். தனக்கு வரும் முக்கியமான கடிதங்களுக்குப் பதில் போடும் பழக்கத்தை தவறாது செய்கிறார். 'மஸ்கா' (Cajoling) அடிப்பதை எதிர்ப்பவர் என்பதற்கு அடையாளம் ஒரு சில நாடாளுமன்ற உறுப்பினர்கள் தங்களதுமாநில எம்.எல்.ஏ.க்கள் பெயரில் வண்ணக் கலர் பிட் நோட்டீஸ் சோனியா காந்தி அரசியலில் கட்சிக்குத் தலைமை வகிக்க வேண்டும். ராஜீவ் காந்தி இதை அனுமதிக்க வேண்டும், என்ற ஹிந்தி பிட் நோட்டீஸ் அடித்தவரை கண்டித்தார் சோனியா காந்தி.

இவரது அன்றாட வாழ்க்கை குறிப்புகளைக் கண்டறிவது கடினம். எனினும் தனது குழந்தைகள் மீது அதிக அக்கறை கொண்டிருப்பவர். இந்தியாவிலே எங்கு சுற்றுப் பிரயாணம்செய்தாலும்டில்லியுடன் 'ஹாட்—லைனில்' ஒரு மணிக்கு ஒரு தடவை விசாரித்துப் பேசுவார். 'ராகுல், ஹோம் ஒர்க்' செய்தாயா என்று அன்புடன் அதட்டுவார்.

வெளிநாடுகளுக்குச்செல்லும்முன்பிரதமரின் சுற்றுப் பிரயாண நிகழ்ச்சிக் குறிப்புகளை சோனியா காந்தி அறிவதில் ஆர்வம் காட்டுவார். 'அட்லீஸ்ட் ஒன் ஹவர்' இந்த இடத்தில் இருக்க வேண்டும் என்பதை வி. ஜார்ஜிடம் விளக்குவார். ராஜீவ் காந்தியின் செயலாளராக இருந்தாலும் வி. ஜார்ஜ் தான் அரசாங்கத்திற்கும், அதிகாரிகளுக்கும் சோனியாவிற்குமிடையே 'தொடர்பு மனிதர்.'

பிரதமர் ராஜீவ்காந்திநூதனமாகடிரைபல் ஏரியாக்களுக்கு செல்லும் ஐடியா மேடம் சோனியாவினுடையதுதான் என்று பல சீனியர் அதிகாரிகளின் கணிப்பு. 'டிரைபல் சோனியா' என்ற புனைப் பெயர் கிடைத்துவிடும் போலிருக்கிறது. இதுவரை ஐந்து



மாநிலங்களில் டிரைபல் ஏரியாவிற்குச் சென்றுள்ளார்கள். பிரதமர் தம்பதி தங்களது கிராமம் வந்து சென்ற பிறகு 'செல்வம் பொங்குகிறது' 'லட்சுமிஜி ஆகயா' என்று ராஜஸ்தான் மாநில கிராமத்தில் ஒரு வயதான பெண்மணி கூறியதை இந்த அதிகாரிகள் கேட்டனர். சோனியா அதை நினைவில் வைத்துக் கொண்டு ஒரு வாரம் பிறகு பிரதமரின் கூடுதல் செய்தி ஆலோசகர் மணி சங்கர் அய்யர் அவர்களிடம் அந்தக் குறிப்பிட்ட கிராமத்திற்கு மேற்கொண்டு செய்த வசதிகளைப் பற்றிய அறிக்கை ஒன்று வாங்கிடவும் என்று சோனியா காந்தி கூறினார். 'டிரைபல் ஸ்பெஷலிஸ்ட்டாக' திடீரென்று மாறிவிட்டாரே சோனியா காந்தி என்று டிரைபல் விசிட்களை ஒருங்கிணைக்கும் மணி சங்கர் அய்யர் பிரமித்துப் போவதுமின்றி, தோள்களை உயர்த்தி, உதடுகளைப் பெரிய தாக்கி 'டைனமிக் லேடி' என்று இந்திரா காந்தியின் மருகளை வர்ணிக்கிறார்.

ராஜீவ் காந்தி வேகத்திற்கு சோனியாவால் செல்ல முடிவதில்லை. டெலிவிஷனில் இதைக் கண்கூடாகப் பார்க்கலாம் எனினும் உயர் போலீஸ் அதிகாரிகள், டூரில் செல்லும் போது கண்டது ராஜீவ் காந்தி ஹெலிகாப்டரிலிருந்து இறங்க ஐந்து நிமிடம் என்றால் சோனியாவிற்கு எட்டு நிமிடமாகும். ராட்சச விமானங்களான ஏர் இந்தியா 'ஜம்போ'வின் ஏணிப் படிகள் மட்டுமே 25, 26 இருக்கும். இதில் சோனியா மிகவும் நிதானமாகத்தான் படிப்படியாக ஏறுவார், இறங்குவார். நெட் ரிசல்ட், ராஜீவ் காந்தியும் 'ஸ்லோ' 'ஸ்டெடி'யாகினார். சோனியாவிற்கு நன்றி! மனைவி அமைவதெல்லாம் கடவுளின் வரன் அல்லவா?

* * * * *.

வெளிநாட்டு ஜனாதிபதிகள், பிரதமர்கள் இந்திய விஜயங்களின் போது மரியாதைக்காக 'பேங்க்வெட்' தருவது பரம்பரை பழக்கம். இதுவரை இந்திய தரப்பிலிருந்து தம்பதிகளாக பிரதமர் நின்று விருந்தினரை வரவேற்றது கிடையாது. மொரார்ஜி தேசாயோ, லால்பகதூர் சாஸ்திரியோ மனைவியை அருகே வைத்துக் கொண்டு ஸ்டைல் கை கொடுப்பது கிடையாது. ஆனால் மிக இளம் தம்பதி ராஜீவ் காந்தி—சோனியாவைக் கண்டு, "திருஷ்டிக் கண்" போடக்கூடாது. வயதான முதியவர்கள் தம்பதிகளை ஆசிர்வதிப்பது போன்று, "தீர்க்க சுமங்கலி பவ:" என்று இந்தியர்கள் அனைவருமே சோனியாவை வாயார வாழ்த்திட வேண்டும்.

பிரேமா.

தினமலர்

வழங்கும்

சிறுவர் வண்ணமலர்

புத்தக வடிவில்

பல வண்ணங்களில்.

2 புராணப் படக் கதைகள்.


புதிர், பொது அறிவுப் போட்டிகள்.

பரிசுகள் உண்டு.

வெள்ளிக்கிழமை தினமலர் இதழுடன் இணைந்தது.

விலை 100 காசு மட்டுமே!

நவ. 22 முதல் கிடைக்கும்



ADWAVE/DM/2999

அன்பு தேடும் அந்தக் குழந்தை!



சில பிரச்னைகள், சில வார்த்தைகள் —மஞ்சுளா ரமேஷ்.

வேலைக்குப் போகும் பெண்கள் எத்தனை அதிகமாக ஆகிவிட்டார்களோ, அத்தனைப் பிரச்னைகளும், பாவம், அவர்கள் வாழ்வில் அதிகமாகி விட்டது. தலையாயதாக அவர்களுடைய நெஞ்சைத் தேளாகக் கொட்டும் பிரச்னை குழந்தையின் வளர்ப்புதான். குறிப்பாகச் சிறு குழந்தைகளைப் பற்றியது.

கூட்டுக் குடும்பம் இன்றைக்கு இல்லாமல் போய்விட்ட நிலையில் பலரும் தனித் தீவாகி விட்டார்கள். இந்த நிலையில் குழந்தையைப் பெறுவதற்கும், வளர்ப்பதற்கும் அவர்கள் படும்பாடு... மிகவும் பரிதாபமாக இருக்கிறது. எத்தனை விதமாகப் பார்க்க முடிகிறது.

காலங்காலையில் எழுந்து அசந்து தூங்கும் குழந்தையை எழுப்பி தூக்கக் கலக்கத்துடனே அதற்குப் பல் தேய்த்து, டிரெஸ் செய்து, மறுக்க மறுக்கச் சாப்பாட்டை வாயில் திணித்து, தானும் ரெடியாகி கணவருக்கும் பணிவிடை செய்து, லொங்கு லொங்கு என்று நடந்து போய் அண்ணி வீட்டில் விட்டு விட்டு வியர்க்க வியர்க்க ஓடும் ஒருத்தி...

'வயதான காலத்தில் ஓய்வாக இருக்க வேண்டும்' எனத் தனியாகப் போய் விட்ட மாமியாரிடம், மன்றாடி ஆபீஸ் நேரம் மட்டும் விட்டுச் செல்லும் ஒருத்தி...

அதற்கும் ஒப்பாது 'கட் அண்ட்' ரைட்டாகப் பேசி, அல்லது மாமியாரோ சுற்றமோ இல்லாமல் போகும் போது 'குழந்தைகள் காப்பகத்'தில் விட்டு விட்டுப் போகும் ஒருத்தி...

'பேசும் பொற்சித்திரமே!'
'ஆடி வரும் தேனே!'

என்று குழந்தையைக் கொஞ்சி விளையாட அந்தத் தாய்மார்களுக்கு இப்போது நேரமில்லை. ஆனால் அவள் மட்டும் அன்னை இல்லையா? அவளுக்கு மட்டும் குழந்தையைக் கொஞ்சி முத்தமாரி பொழிய ஆசை இல்லையா?

சீவி முடித்துச் சிங்காரித்து, சின்னப் பொட்டு வைத்து, அள்ளித் தூக்கி ஆசைதீர மடியில் போட்டுத் தட்ட ஆயிரம் கனவுகள் உண்டு. ஆனால் அதற்கான நேரம் அன்றாட 'டென்ஷனில்' இல்லை.

கதைகளில் அம்மாவின் சிறப்புக்களைப் பற்றிப் படிக்கும்போது, தாய்மையின் பெருமையைக் கூறும் போது இவளுக்கும் நெஞ்சு

னாலும். சினிமாவில் மங்கல முகத்துடன் அம்மாக்காரி குழந்தைகளை அரவணைத்துக் கொள்ளும்போது இவள் அன்று 'வாழ்வில் குழந்தைகளுக்குச் செய்த 'கொடுமைகள்' எல்லாம் குமுறச் செய்யும்.

ஆனால் என்ன செய்ய?

மறுநாள் காலை ஐந்தடித்தால் முதல் நாள் கனவெல்லாம் கலைந்து போகும். பத்தடித்து 'லேட்டாக'ப் போனால் மானேஜர் கத்துவார். நேற்று 'பெண்டிங்' வைத்துவிட்டு வந்த ஃபைலை இன்று முடிக்கணும்... சீக்கிரம் எழுந்திருக்காத, குளிக்காத, சாப்பிட்டதையெல்லாம் வாந்தியெடுக்கும் 'குட்டிப் பிசாசா'கத்தான் அந்த நேரத்துக்குக் குழந்தை தோன்றும். முதுகில் தானாக சாத்தத் தோன்றும். இதை நினைத்து அலுவலகத்தில் அழும் எத்தனை தாய்மார்கள் இல்லை?

அதெல்லாம் போகட்டும். இந்தக் குழந்தைகள் காப்பகத்தைப் பற்றிச் சொல்ல வேண்டும். பல 'கிரெஷ்'கள் நன்றாக நடந்தாலும் சிலவற்றைப் பற்றிக் கேள்விப்பட்ட சங்கதிகள் மிகவும் பயங்கரமாக இருக்கின்றன.

சில இடங்களில் தொல்லைப்படுத்தாமல் இருக்க குழந்தைகளுக்குத் தூக்க மாத்திரைகள் கொடுத்து விடுகிறார்களாம்.

குழந்தைகளுக்கு என கொடுக்கும் பாலோ, பிஸ்கட்டோ அதற்குப் போவதில்லையாம்...

இப்படிப் பல புகார்கள் வந்தாலும், சமீபத்தில் நான் கேள்விப்பட்ட செய்தி தூக்கி வாரிப் போட வைத்து, நெஞ்சைப் பிராண்டியது. ஒரு 'கிரெஷ்'ஷில் குழந்தைகளிடமிருந்து ரத்தம் எடுத்தார்களாம். பிறகு அது விரைவிலேயே கண்டுபிடிக்கப்பட்டு அந்தக் குழந்தைகள் காப்பகத்தையே 'சீல்' வைத்துவிட்டார்களாம்.

இதையெல்லாம் உங்களைப் பயமுறுத்துவதற்காகச் சொல்ல வரவில்லை. நீங்கள் குழந்தைகளைக் குழந்தைகள் காப்பகத்தில் சேர்க்கு முன்பு அதைப் பற்றி நன்கு விசாரித்துவிட்டுச் சேர்க்க வேண்டும் என்பதற்கே இந்த முன்னெச்சரிக்கை.

பல குழந்தைகள் காப்பகங்கள் உண்மையிலேயே நல்ல முறையில், மிகக் கனிவான வேலையாட்களைக் கொண்டு நடத்தப்படுகின்றன. உங்கள் குழந்தைகளை அவசரப்பட்டுச் சேர்த்துவிடாமல் இப்படிப்பட்ட காப்பகங்களில் சேருங்கள்.

இதைப் பற்றிப் படிக்கும் போது வயதானவர்களும் சிந்திக்க வேண்டும். 'என்னால் உன் குழந்தைகளைப் பார்த்துக் கொள்ள முடியாது' எனக் கறாராகச் சொல்லிவிட்ட பல மாமியார்களை நான் அறிவேன். இவள் எப்படித் தாயாகிக் குழந்தையைப் பெற்றாள் என்று ஆச்சர்யமாக இருந்தது.

வாழ்க்கை என்பது பிறருக்குக் கொடுத்து அதில் வரும் சந்தோஷத்தை ஏற்பதுதான். கொடுக்கக் கொடுக்கவே அன்பு பெருகுகிறது. சுருக்கச் சுருக்க மன சஞ்சலமும், பயமும், சுயநலமுமே பெருகும். இதை அனுபவித்தவர்களே அறிவார்கள்.

மழலையின் இன்பத்திற்கு ஈடு இணை ஏது? அவதியுறும், அந்தத் தாய்மையின் நிலையில் நாம் ஒரு நிமிடம் நின்று பார்க்க வேண்டும். மனத்தால் எத்தனை துயரமுற்றிருக்கிறாள் அவள் என்பது புரியும்.

இது தவிரவே மற்றொரு யோசனையும் எனக்குத் தோன்றுகிறது. வேலைக்குச் செல்லாத நான்கு ஐந்து தாய்மார்களாகச் சேர்ந்து இல்லத்திலேயே குழந்தைகளைப் பார்த்துக் கொள்ளலாமே! அதற்கான ஊதியத்தை அந்த வேலைக்குச் செல்லும் தாயிடம் கேட்டு வாங்கிக் கொள்ளலாமே!

மதிய நேரத்தில் பொழுது போகாமல் வீணே செலவழியும் நேரம் நல்ல பொழுதாகக் கழியும். தாய்மை என்பது நாம் பெறும் பிள்ளைகளோடு முடிந்து விடுவதில்லை.

சிறு குழந்தையை, துன்பமுற்றுத் தவிக்கும் ஜீவனை, அழுது அரற்றும் உயிரைப் பார்க்குமிடமெல்லாம் தானும் வருந்தித் துடிப்பவளே முழுமையான தாய். அவளே நிறைவுற்ற அன்னை.

ஃபிளாட் போன்ற இடங்களில் வசிக்கும் தாய்மார்கள் இதைப் பற்றிச் சிந்தியுங்கள்.

உங்களுடைய தயக்கம் எனக்குத் தெரிகிறது. 'அவ கிரெஷ்ல கொண்டு நூறு இருநூறுன்னு கொடுப்பா. நான் கேட்டா பேராசையைப் பாரு என்பாள். எனக்கெதுக்கு வம்பு...?'

எனலாம். 'எங்க வீட்டுக்காரர் கொண்டு வர்ற சம்பளமே போதும். எனக்கெதுக்குப் பணம்? நான் இகபானா கத்துக்கறேன். பிரெஞ்ச் க்ளாஸுக்குப் போகணும்' என்கிறீர்களா?

எல்லாம் சரி. அதோடு இதுவும் ஒரு சிறந்த பொழுது போக்குத்தான். முயற்சி செய்யுங்கள்.

இதிலே ஒரு சிறந்த தேச சேவையும் அடங்கி இருக்கிறது என்பதை மறவாதீர்கள். குழந்தைகள் அன்னையின் அரவணைப்பிலே வளரும்போது தைரியம், தன்னம்பிக்கை கொண்ட மனிதனாக, நாளை நல்ல நாட்டை உருவாக்கும் பிரஜையாக வளருகிறது. அன்னைக்கு ஈடு நீங்களல்லவோ?

நீங்கள் யாராகவும் இருக்கலாம்—
வேலைக்குச் செல்பவரோ—
செல்லாதவரோ—
மாமியாரோ—
நாத்தனாரோ—
வீட்டில் வெறுமனே இருக்கும் இல்லத்தரசியோ—


அன்பு தேடும் அந்தக் குழந்தையை ஒரு நிமிஷம் நெஞ்சில் நினையுங்கள்.



CHAITRA-B G 248R TAM

மிகப் புதியதான காஸ்கட் ரிலீஸ் சிஸ்டம்

மெஜஸ்டிக்



இந்தியாவின் 100% பாதுகாப்பான பிரஷர் குக்கரை உருவாக்குகிறது


உங்கள் நேரம், பணம், எரிபொருள் மூன்றும் தொடர்ந்து மிச்சப்படுகின்றன.

உணவின் மணமும், ருசியும் மாறுமலும் வைட்டமின்கள் சக்தி குறையாமலும் பாதுகாக்கப்படுகிறது.

3 லிட்டர் முதல் 12.5 லிட்டர் வரை உள்ள மெஜெஸ்டிக் குக்கர்களும், அவை சம்பந்தப்பட்ட இதர பாத்திரங்களும் அலுமினியம் மற்றும் எவர் சில்வரில் கிடைக்கின்றன.

எங்கள் மற்றைய பிரபலமான விசில் செய்யும் சமையலறைத் துணைகள்.

IS : 1660
ISI
13000



ரைஸ் குக்கர், மில்க் பாய்லர் இட்லி குக்கர் பிரஷர் பான்

DISTRIBUTORS FOR TAMILNADU **Naik BROTHERS**

56, Purushwalkam High Road, 1st floor, MADRAS -7 Phone : 662965 661034

"ஆரம்பத்திலேயே 'அஸ்து' போடா தீங்கோ... கிராம வீடு, மாடு கட்ட வசதி, வைக்கோல் போட வசதி... இருக்கு... அக்கம் பக்க கிராமத்துல வைக்கோல் வாங்கு வோம். ஆள் போடுவோம். மாடு கறக்கத் தீனி வைக்க. உங்க ஃப்ரெண்டு கே. வி. பூ. பி. யிலே ஆஃபீசராச்சே... பேங்க் லோன் ஈஸியாக் கெடைக்கும். போன வாரம் மெச் சூர் ஆன ஆர். டி. பணத்தையும் மேலே போட்டு மாடுகள் வாங்குவோம். மான்யம் போக அதிகப்படி செலவுக்கு வச்சுப்பம். கோபர்காஸ் பிளாண்ட் கட்டணும்."


"அந்த ஆர். டி. பணம், உனக்கு விளக்கு மூக்குச் சங்கிலி பண்ணணும்னியே...?"

"சங்கிலி வேண்டாம்... மாடு வாங்க, காஸ் கிணறுக்கு வைச்சுப்பம்..."

என் மனைவியே நகையை விட கோபர் காஸை நேசிக்கையில் நான் என்ன சளைத்த வனு? என் மச்சினன் பெரிய ஃபாக்டரி ஒன ராய் வேலூர், ராணிப்பேட்டை, சிப்காட் டில்,சிறுதொழிலகத்தில்மலக்ஸிங்ப்ளாண்ட், எலக்ட்ரோ ப்ளேடிங் ப்ளாண்ட் என்று வாயில் நுழையாத எலக்ட்ரிகல் கெமிகல் பெயரில் ப்ளேண்ட் கன்ஸ்ட்ரக்ட் செய்யும் போது, வீட்டுக் கொல்லையில் ஒரு மினி பிளாண்ட்கூடப்போடாமல்நான் இருப்பதை என் மனைவி இடித்துரைப்பதும் அந்த நிமி ஷம் நினைவு வர, கோபர்காஸ் பிளாண்ட் கட்டுவது என்று உறுதியுடன் பாங்க் மானே ஜர், கோபர்காஸ் சம்பந்தப்பட்ட அதிகாரி இவர்களை நெருங்கினேன்.

நலத்தநல்லூர் சந்தையில் மாடு பிடிக்க லாம்' என்றார் பக்கத்து வீட்டுக்காரர். ஆனால் உதவிக்கு வந்த இவன் சினேகிதியின் பண்ணை ஆள். "அந்த சந்தையில காளை மாடுதாங்க கிடைக்கும். என்னோட கிராமம் பருத்திச் சேரியில கன்று போட்டு பத்து நாள் ஆன இளசு மாடு இருக்குது. பார்த்து பிடிச்சா வாங்குவாங்க" என்றான்.

ஆஃபீசுக்கு லீவு போட்டுவிட்டு, சங்கிலி பணத்தை, (லோன் இன்னும் கைக்கு வர வில்லை) எடுத்துக் கொண்டு அவனுடன் போனேன்.வெள்ளை உடலில்கறுப்புப்புள்ளி களுடன் இருந்த நாட்டுப் பசுவைக் காட்டி னான். வாயைத் திறந்து பல் எண்ணிக் காட்டி னான்.(அப்போதுதான் மாட்டுக்கு ஒருவரிசை



கனகவல்லி சாரங்கபாணி

பக்கத்து ஊருக்குச் சிநேகிதி வீட்டுக்கு, அவளது இரண்டாவது குழந்தை கீழே விழுந்து பல் உடைத்துக் கொண்டதை, விசாரித்து விட்டு வர, (உண்மையான காரணம், தான் பண்ணிக்கொண்டிருக்கும் முத்துத்தோட்டை யும், புது விமல் புடவையையும் காட்டி கர்வப்பட்டுக் கொள்வதும்தான்.) சென்றிருந்த என் மனைவி, வந்ததும் வராததுமாய்,

''கமலா வீட்டுல என்ன விசேஷம் தெரியுமா? அவங்க வீட்டுக்காரர் சாமர்த்தியம் உங்களுக்கு வரவே வராது. நீங்களும் இருக்கீங்களே மண்ணாந்தையாட்டம்...'' என்று அடுக்கிக் கொண்டே போனாள்.

சாதாரணமாய் சிநேகிதிகள் வீட்டுக்குப் போய் வந்தால் தன் பெருமைகளுக்கு முன்னே அவர்கள் தூசு என்று கர்வப்பட்டு 'அவர்கள் வீட்டுக் காப்பி தண்ணி. வீடு சின்னது. சுத்தம் போறாது. வெறும் ஊழல்' என்றெல்லாம் அவர்களை மட்டம் தட்டிப் பேசுவாள். நான் தலையெழுத்தே என்று அவள் கூறுவதைக் கேட்பது போல், கையில் இருக்கும் எட்கார் வாலஸில் — கானன் டாயிலில், — ஆர்தர் ஹெய்லியில் ஆழ்ந்து விடுவேன். அவளுடைய சிநேகிதப் பட்டாளத்தில் அவளைப் போல் நகைகளோ, புடவைகளோ, சாமான்களோ வேறு ஒருவரிடமும் இருக்காது.

அப்படித் தன்னை விடச் சற்று உயர்வாய் யாரும் எதுவும் வாங்கிவிட்டால், 'மகா அல்பம், ராங்கி...' என்று சிநேகிதி பட்டாளத்தில் இருந்து பெயர் நீக்கம் செய்து விடுவாள். அதனால் யாரும் இவளைப் பார்த்துத்தான் எதுவும் பொறுமைப்பட நேரிடும். அப்படியிருக்க இப்போது கமலா வீட்டில் என்ன புதிதாய்...? அதுவும் எங்கள் ஊரை விடக் குக்கிராமத்தில்!

கையிலிருந்த ''ஏர்போர்ட்'' நாவல் நழுவி விழ அவசரமாய் நிமிர்ந்தேன். ''ஏன்? என்ன விஷயம் கமலா வீட்டில்...? அந்த வீட்டு மாடு ஆட்டுக் குட்டியைப் போட்டு இருக்கா...?''

''இந்தக் கிண்டலுக்கெல்லாம் குறைச்சல் இல்லே... நான் போனதும் கடசுடத்தோசை வார்த்து, நிமிஷமாய்க் காப்பி போட்டுக் கொடுத்துட்டா... முன்னை மாதிரி, கண் அவியற அடுப்பு இல்லே... அவங்க வீட்ல கோபர் காஸ் அடுப்பு... நிமிஷமாய் எல்லாம் ஆயிடறது. புகையில்லே. கரியில்லே... கவர்ன்மென்டுல மான்யம் கொடுக்கறாங்களாம்... மேலே நம்ம கையை விட்டு ஆயிரம் ஐந்நூறு-தான் ஆகுமாம். கிணறு கட்ட சிமென்டும் கன்ட்ரோலில் கொடுக்கறாங்களாம். காஸ் அடுப்பு டவுன் மாதிரி வச்சுக்கிட்டா. தடவைக்குத் தடவை சிலிண்டர் வாங்கணும். அந்தக் கஷ்டம் இல்லே. நம்ம ஊருக்கு இந்த ஜன்மத்துல காஸ் கனெக்ஷன் வராது. நீங்களும் உடனே யாரைப் பார்க்கணுமோ பார்த்து கோபர் காஸ் ப்ளான்டுக்கு ஏற்பாடு பண்ணுங்க. இப்போதான் ரொம்ப தீவிரமா கவர்ன்மென்லே கிரான்ட் கொடுத்து ஊக்கப்படுத்தறாங்களாமே...''

''எல்லாம் சரிதான்... ரொம்ப முக்கியமான விஷயம் மறந்துட்டியே. கோபர் காஸ் ப்ளான்ட் போடணும்னா வீட்டில் மாடு இருக்கணும். குறைஞ்சது மூணு மாடாவது வேணும்...''

''உக்கும்...'' என்று தோளில் இடித்துக் கொண்டாள் என் மனைவி. ''ரொம்ப சமர்த்துன்னு நெனைப்பாக்கும்... நம்ம வீட்டு பின்னாலதான் கொல்லே பெரிசாக் கிடக்கு... கிராமப்புற வீடு, தொட்டில் கட்டி காலியாய் இருக்கு. பாங்கில் லோன் வாங்கி மாடு வாங்குவோம். எனக்கும் இந்த வாங்கற பால் எத்துக்கலே... நமக்குப் போக மீதி பாலை வித்துடலாம்...'' என்றாள்.

''மாடு, கன்று என்றால் பராமரிக்க வேண்டாமா? வேளை தவறாம தீனி வைக்கணும். குளிப்பாட்டணும். வைக்கோல் போடணும். ஒரு வண்டி வைக்கோல் அறுபது ரூபா. புண்ணாக்கு, பருத்திக் கொட்டை எல்லாம் ஏக விலே. மூணு மாடு வச்சு பராமரிக்கறது சனியான விஷயம் இல்லே. உன் ஃப்ரெண்டு வீட்டுலே விவசாயம் செய்யறா. உழவு மாடு, கறவை மாடு நிறைய இருக்கும். மாட்டுக்கு வைக்கோல் நிலத்துல கிடைக்கும். எல்லாம் வாங்கி மாடு சம்ரட்சிக்கிறது, யானை கட்டித் தீனி போடறது போல. தினமும் சாணம் கரைச்சு அவா வீட்டு ஆள் கொட்டுவான். நாம என்ன செய்வோம்...?''

எங்கள் வீட்டுக் கோபர் காஸ் ப்ளான்ட்

மட்டுமே பல் என்ற உண்மை எனக்குத் தெரிந்தது.)

"மாட்டுக்கு நாலஞ்சு வயசுதாங்க இருக்கும். குட்டைப் பசு. நல்லாக் கறக்கும். ரெண்டாம் ஈத்துதானும். போஷாக்குல இருந்தா இன்னும் நாலஞ்சு ஈத்து ஈனும். நாலு சேர் பால் கொடுக்குதாம். கிடாரி கன்று. கன்று ஊசி போட்ட கன்னு... ஜர்ஸி இனம்... கண்ணை மூடிக்கிட்டுக் கேட்ட பணத்தைக் கொடுக்கலாம்" என்று சிபாரிசு செய்தான் என்னிடம்.

சம்மதித்து அந்த மாட்டை வாங்கினோம். (பிறகுதான் தெரிந்தது அந்தக் கிராமவாசியின் மைத்துனன் மாடு அது என்று) மற்றொரு கறவை மாடும், ஒரு சினைப் பசுவும் (பார்க்கத்தான் வாங்கும் போது பெரிய வயிறும் ஐந்து மாத சினை போல் இருந்ததே தவிர எங்கள் வீட்டுக்கு வந்து பத்து மாதமாகியும், அது கன்று போடவில்லை. தினம் தவறாமல் கோபர் காஸுக்குக் கரைத்துக் கொட்ட இரண்டு தட்டுக்கட்டை சாணிதான் போட்டது) வாங்கி மனைவி சங்கிலிக்கு வாங்கிய பணம் முழுக்கச் செலவழித்து வீட்டுக்கு வந்தோம். (கிராமவாசிக்கு படிச் செலவு, சாப்பாட்டுச் செலவு, தரகுக் கூலி தனி செலவு.)

கடன் வாங்கி, வைக்கோல், மாட்டுத் தீவனங்கள், புண்ணாக்கு, பருத்திக் கொட்டை, வகையறா. அவை வைக்க பெரிய டின்கள் எல்லாம் வாங்கினேன்.

அடுத்தது மாடு கறக்கும் பிரச்னை. மாட்டு மடியைப் பார்த்தே 'ரெண்டு மாடும் தலா ரெண்டு லிட்டர் கறக்கும்' என்று ரொம்ப மாட்டு விஷயம் தெரிந்தவள் போல், தீர்மானமாய்ச் சொன்ன என் மனைவி, வீட்டுச் செலவு போக மீதி பாலுக்கு அக்கம்பக்கம் உடனடியாய் வாடிக்கை பிடித்து விட்டாள். பளபள என்று, எவர்சில்வர் பால் கேனும், லிட்டர் குவளைகளும் வாங்கிவிட்டாள்.

கிராமவாசி, சொல்லிவிட்டுப் போனபடி மாடு கறக்க, தன் கிராமத்துக் கோனானை அனுப்பவில்லை. கன்றுக்குட்டி 'ம்மா' என்று கத்திக் கொண்டிருந்தது. வீட்டு வேலைக்காரியிடம் கெஞ்சி, உள்ளூர் கோனானை அழைத்து வரச் செய்தோம். இதற்குள் பாலுக்கு வாடிக்கையாளர்கள் வந்து பொறுமையிழந்து முனகினர்.


"மாடு வீடு வந்து சேர்ந்தும், சேராததுமாய் உன்னை யார் வாடிக்கைப் பிடிக்கச் சொன்னது?' என்று என் மனைவியிடம் சத்தம் போட்டேன்.

உள்ளூர் கோனான், கன்றை விட்டு மாடு காலை அணைந்து கறந்தான். கறுப்பு, வெள்ளை மாடு அரை லிட்டரும், சிவப்பு மாடு முக்கால் லிட்டரும்தான் கறந்தன. "பாலை எக்குதுங்க... திருட்டு மாடுங்க..." என்றான்.

"நடந்து வந்த களைப்பு — நாளைக்கு நிறைய கறக்கும்." என்றேன் சமாதானமாய்.

தினமும் கறக்க வந்துவிடும்படி இருபத்தைந்து ரூபாய் சம்பளம் பேசி, முன் பணமாய் இருபது ரூபாயும் கொடுத்தேன். மாடு கறந்த ஒன்றே கால் லிட்டர் பாலும், ஒன்றரை லிட்டர் பாலாய் வாடிக்கையாளர்களிடம் அளந்து தரப் பட்டது. (எப்படி ¼ லிட்டர் அதிகம் என்கிறீர்களா.. என் மனைவி... சதா பால்காரனை... தண்ணீரைப் பாலில் கலக்கறியே எனக் கரித்துக் கொட்டும் என் மனைவி... பாலில் தண்ணீரைக் கொட்டி அளந்து கொடுத்து விட்டாள்.)

ஆபீசுக்கு லீவு போட்டு சந்தையில் அலைந்த எனக்கு மாடு கறந்த அன்றே, காப்பி கிடை



யாது... பொறுமை இழந்து, 'காப்பி எங்கே?' என்று நான் கத்தியதும், கன்னங்கரேல் என்று கொண்டு வந்து வைத்தாள். லிட்டர் குவளை பால் கேன் அலம்பிய தண்ணீரில் காப்பி கலந்தாள் போலும். கடனே என்று குடித்தவன், ''காலையில் மின்னலடிக்கும் வெண்மை காப்பி''க்கு அச்சாரம் சொல்லி விட்டு, மாடு வாங்கிய பெருமையை, என் சிநேகிதர்களிடம் காட்டிக் கொள்ள கிளம்பினேன். மறு நாள் காலை...

பால் வாங்கினால் ஆறு மணிக்கெல்லாம் காப்பி கிடைத்துவிடும். ஆனால் மாடு கறக்க ஆள் ஏழு மணிக்குத்தான் வந்ததால் காப்பி லேட்...

அதுவும், மாடு கறக்கவே லேட்டா யிடுத்து. வாடிக்கை பால் எல்லாம் நீங்க அளந்து கொடுங்க... நான் காப்பி போட றேன்...'' என்ற ஆணைக்கிணங்க, அவளு டைய வாடிக்கையாளர்களுக்கு கால் லிட்டர், அரை லிட்டர், நூறு மில்லி என்று நான் அளந்து கொடுத்து உதவியதால், ஏழரைக்குக் காப்பி கிடைத்தது. அவனுக்கு உதவியாய் நானும் மாட்டுக்குத் தீனி வைத்தேன். இந்த அமளியில் ஆஃபீசுக்கு நேரம் ஆனதால் பேப்பர் படிக்காமல் குளிக்கக் கிளம்பாத நான், பேப்பரைத் தொடக் கூட நேரமின்றி கிளம்பினேன்.

மாலை மணக்கும் புதுப்பால் காப்பியை எதிர்பார்த்து ஆபீஸ் விட்டு வீட்டுக்கு வந் தால், ''பாருங்களேன், கோனாலைக் காணோம்... கன்றுக்குட்டி வேறு ஊட்ட கிடந்து கத்தறது... நீங்கதான் செத்த வேட்டியைத் தார்பாய்ச்சிக் கட்டிண்டு மாட்டை கறங்களேன். என்ன பெரிய கம்ப சூத்திர வேலையா? ஆள்காட்டி விரலையும் கட்டை விரலையும் காம்பைப் பிடிச்சு, அமுத் தினால் பால் பீய்ச்சறது...'' என்றாள்.

''இவ்வளவு ஈஸி என்றால் நீயே கறக்க லாமே...'' என்று முனகியபடி, தோளில் அணை கயிறும், கையில் பால் கேனுமாய், பால்கார அவதாரத்துடன்; கன்று அவிழ்த்து விட்டேன். கால் அணைத்தேன். சுரப்பு இறங் கியதும் கன்றைப் பிடித்துக் கட்டி, உட்கார்ந்து பால் கறந்தேன்... ஸாரி... கறக்க முயற்சித் தேன்... இரண்டு பீல் இழுக்குமுன், (என் நகம் பட்டோ என்னவோ) மாடு எட்டி உதைத் தது, காலை இறுக்கி அணைத்து நான் கட்டாத தால். என் முன் பல் ரெண்டும் கோவிந்தா... இருந்தும் காப்பியின் அவசியத்தால் மறுபடி காலை இறுக்கி அணைத்து சிரமப்பட்டுப் பால் கறந்தேன்...

மனைவி பாலை வாங்கிக் கொண்டவள், ''அட, கோனாலை விட உங்களுக்குக் கூட பால் கறந்திருக்கே...'' என்று ஐஸ் வைத் தாள். மடி கழுவ எடுத்துச் சென்ற தண்ணீ ரில்பாதியைகேனில்நான்நிறுத்திக்கொண்டு, அவள் வாடிக்கைக்குத் தண்ணீர் விட முடி யாமல் செய்தது புரியாமல்.

''கோனாலுக்கு எதுக்குக் காசு தண்டம்? எப்போ மாடு கறக்க வருவான்னு காத் துண்டு... நீங்களே இனிமே கறந்து டுங்கோ...!''

''போடி... மாடு விட்ட உதையிலே முன் பல் ரெண்டும் அவுட்...'' என்றேன்.

''ரெண்டுபல்லும், கல்யாணராமன் மாதிரி நீட்டிண்டு இருந்தது. போன வரைக்கும் நல் லது. சின்ன பல் கட்டிக்கலாம். இனி நீங்க தான் கறக்கணும்...'' என்றாள், தீர்மான மாய். இப்படியாக நான் கோனான் உத்யோ கம் பார்க்க வேண்டி நேர்ந்ததால், ''மாடு கறந்து தீனி வைத்து, கொல்லையில் கொண்டு கட்டி, வைக்கோல் போட்டு... முடிப்பதற் குள் நேரம் ஆனதால் பேப்பர் படிக்க முடிய வில்லை.

அடுத்தது கோபர் காஸ் கிணறு கட்டும் விவகாரம். மறுபடி போய் அதிகாரியைப் பார்த்தேன். முறைப்படி அப்ளிகேஷன் அனுப்பினேன். அவர் வந்து கிணறு வெட்டும் இடம், சமையல் கட்டு, இவைகளைப் பார் வையிட்டு, சமையல் கட்டும், கோபர்காஸ் கிணறும் ரொம்ப தூரமாய் இருக்கிறதே. கேஸ் இவ்வளவு தூரம் வராது'' என்றார்... ''மான்யம் இரண்டாயிரத்தைந்நூறு சாங்ஷன் செய்ய ஒப்புக் கொண்டார்.

உடனே என் மனைவி, ''கிணற்றுக்கு அரு கில் மாட்டுக் கொட்டிலின் ஒரு பகுதியில் சமையல் கட்டு கட்டி விட்டால் போச்சு...'' என்று திட்டமாய்ச் சொன்னாள். வழக்க

தலையில் குடும்பம் நடத்தித் தொல்லை கொடுக்கும் பேன்களை ஒழிக்க ஒரு எளிமையான ஐடியா: எறும்பு மருந்தை 2 டீஸ்பூன் எடுத்து லேசாக நீர் விட்டுக் கரைத்து அடித்தலை, நடுப் பகுதி என்று மண்டையில் படும்படியாக நன்றாகத் தேய்த்து ஐந்தே நிமிடம் ஊற விடுங்கள்! பிறகு நன்றாக நீர் விட்டு அலசி தட்டி னால் தலையில் இருக்கும் அத்தனை ஐந்துக் களும் ஒழியும். தலைமுடி உதிரவே உதி ராது. இது என் அனுபவத்தில் கண்ட உண்மை..

— உமா குமார்.

அழகிய மென்மைப் பொட்டு
அற்புத கருமைக் கோடு...

அடடாஓ! உம்மைக் கவர்ந்திடும் பெண்மை.

சிங்கார் கும்கும் பொட்டு

சீராக பரவுவதற்கு மிகச் சிறப்பான தரமுள்ள பொருள்களால் தயாரிக்கப்பட்டது... விரியாது. பரவாது. உங்கள் ஆடைகளுக்குப் பொருந்தும் வண்ணங்கள்

சிங்கார் கண்மை

மென்மையான, இதமான, வளமான கருமை. உங்கள் கண்களை குளிர்ச்சியோடும் அழகோடும் வைத்துக் கொள்வதற்காக தூய்மையான பொருட்களால் தயாரிக்கப் பட்டுள்ளது. இடுவதும் எளிது அதனை நீக்குவதும் அதேபோல் எளிது.


சிங்கார்

கும்கும் பொட்டு மற்றும் கண்மை.
தூய்மையானது, மென்மையானது அழகானது—உங்களைப்போல்!





everest/85/SH/274-tm




new

For today's woman... **you**

PANTIES

Available in a choice of colours. 100% cotton

From the makers of **TANTEX**



Imageads M- 1808

மான சமையல் அறைக்கும், கூடத்துக்கும், வாசலுக்கும் அதிக தூரம் கால் வலிக்கிறது என்பவள் இன்னும் இரண்டு கட்டு தள்ளி சமையல் கட்டு வைத்துக் கொள்கிறாளாம்.

மான்யம், சிமெண்ட் வந்து சேர்ந்தது. கொட்டிலைத் தடுத்தால் போயிற்று என்று அவள் சுலபமாய்ச் சொல்லிவிட்டாளே தவிர, சமையல் மேடை, பக்கச் சுவர், அலமாரி, பரண், ஜன்னல், தொட்டி முற்றம் என்று புது சமையல் கட்டு மூவாயிரம் ரூபாயை விழுங்கிவிட்டு உருவானது.

கோபர்காஸ் கிணறு வெட்டிக் கட்டத் துவங்கி விட்டோம். தினப்படி டான் என்று பத்தரை மணிக்கெல்லாம் பகல் தூக்க கவர்க் கத்துக்குப் போகும் என் மனைவி தூக்கத்தைத் துறந்து மேற்பார்வை இட்டாள். பத்துப் பதினைந்து நாள் சாணம் சேர்த்து வைத்திருந்தோம். துவக்கநாள் வந்ததும், ரிப்பன் வெட்டி திறப்பு விழாக் கொண்டாடாத குறையாய், சாணம் கரைத்துக் கொட்டினோம். எரிவாயு உருவானதும், மனைவி அடுப்பின்மேல் கோலமிட்டு, தண்ணீர் கலக்காமல் பால் காய்ச்சி பொங்க வைத்து, எல்லோருக்கும் விநியோகித்தாள். ஏற்கெனவே பகல் தூக்கத்தால் டபிள் பிரெட் ஆக இருக்கும் அவள் உடம்பு, ஆசைப்பட்டபடி கோபர்காஸ்வரவழைத்துக் கொண்ட சந்தோஷத்தில் ட்ரிபிள் ப்ரெட் ஆனது.

"உம்மபாடு ஜாலி... நினைத்தவுடன் ஜாலியாய்ச் கடச்கட இட்லி, தோசை, டிபன், சாப்பாடு..." என்று கிண்டல் செய்கிறீர்களாக்கும்...'

அதையேன் கேட்கிறீர்கள்?

கொல்லைக் கோடியில் சமையல் கட்டு... எவ்வளவு தூரம்... நடக்கிறது. ஒவ்வொருவருக்கும் தனித்தனியாய் இட்லி தோசை வார்க்க சமைக்க முடியுமா என்ன... ஆறிப் போய்ச் சாப்பிட்டால்தான் உடம்புக்கு நல்லது" என்று கூறி ஏற்கெனவே செய்து ஆறிப் போன உணவு வகைகள் தான் படைக்கிறாள் என் மனைவி. எனக்குத்தான் ஹாயாய் நாவல் படிக்க முடியாமல், சினேகிதர்களுடன், அரசியல் சினிமா அலச முடியாமல், மாடு கறக்க, தீனி வைக்க, பால் அளந்து கொடுக்க, கணக்கு எழுத... எல்லாவற்றுக்கும் மேலாய் பக்கெட் பக்கெட்டாய், சாணத்தைக் கரைத்துக் கிணறுக்கு விட... (வேலைக்காரி கண்டிப்பாய்ச் செய்ய மறுத்துவிட்டாள். ஸ்வாமி... என் பெண்டாட்டிக்கு பயந்து நான் செய்ய வேண்டி இருக்கு...) கழிவுகளை ஒதுக்கித் தள்ள என்று... அதிகப்படி வேலை... உள்ளே என் மனைவி 'தன் கோபர்காஸ் அடுப்புப் பெருமையை யாரோ சினேகிதியிடம் பீற்றிக் கொண்டு இருக்கிறாள். மாடு கறக்கணும்...: நான் போகிறேன்...

டாக்டரே இப்படியா....




நான் சமீபத்தில் மதுரையிலுள்ள எனது தாய் வீட்டிற்குச் சென்றிருந்தேன். மாதவிலக்குத் தள்ளிப் போனதால், குடும்ப டாக்டரின், கிளினிக் வீட்டிலிருந்து அதிக தொலைவில் உள்ளதால், அருகிலுள்ள பெண் மருத்துவரிடம் சென்றேன். இவரும் M. B. B. S., D. G. O. தான். நான் லூப் பொருத்திக் கொண்டிருப்பதால் சந்தேகமாகத்தான் சென்றேன். சோதனை செய்த அவர், இது 1½ மாத கர்ப்பம். லூப் நழுவி கர்ப்பப்பைக்குள் சென்று விட்டது. கட்டாயம் D & C செய்தாக வேண்டும். D & C செய்யாவிட்டால் ஆபத்து என்றார். அன்று நான் அடைந்த வேதனைக்கு அளவேயில்லை. எதற்கும் நம் குடும்ப டாக்டரிடமே சென்று விடலாம் என்று போனதில், பரிசோதித்த அவர், இது கர்ப்பமில்லை என்று உறுதி செய்து லூப் பொஸிஷனும் நன்றாயிருக்கிறது என்று ஒரு இன்ஜெக்ஷன் போட்டார். சரியாகி விட்டது. பெண் மருத்துவர்களே பெண்களின் உடம்போடு இப்படி விளையாடுகின்றார்களே என்று வேதனையாயிருக்கிறது. பணத்திற்கு ஆசைப்பட்டு இப்படியெல்லாம் செய்கின்றார்கள். விசாரித்ததில், மூன்று பெண் மருத்துவர்கள் இணைந்து இந்த கிளினிக் நடத்துகின்றார்கள். ஒவ்வொருவருக்கும் ஒரு குறிப்பிட்ட நேரமாம். அந்த நேரத்தில் வருகின்ற நோயாளிகளிடம் முடிந்தவரை கறக்கின்றார்கள். எனவே, சகோதரிகளே! நன்கு தெரிந்த பெண் மருத்துவர்களிடமே சென்று சிகிச்சை செய்து கொள்ளுங்கள்.

— ஒரு சகோதரி.

தெரிந்து கொள்ளுங்கள்



முஸ்லீம்களின் புனித இடம் இது. உலகத்திலுள்ள எல்லா முஸ்லீம்களும் வாழ்வில் ஒருமுறையாவது இந்த இடத்தைப் போய்ப் பார்த்துவிட்டு வரவேண்டும் என்று நினைப்பார்கள். பக்ரீத் பண்டிகையின் போது பல லட்சக்கணக்கான மக்கள் இங்கு கூடுவார்கள்.




2 இதைப் பார்த்ததும் ஏதோ கோலம் என்று நினைக்கத் தோன்றும். ஆனால் கோலமில்லை. சோவியத் யூனியவில் நடைபெற்ற இளைஞர்கள் விழாவின் போது இது பல பேரின் பார்வையைக் கவர்ந்தது.




3 தென் ஆப்பிரிக்காவில் சமீபத்தில் நடந்த வன்முறை செயலின் போது இந்த கட்டிடம் முழுவதும் எரிந்து சாம்பலானது. அகிம்சையைப் போதிக்க ஒருவர் வாழ்ந்த இந்தக் கட்டிடம் அக்னி தேவனுக்கு அர்ப்பணமானதைப் பல நாடுகளும் கண்டித்தன!



4 சமீபத்தில் நடுவானில் வெடித்து எரிந்து சாம்பலான கனிஷ்கா விமானத்தின் முக்கியமான பகுதி இது. இதைத் தேடுவதற்கு பெரும் முயற்சி எடுத்துக் கொள்ளப்பட்டது. இந்தப் பெட்டி தான் தற்போது முக்கியமான சாட்சியமாகக் கருதப்படுகின்றது.




5 இந்திய விஞ்ஞான முயற்சியைத் துல்லியமாக எடுத்துக் காட்டும் புகைப்படம் ; இது பூமிக்கு அடியில் அணுகுண்டை வெடித்துக் காட்டி சாதனை புரிந்த நாம் மற்ற வல்லரசுகள் போலவே விஞ்ஞான ஆராய்ச்சிப் பணியில் ஈடுபட்டு இருக்கிறோம் என்பதற்கு இந்தப் புகைப்படம் சான்று.



பல வண்ண விளக்குகளால் அலங்கரிக்கப்பட்ட இந்த இடத்தில் இருந்து அரச ஆணைகள் பிறக்கப் பட்டதுண்டு. கண் எழிலுடன் காட்சிதரும் இந்த இடத்தை மைசூருக்குச் செல்லும் சுற்றுலாப் பயணிகள் அதிசயப் பார்வையிடுவார்கள்.



8 உலக அதிசயங்களில் முக்கிய கேந்திரப் பகுதியாக விளங்குவது இந்தக் கட்டிடம். பார்க்கர் பேனா நிப்பு முதல் அயல் நாட்டு சாமான்கள் உள்பட தட்டு முட்டுச் சாமான்கள் கூட இங்கு போய் வாங்கி வரலாம். ஆனால் இந்தக் கட்டிடம் சில மாதங்களுக்கு முன்னால் அடியோடு தீக்கு இரையானது.



9 உலக அதிசயங்களில் இதுவும் ஒன்று. ஆனால் இந்தக் கட்டிடத்திற்கு இப்போது ஆபத்து வந்திருப்பதாகச் சொல்கிறார்கள். தூய காதலுக்கு சாட்சியாக நிற்கும் இந்தக் கட்டிடம் சலவைக் கல்லால் ஆனது. இந்தச் சலவைக் கற்களை தொழிற்சாலை வெளியேறும் அழிவு வாயுக்கள் பாதிப்பதாகச் சொல்கிறார்கள்.

தொகுப்பு: **தாம்பிரவருணி.**

உங்கள் இல்லத்தருகே உங்கள் நலன் நாடும் நண்பர்



எல்.ஐ.ஸி முகவர்

உங்களது இனிய எல் ஐ.ஸி முகவரை ஒரு நண்பரிலும் மேலானவர் என்று குறிப்பிடலாம்.

ஏனெனில் அவர் உங்கள் வளமான வாழ்விற்கு வழிகாட்டி, சேமிப்பு ஆய்ந்துரையாளர், வரி சலுகை ஆலோசகர் என பலவும் ஒன்று திரண்ட நண்பராய் திகழ்கிறார்.

முன் மொழிவு எழுதுதல், பணம் செலுத்துதல், நியமனம், வாரிசு மாற்றம் மற்றும் உரிய காலத்தில காப்புத தொகை பெறுதல் போன்று பார்வைக்கு சிக்கலாய் தோன்றும் விதிமுறைகளை எப்படி செவ்வனே கடைப்பிடிப்பது என்றும் அறிவுறுத்துகிறார்.

உங்கள் சேமிப்பை தக்க முதலீடு செய்வதில் கருத்துரைப்பதோடு மட்டுமின்றி உங்கள் தேவைக்கேற்ற ஆயுள் காப்புத திட்டங்களை தேர்ந்து எடுப்பதிலும் உதவுகிறார். உங்கள் மக்களின் உயர் கல்வி, திருமணம், வீடு கட்டுதல் போன்ற வருங்கால தேவைகளையும் செலவுகளையும் உள்ளத்தில் கொண்டு பாலிஸி நிறைவு காலங்கள் எவ்வாறு அமையலாம் என தெரிவு செய்வதிலும் துணை நிற்கிறார். மேலும் ஆயுள் காப்பீட்டின் மூலம் வருமான வரி மற்றும் சொத்து வரி செலுத்துவதில் எவ்வாறு சலுகைகள் பெறலாம் எனவும் ஆய்ந்துரைக்கிறார்.

சுருங்கக் கூறின எவ்வித பலனும் கருதாது அவர் எல் ஐ ஸியில் உங்கள் கண் மற்றும் செவிப் புலனாய் செயல்படுகிறார்.

உங்கள் இல்லத்தருகே உங்கள் நலன் நாடும் நண்பரான எல் ஐ ஸி முகவரிடம் உங்கள் சேமிப்பு திட்டங்களை விவாதிப்பதில் இன்னும் தாமதம் ஏனோ?

எல்.ஐ.ஸி முகவர்
உங்களுக்காக செயல்படட்டுமே!

லைப் இன்ஷ்யூரன்ஸ் கார்ப்பொரேஷன் ஆப் இந்தியா

1985 86 எல்.ஐ.ஸியின் முகவர்கள் ஆண்டு

NPS-LIC-TA/35

தாயாகப் போகும்—

பெண்ணே? வேலைக்கு வேண்டாம்!



திருமணமாகி, வேலைக்கு விண்ணப்பிக்கும் பெண் மருத்துவர்கள், கட்டாயமான மருத்துவப் பரிட்சைக்கு, அதாவது அவர்கள் கர்ப்பமாக இருக்கிறார்களா இல்லையா என்றறிய, மருத்துவப் பரிட்சைக்கு உட்படுத்தப் படுகிறார்கள்.

டில்லியிலுள்ள ஹார்டிஞ்ச் ஆஸ்பத்திரிக்கு விண்ணப்பிக்கும் பெண் மருத்துவர்கள் கர்ப்பமாக இருக்கும் பட்சத்தில் வேலைக்கு எடுத்துக் கொள்ளப்படுவதில்லை. விண்ணப்பம் செய்யும் பெண் மருத்துவர்கள், கடைசியாக ஆன மாதவிலக்கு பற்றிய குறிப்பு மற்றும் சிறுநீர்ப் பரிசோதனை முடிவுகள் பற்றிய குறிப்பும் கொடுக்க வேண்டும். வேலைக்கு எடுத்துக் கொள்ளப்படும் பெண் ஆறு மாதத்திற்குப் பின் மறுபடியும் மருத்துவப் பரிட்சை செய்து கொள்ள வேண்டும். கர்ப்பமாக இருந்தால் ''வேலையை விட்டு விடும்படியும் அல்லது கருச்சிதைவு செய்து கொள்ளும்படியும்'' கோரப்படுகிறாள்.

இப்பருத்துவப்பரிட்சை 1977ம் ஆண்டில் துவங்கியது என்றும், காலஞ்சென்ற பிரதமர் இந்திரா காந்தி உட்பட, மந்திரிகளுக்கு முறையீடுகள் செய்தும், இது தொடர்ந்து நடந்து வருகிறது. ''திருமணமாகாத பெண் மருத்துவர்கள், திருமணமாகி கர்ப்பமாகாத பெண் மருத்துவர்கள் அந்நிலையிலேயே தொடர்ந்து இருக்கும்படி வற்புறுத்தப்படுகிறார்கள்.

இது ஏன்? பேறுகால விடுப்பு (Maternity Leave) எடுத்துக் கொள்வதைத் தடுப்பதற்காகவே இம்முறை கையாளப்படுகிறது. பொதுவாக, அரசாங்கத் துறையிலும், தனியார் துறையிலும் இப்மனப் போக்கு உள்ள இக்காலத்தில், லேடி ஹார்டிஞ்ச் ஆஸ்பத்திரி நிர்வாகத்தின் இப்மனப் போக்கு வியப்பைத் தரவில்லை.

சமுதாயத்தில் பெண்களின் நிலை பற்றி ஆய்வு நடத்திய குழுவின் அறிக்கை, Report of the Committee on the Status of Women) இராணுவத்தில் நர்சுகளை வேலைக்குத் தேர்ந்தெடுக்கும் போது, பாரபட்சமாக பெண் நர்சுகளைத் தேர்ந்தெடுப்பதில்லை என்றும் மணமான பெண் மருத்துவர்களுக்கும், பெண் நர்சுகளுக்கும் பேறுகால விடுப்புப் போன்ற வசதிகளை அனுமதிப்பது இல்லை என்றும் குறிப்பிடுகிறது.

புதுதில்லியிலுள்ள சப்தர்ஜங் ஆஸ்பத்திரியில் ஆறு மாத Midwifery கோர்ஸுக்கு விண்ணப்பங்கள் கோரி வெளியான விளம்பரம் ''ஆறு மாத Midwifery பயிற்சிக்குத் திருமணமாகாத, அல்லது பொறுப்புகள் இல்லாத விதவைகளிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.''

தில்லியிலிருந்து வெளியாகும் பெண்கள் பத்திரிகையாகிய 'மனுஷி' என்னும் பத்திரிகை, தாய்மையைப் பற்றிப் பல நிறுவனங்களின் மனப்போக்கைப் பற்றி அறிக்கைகள் வெளியிட்டிருக்கிறது.

எடுத்துக்காட்டாக, தில்லியில் சுமார் அறுபதுக்கும் மேற்பட்ட கிளைகளுள்ள மாண்டிசோரி பள்ளியின் நிர்வாகம், தங்கள் பள்ளிகளில் வேலை செய்யும் ஆசிரியைகளுக்கு எந்த விதமான மருத்துவ விடுப்பும் கொடுப்பதில்லை. எனவே பேறுகால விடுப்பு பற்றிக் கேட்கவேண்டியதில்லை. ஒரு ஆசிரியை கர்ப்பமாக இருக்கிறார் என்று தெரிந்த அதே நிமிடத்திலேயே, தன் வேலையை ராஜினாமா செய்யும்படி வற்புறுத்தப்படுகிறார். அந்த ஆசிரியையின் வேலை தற்காலிகமானதாகவோ, அல்லது நிரந்தரமானதாகவோ எதுவாக இருந்தாலும், ராஜினாமா செய்தேயாகவேண்டும். சுமார் எட்டு ஆண்டுகள் தொடர்ந்து ஆசிரியையாக இருந்தவருக்கும் இதே கதி ஏற்பட்டது. கர்ப்பமாக இருக்கும் ஆசிரியை தொடர்ந்து வேலையில் இருப்பதாகச் சரித்திரமே இல்லை.'' மேற்கண்ட இச்செய்தி



அப்பள்ளியின் ஆசிரியை ஒருவரை இப் பத்திரிகை (மனுஷி) பேட்டி கண்டபோது, வெளியாகியது.

"பிரசவத்தை விடுமுறையின் போது வைத்துக் கொள்ளுங்கள்" என்பது தென் னிந்தியப் பெண்கள் கல்லூரி நிர்வாகம், தங்கள் ஆசிரியைகளுக்கு இட்டுள்ள ஒரு கட்டளை. ஒரு ஆசிரியையின் பிரசவம் கல்லூரி விடுமுறையின் போது இருக்காது என்பதா லும், கல்லூரி நிர்வாகம் பிரசவ விடுப்பு அனுமதிக்காது என்பதாலும், அந்த ஆசி ரியை கருச்சிதைவு செய்து கொள்ள வேண் டியதாயிற்று.

ஏர் இந்தியா விமானப் பணிப் பெண்கள், தாங்கள் முதல் கர்ப்பம் தரித்தவுடனேயே, வேலையை விட்டுவிட வேண்டுமென்று ஒரு நிபந்தனை இருந்தது. விமானப் பணிப் பெண் கள் 1981ம் ஆண்டில் இதை எதிர்த்து இந்திய சுப்ரீம் கோர்ட்டில் ரிட் மனு தாக்கல் செய்த போது, சுப்ரீம் கோர்ட், இந்த நிபந்தனை அரசியல் சட்டத்துக்குப் புறம்பானது என் றும், ஆகவே கர்ப்பமாகும் போது வேலையை விட்டுவிட வேண்டுமென்று விதித்திருக்கும் நிபந்தனையை நீக்கிவிட வேண்டுமென்றும், தீர்ப்பளித்தது.

பெண் தொழிலாளர்களைப் பாதுகாக்கும் வண்ணம் இயற்றப்பட்ட சட்டங்களே, பெண் களை வேலைக்கு நியமித்துக் கொள்வதற்குத் தடையாக இருக்கின்றன என்பது கவனத் திற்குரியது. 1961ம் ஆண்டு பேறு கால சௌகரியங்கள் சட்டத்தின்படி, ஒரு பெண் தொழிலாளி, தொடர்ந்து 160 நாட்கள் வேலை செய்திருப்பாரேயாகில், அவருக்கு பேறு காலத்திற்கு முன்பு, சம்பளத்துடன், ஆறு வாரங்கள் விடுப்பும், குழந்தை பிறந்த பிறகு சம்பளத்துடன் ஆறு வாரங்கள் விடுப்பும் கொடுக்க வேண்டும். இச்சட்டத்திலிருந்து தப்புவதற்காக, நிறுவனங்கள், பெண் தொழி லாளர்களை அன்றாடச் சம்பளத்திற்காக நிய மிக்கிறார்கள்.

அன்றாடச் சம்பளத்தில் வைத்துக் கொண் டால், நடுநடுவே சில நாட்கள் வேலை இல்லை என்று கூறி, சில நாட்கள் கழித்து மறுபடியும் வேலைக்கு அமர்த்திக் கொண்டு — இப்படியே செய்தால், தொடர்ந்து 160 நாட்கள் எந்தப் பெண் தொழிலாளியும் வேலையிலிருக்க முடியாது. மேலும் இச்சட்டத்தின்படி, நிறு வனத்தில் ஐம்பது அல்லது ஐம்பது தொழிலா ளர்களுக்குமேல் இருந்தால், தொழிலாளிக்கு, பேறு கால விடுப்பு போன்ற சௌகரியங் களைக் கொடுத்தே ஆக வேண்டும் என்ற கட்டாயம் இருப்பதால், பெரும்பாலும் நிறுவனங்கள் தங்கள் தொழிலாளர்களின் எண்ணிக்கையை ஐம்பதுக்குக் கீழேயே வைத்துக் கொண்டு விடுவார்கள்.

இச்சட்டப்படி பேறு கால விடுப்பின் போது பெண் தொழிலாளி வேலைநீக்கம் செய்யப்பட முடியாது என்பது இச்சட்டத் தில் திட்டவட்டமாக வரையறுத்துக் கூறப் படவில்லை என்பதால் மேலும் பிரச்னைகள் எழுகின்றன. இச்சட்டத்தில் உள்ள இக்குறை யால்தான் லேடி ஹார்டிஞ்ச் ஆஸ்பத்திரி டாக்டர்கள் நிலை இப்படி இருக்கிறது.

பெண்கள் பலமுறைகளில், பாரபட்ச மாக நடத்தப்படுவது நிறுத்தப்பட வேண்டும் என்ற ஐக்கிய நாடுகள் சபையின் உடன்பாட் டில், 1981ம் ஆண்டில் (Un Convention on Elimination of all forms of Discrimination against women) இந்தியா கையொப்பமிட்டிருந் தாலும், இது இந்தியாவில் இன்னும் உறுதிப் படுத்தப்படவில்லை (Not ratified).

இந்த உடன்பாட்டின் 11வது பிரிவு என்ன கூறுகிறது என்று கவனிப்போம். 1. திருமணம், மகப்பேறு ஆகிய அடிப் படைகளில், பெண்கள் வேலைக்குத் தேர்ந் தெடுக்கப்படும் முறையில் பாரபட்சமாக நடப்பது நிறுத்தப்பட வேண்டும் என்ப தும் 2. திருமணமானதாலோ அல்லது கர்ப்பமாக இருப்பதாலோ வேலைநீக்கம் செய்யப்படுதல் நிறுத்தப்பட வேண்டும் என்பது இந்த பதினோராவது பிரிவின் சாராம்சம் ஆகும்.

பெண் பணியாளர் பலருக்குத் தங்க ளுக்கு பேறு கால சௌகரியங்களைக் கோரும் உரிமை இருக்கிறது என்பதே தெரி யாமலிருக்கிறது. சிலருக்குத் தெரிந்திருந் தாலும், சட்டபூர்வமாகத் தங்களுக்குள்ள உரிமைகளைக் கோரினால், தாங்கள் வேலையை இழக்க நேரிடும் என்பதால் வாய் மூடிகளாக இருக்கிறார்கள்.

ஒரு பெண் மருத்துவர், தான் கர்ப்பமாக இருக்கும் போது செய்யப்பட்ட சிறுநீர்ப் பரிசோதனை பற்றிய பொய் ரிப்போர்ட் கொடுத்து, கர்ப்பமாக இருக்கும் போது தொடர்ந்து வேலை செய்ததாகவும், பேறு கால சௌகரியங்களுடன், சம்பளத்துடன் விடுப்புக்கு விண்ணப்பித்ததாகவும், அந்த விடுப்பு மறுக்கப்பட்டதால், வேலைக்கு வந்து வார்டில் இருந்தபோது, அதிக இரத்தப் போக்கு ஏற்பட்டுக் கருச்சிதைவு ஏற்பட்ட தாகவும், உடனே இரத்தம் செலுத்தப்பட்டு அப்பெண் மருத்துவரின் உயிர் காக்கப்பட் டது என்றும் அப்பெண் மருத்துவர் வேலை நீக்கம் செய்யப்பட்டார் என்றும், ஒரு செய்தி வெளியாகியுள்ளது.

ராஜி.




லேசாக அழுகல் வாடை வந்துவிட்ட தேங்காயைக் கீறி நீர்விட்டு நன்றாகக் கொதிக்க விடுங்கள். இப்போது அந்தத் துண்டங்களை சமையலுக்குக் கூட பயன் படுத்தலாம். அழுகல் வாசனையே துளிக் கூடத் தெரியாது.

—உமாகுமார்.

அகில இந்திய குடும்பநலக் கழகத்தின் கீழ் 'மகளிர் முன்னேற்றத் திட்டம்' ஒன்று நாகர்கோவிலில் செயல்படுகிறது. சுமார் 137 கிராமங்களில் 82 மகளிர் மன்றங்களை அமைத்துச் செயல்பட்டு வருகிறது. இந்த அமைப்பின் மகாநாடு சமீபத்தில் கற்காடு கிராமத்தில் வெற்றிகரமாக நடந்தது.

கே. சாரதா.



செய்தி சொல்லவா?



சமீபத்தில் பிரபல எழுத்தாளர் கோமளா வரதனின் ஓவியக் கண்காட்சி பெங்களூரில் நடைபெற்றது. ஓவியங்கள் நடனமாடுவதைப் பார்க்க முடிந்தது.

அணுயுகத்திலும் பெண்ணுக்கு ஒரு நீதி!

பம்பாய் அணுசக்தி நகரிலுள்ள ஒரு பள்ளியில் 4 வது வகுப்பில் 'மின்சார உபகரணங்கள்' பற்றிய ஒரு விசேஷ பிரிவு உண்டு. இதில் ஆண்கள் மட்டும்தான் சேர்க்கப்படுகிறார்கள். பெண்ணுக்கு இந்தப் பிரிவு கிடையாதாம்! அதனால், சில நாட்கள் இப்பிரிவில் சேர்ந்து படித்த ஒரே பெண்ணையும் நிறுத்தி விட்டனர்! "ஆணுக்கு ஒரு நீதி, பெண்ணுக்கு ஒரு நீதியா?" என்று கேட்டு இப்பெண் பிரதமர் ராஜீவுக்குக் கடிதம் எழுதியிருக்கிறாள்.

இத்தனைக்கும் இந்த புரட்சிகரமான பள்ளி தனியாருடையதல்ல. 'அணுமின் சக்தி' இலாகாவின் (Atomic Energy) பள்ளி! விஞ்ஞானத்தில் 'அணுசக்தி' கண்டுபிடிக்கும் அளவு முன்னேறி என்ன பயன்?

— சம்பத்குமாரி.

சென்ற இதழில் பெண்களைப் பற்றி ஆண்கள் கூறியிருந்த கருத்துக்களைப் 'பத்திரிகையிலே போடாதீங்க!' என்ற தலைப்பில் வெளியிட்டிருந்தோம். நூற்றுக்கணக்கான சகோதரிகள் பதிலுக்குச் சீறிச் சினந்து எழுதியிருக்கிறார்கள். சாம்பிளுக்கு ஒன்று —

போராடும் மயில்கள்...

"திருமணம் வாழ்க்கை ஒப்பந்தமா? ரொக்கத்தின் நிர்ப்பந்தமா?" என்று பெருமுழக்கமிட்டபடி ஆயிரத்துக்கும் மேற்பட்ட பெண்கள் மயிலாடுதுறை நகர வீதிகளிலே ஊர்வலம் வந்தனர். தருமபுரம் ஞானாம்பிகை அரசினர் மகளிர் கல்லூரி முதல்வர் டாக்டர் வே. அ. வசந்தா தலைமையில் மயிலாடுதுறை, குடந்தை, தஞ்சை, திண்டுக்கல் கல்லூரிப் பேராசிரியைகள், மாணவிகள் ஆகியோர் கலந்து கொண்ட மயிலாடுதுறையின் வரலாறு காணாத மாபெரும் பெண்ணெழுச்சிப் பேரணி நகரையே உலுக்கி விட்டது.

பெண்ணுரிமை இயக்கம், வரதட்சிணை ஒழிப்பு இயக்கம், ஊனமுற்றோர் நல வாழ்வு இயக்கம் எனும் முப்பெரு விழாவாக இங்கு நடைபெற்றது. வெற்றிக்குத் துணை நின்றவர்கள் கல்லூரிக் கல்வி துணை இயக்குனர் சி. பார்வதியும், திண்டுக்கல் அரசினர் மகளிர் கல்லூரி முதல்வர் வசந்தி தேவியும் ஆவர்.

— ச. திலகவதி.



உங்கள் அன்னையும் பெண்தானே

சென்ற இதழில் 'பத்திரிகையிலே போடாதீங்க' என்றதலைப்பில்தற்காலப்பெண்களைப் பற்றி ஆண்கள் என்ன நினைக்கிறார்கள் என்று சில ஆண்களின் கருத்துக்கள் வெளியாகி உள்ளன. அதில் திருவாளர்கள் கவிஞர் முருகதாசன், எருக்கூர் எஸ். லட்சுமி நாராயணர், P. T. ஜெயக்குமார் ஆகியோர் பெண்களைப் பற்றித் தங்கள் கருத்துக்களைக் கூறியுள்ளனர்.

குறிப்பாக கவிஞர் முருகதாசன் என்பவர் எழுதியது. 'பொதுவாகபெண்கள் என்றாலே அவருக்கு அலர்ஜியாம். ஆம். அது உண்மை என்பதை அவருடைய கருத்துக்கள் நிரூபிக்கின்றன. 'சமுதாயம் இன்று பல விதத்திலும் சீரழிந்து வருவதற்குக் காரணமே பெண்கள் தான்' என்று ஒரு அபத்தமான 'உண்மையைக்' கூறியுள்ளார்.

ஒரு நாட்டையே ஆண்டு, உலக நாடுகளிடையே பாரதத்தின் பெருமையையும் புகழையும் விண்ணளவு உயர்த்திய அன்னை இந்திரா ஒரு பெண்தான். பூதவுடலை நீத்த பின்பும், உலகின் மிகச் சிறந்த பட்டங்களை இன்றும்பெற்றுவரும் அந்தப்பெண் தெய்வம் ஒரு பெண்தான்.

இன்னொரு அபத்தம்—

என்னதான் கணவன் செய்தாலும் அவன் ஒரு பெண்ணுக்குத் தெய்வம்தான். கல்லானாலும் கணவன், புல்லானாலும் புருஷன் தான்' உண்மைதான். எனக்கொரு சந்தேகம் கவிஞரே! 'என்னதான் செய்தாலும்' என்பதற்கு விளக்கம் தர முடியுமா?

குடித்தாலும், குடி போதையில் அக்கினி சாட்சியாக அவரே சொல்லியது போல் பெண்ணுக்கு வேலியாகத் தாலியைக் கட்டிய அருமை மனைவியை ஆடு மாடுகளை அடிப்பது போல் அடித்தாலும், எரியும் சிகரெட்டால் அவள் உடல் முழுக்க சுட்டாலும், வரதட்சிணை பாக்கி வரவில்லை என்பதால் அவள் கை கால்களைக் கட்டி, மண்ணெண்ணெயை ஊற்றி, எந்த அக்கினி சாட்சியாக மணந்தானோ அதே அக்கினியால் சாம்பலாக்கினாலும், தன் பதவி உயர்வுக்காகவும் பெரிய மனிதர்களிடம் தன் காரியம் தடையின்றி நடக்க வேண்டும் என்பதற்காகவும் தன் அருமை மனைவியையே 'தாரை' வார்த்தாலும், இன்னும் இப்படிப்பட்ட 'நல்ல' காரியங்கள் எதைச் செய்தாலும் அந்தப் புண்ணியவான் ஒரு பெண்ணுக்குத் தெய்வம் தான்... ஒத்துக் கொள்ள வேண்டுமா கவிஞரே இதை?

'பொது இடங்களில் பெண்கள் பெரிதாக என்ன கிழித்து விடப் போகிறார்கள்?' மாதர் சங்கங்கள் மூலம் பெண்கள் என்னென்ன 'கிழித்திருக்கிறார்கள்' என்பதை கவிஞர் அறியாமல் இருப்பது பாவம் அவர் குற்றமில்லை. பத்திரிகை கூடப் படிக்காத ஒரு பாமரக் கவிஞர் போலும்.

'பெண்களை மதிக்கிறேன், பெண்கள் பெண்களாக நடந்து கொண்டால்' அதையே தான் கவிஞரே நாங்களும் சொல்கிறோம். கணவனைத் தெய்வத்தைவிட மேலாக நினைக்கிறோம். மதிக்கிறோம். கணவன் கணவனாக நடக்கும் வரை.

அடுத்து திரு. பி. டி. ஜெயக்குமார்:

'இந்தக் கால இளைஞர்களுக்குப் பெண்களைப் பல விதத்திலும் பிடிப்பதில்லை என்பது உண்மைதான்.

மிஸ்டர் ஜெயக்குமார்! பெண்களைப் பிடிக்கவில்லை என்பதால் அவர்களைப் பார்க்காமல், சிரிக்காமல், கிண்டல் பண்ணாமல், அழகான ஒரு பெண்ணைப் பார்த்தால் அவள் கடைக்கண் பார்வைக்கு ஏங்காமல் மொத்தத்தில் பெண் வாடையே பிடிக்கவில்லை என்று துறவியான இந்தக் கால இளைஞர்கள் எத்தனை பேர் என்று சொல்ல முடியுமா?

விதவைகள் பொட்டு வைத்துக்கொள்ளக் கூடாது என்பது நமது பண்பாடுகளில் ஒன்று தான் ஒத்துக் கொள்கிறேன். ஒரு இளம் பெண் திருமணமான சில மணி நேரங்களில், சில மாதங்களில், இல்லற வாழ்வின் வாயிலில் காலடி வைக்கும் போதே கதவுகள் மூடிக் கொண்டால், மலர்ந்து மணம் வீசப்போகிறது என்று கற்பனை பண்ணிக் கொண்டிருக்கும் போது மலராமலே வாடி விட்டால் அது யார் குற்றம். பெண்ணின் குற்றமா?

மனைவி இறந்த மறுநிமிடமே இரண்டாம் மனைவியை ஆண்கள் தேடும் போது கணவனை இழந்த உடனே பெண்கள் பூவையும் பொட்டையும் இழந்து வெண் புறாக்களாக மூலையில் ஒடுங்கச் சொல்கிறீர்களே நீங்கள் இதயம் உள்ளவர்தானா? இந்தக்கால இளைஞர் தானா?

சடங்குகளும் சம்பிரதாயங்களும் நம்மால் ஏற்படுத்தப்பட்டவை. சந்திரனுக்கே குடியேறப் போகும் காலம் இது. காலத்துக்குத் தகுந்தாற் போல் நாமும் மாற வேண்டாமா சகோதரரே?

தாற்றுதீர்கள். உங்களை ஈன்றவரும், உங்களைக் கைப்பிடித்தவரும் ஏன் உங்கள் மகளும் கூட பெண்கள் தான் என்பதை மறந்து விடாதீர்கள்.

பெண்களின் தாய்மை ஒன்றே அவர்கள் தியாகத்திற்கு விளக்குகள்.

— சரஸ்வதி கோவிந்தன், கோவை.


ஹார்லிக்ஸ் எங்களுடைய குடும்ப நண்பன். ஆபீஸிலிருந்து களைப்புடன் திரும்பிவரும் என் கணவருக்கு, காலேஜ் மற்றும் டான்ஸ் கிளாஸை முடித்துக் கொண்டு வரும் என் பெண்ணிற்கு, ஸ்கூல் முடிந்து திரும்பும் புட்பால் வீரனான என் பையனிற்கு—ஏன், தினமும் கடைகண்ணி போய் திரும்பும் எனக்கும்தான்—ஹார்லிக்ஸின் துணை ரொம்ப முக்கியம். எங்கள் குடும்பத்தின் நலனிற்காக நான் ஹார்லிக்ஸையே நம்பறேன்.
Horlicks
The Great Nourisher
Piccadilly Restaurant
EMPORIUM
சிறந்த ஊட்டச்சத்துமிக்க பானம்

வண்டி ஓட்டி வறுமையை ஓட்டியவர்



இந்த நாட்டின் ஒரே பெண் டிரக் டிரைவர் என்ற பெருமையைப் பெற்றிருப்பவர், முப்பத்தைந்து வயதே ஆன பார்வதி பாய் ஆர்யா ஆவார்.

'என்னது! ஒரு பெண்மணி டிரக் டிரைவராயிருப்பதா? மலரைப் போன்று மென்மையான உள்ளமும், உடலமைப்பும் கொண்ட ஒரு பெண்ணால் **Heavy Vehicles** ரகத்தைச் சேர்ந்த, கடினமான பாரங்களைச் சுமந்து செல்லும் ஒரு பெரிய ட்ரக்கின் ஓட்டுனராய் இருக்கமுடியுமா என்ன?' என்றெல்லாம் ஆச்சரியப்படுகிறீர்களல்லவா?

ஆனால் உண்மைதான் அது. பாறை போன்ற மன உறுதியும், துணிவும் தன்னம்பிக்கையும், சலியா உழைப்பும் சேர்ந்த மொத்த உருவம்தான் பார்வதி பாய் ஆர்யா.

மத்தியப் பிரதேசத்திலுள்ள மந்த்ஸௌர் என்ற இடத்தைச் சேர்ந்த பார்வதி, தம் பெற்றோருக்குப் பிறந்த பதினொரு குழந்தைகளில் மூத்தவராவார். அவருடைய தந்தையின் சிறியதான விறகுக் கடை வியாபாரத்தில் கிடைத்த வருவாய் அந்தப் பெரிய குடும்பத்துக்குப் பற்றாக்குறையாக இருந்த போது, தந்தைக்கும் அடிக்கடி உடல் நலக் குறைவேற்பட்டு அதனால் வியாபாரம் மந்தமாகி குடும்பம் வறுமையில் சிக்கித் தத்தளித்த போது, மூழ்கவிருந்தவனுக்குக் கிடைத்த மரக்கலமாய் பார்வதி தானே வலிய முன் வந்து தந்தையின் யா வியாபாரத்தை கவனித்துக் கொள்ளும் பெரும் பொறுப்பை ஏற்றார். அப்போது அவர் பதினொரு வயதே நிரம்பியிருந்த சிறு பெண்ணாயிருந்தார்!

இப்படியாக, ஃபாரஸ்டு டிப்போவிலிருந்து இவருடைய கடைக்கு மரக்கட்டைகள் வண்டி மூலமாக எடுத்துச் செல்லப்படுவதற்கு உதவுவதில் ஆரம்பித்தது அவருடைய முதல் தொழில் பயிற்சி. பின்னர், வாகன உரிமையாளர்கள் **Transport charge** என விறகுக் கட்டைகள் ஏற்றிச் செல்ல எக்கச்சக்கமாய்ப் பணம் தீட்டியதில், தவணை முறையில் ஒரு செகண்ட் – ஹாண்டு டிரக் வாங்கினார். அதற்கு ஒரு டிரைவரை அமர்த்தி வைத்து, அந்த டிரைவர் நேரத்தின் அருமையையோ, உழைப்பின் பெருமையையோ உணராதவராய் இருந்ததால், பார்வதி தானே டிரக் வண்டி ஓட்டக் கற்றுக் கொண்டார். அதற்கு அடுத்த கட்டமான லைசென்ஸ் பெறுவதற்கும், அவர் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் பெரிதும் போராடிப் பிறகே வெற்றி பெற முடிந்தது. பிறகென்ன? ஆரம்பத்தில் கரடு முரடாயிருந்த அவருடைய வாழ்க்கைப் பாதை பின்னர் போகப் போக தங்கு தடையற்ற ஒரு சீரான பாதையாய் அமைந்து விட்டது.

தந்தையின் விறகுக்கடை வியாபாரம் செழித்துக் கொழித்து நல்ல லாபத்தை ஈந்தது. மந்த்ஸௌரில் அவர்களுடைய மண் குடிசை இருந்த இடத்தில், பதினொரு அறைகள் கொண்ட ஒரு இரண்டு மாடிக் கட்டிடம் எழும்பியது. ஒன்பது ஷாப்பிங் கொட்டகைகள் கட்டப்பட்டு அதில் மூன்று வாடகைக்கு

விடப்பட்டது. இன்னொன்றில் அவருடைய இளைய சகோதரிக்கு, ரெடிமேட் கார்மெண்ட்ஸ் கடை வைக்க இடம் கொடுத்துள்ளார், பார்வதி பாய்.

வாழ்க்கையில், அவருடைய விருப்பமெல்லாம் ஆண்களைப் போன்று, அவர்களுக்குச் சரிநிகர் சமானமாய்சவாலான வேலைகளை ஏற்றுச் சமாளித்து வெற்றி பெறுவது தானாம்! அதனாலேயோ அதற்கேற்ற உயரமும் (5 அடி 6 அங்குலம்) பருமனான தோற்றமும் பெற்றிருப்பவர் போன்று பார்வதி. தன்னால் ஒருசேர முந்நூறு கிலோ மீட்டர் தொலைவு சிரமமின்றி வண்டியோட்ட முடியும் என்கிறார்!

அதேபோல், 'ஒரு கையால் வண்டியோட்டியவாறே, மற்றொன்றால் துப்பாக்கியைப் பிடித்துக் குறி தவறாது சுடும் வல்லமையும் பெற்றிருப்பவர், பார்வதி. இன்னும், வெறும் ஒரு தடிக் கம்பை வைத்துக் கொண்டு ஒரே சமயத்தில் எதிர்ப்படும் பத்து எதிரிகளையும் சமாளிக்கக் கூடிய திறன் உண்டு அவருக்கு.

இது பார்வதியின் ஒரு பக்கம் என்றால் மறுபக்கத்தில் அவர், கல்லுக்குள் ஈரமாய், முட்களுக்கிடையில் மலராய். ஒரு பெண்ணுக்குரிய லட்சணம் கொண்டு, ஏழை எளியவர்களுக்கு உதவக் காத்துக் கொண்டிருக்கும் ஒரு மென்மையான இதயம் படைத்தவராய் காட்சியளிக்கிறார்.

மாவட்டரீதியிலான இந்திரா காங்கிரஸின் பெண்கள் பிரிவின் பிரஸிடெண்டாகவும், சிறந்த சமூகநல சேவகியாகவும் விளங்கும் பார்வதி, சில மாதங்களுக்கு முன் அந்த வட்டாரத்தில் கொடிய வறட்சி நிலைமை ஏற்பட்ட போது, தானே முன்வந்து தன்னுடைய ஒத்துழைப்பால் அந்தப் பகுதிக்கும், அப்பால் தொலைதூர கிராமங்களுக்கும் கணக்கற்ற கைப்பம்புகளை நிறுவக் காரணமாயிருந்தார். பல சமூக சேவைகளையும் செய்து வருகிறார்.

— வி. சாவித்திரி.

இந்து சமய மாதர் மன்றம்

ஆண்டவனைப் பாடி முதலில் மனதைத் தூய்மையாக்கி, பின்னர் சமூக சேவை செய்ய வேண்டும் என்பதே எங்கள் நோக்கம்.

'நிர்மல் ஹ்ருதாய்' என்றழைக்கப்படும் தெரசா ஹோமில் உள்ள குழந்தைகளுக்கு அவ்வப்போது துணிகள் சேகரித்து அனுப்புகிறோம்.

ஆளுக்கு ஒரு கிலோ அரிசி விதம் முடிந்த போதெல்லாம் வள்ளலார் சங்கத்துக்கு உதவுகிறோம்.

ஏழை மக்களுக்குத் திருமாங்கல்யம் செய்து உதவுகிறோம்.

ஏழைக் குழந்தைகளுக்குப் பூணூல் போடும் போது பொருளுதவி செய்கிறோம்.

அடுத்துள்ள பிள்ளையார் கோவில்களில் திருப்பணி நடக்கும் போது தக்க பொருளுதவி செய்வது இன்னும் அநேக சிறுசிறு உதவிகள் செய்கிறோம்.

இம்மன்றம் 17.10.72 ல் அலமேலு ராமகிருஷ்ணன், சரஸ்வதி சீதாராமன் இவர்களால் துவக்கப்பட்டது. அன்று முதல் சாந்தா ராமமூர்த்தி செயலர், கணக்கர் பதவிகளைத் திறம்பட ஏற்று நடத்தி வருகிறார். இம்மன்றம் 13 ம் ஆண்டு விழாவை மகிழ்ச்சியுடன் நடத்த எதிர்நோக்கி இருக்கிறது. இன்றுபோல் என்றும் இம்மன்றம் தழைத்தோங்க எல்லாம் வல்ல இறைவன் அருள் புரிவானாக.


மன்றத் தலைவி,
சரஸ்வதி சீதாராமன்



பாரம்பர்ய முறையில் ஜாமூன்கள் செய்ய பலமணிநேரம் வேண்டும்




இப்போது 'ருசி'யின் உதவியால் நிமிடங்களில் தயார்



பாரம்பர்ய சுவையில் குலோப் ஜாமூன்களை சில நிமிடங்களில் உருவாக்கித் தருகிறது 'ருசி'. நிறுவை வேண்டாம். அளவை வேண்டாம். காத்திருக்கவும் வேண்டாம். ஒவ்வொரு குலோப் ஜாமூன் மிக்ஸும் தரமான பொருட்களின் சிறப்பானதொரு கலவை. ஒரு பாக்கெட்டை பிரிப்பீர் — மிக விருப்பமான, நாவில் நீர் ஊறச் செய்யும் ரசமான, பொன்னிற குலோப் ஜாமூன்களை உருவாக்க நீங்கள் தயார். வாயிலிட்டவுடன் கரையும் வளமான ஜாமூன்கள்.

இப்போது கிடைக்கிறது. ருசி'யின் புதிய பம்பாய் ஹல்வா மிக்ஸ்



Ruchi

ருசி குலோப் ஜாமூன் மிக்ஸ்

அயல்நாட்டு விற்பனையாளர்களின் வர்த்தக விசாரணைகளை வரவேற்கிறோம்.

9363 TM

5 வருடம் உத்திரவாதமுள்ள 'மெரி' சூப்பர் ஸ்பெஷல் தங்க கவரிங் நகைகளை 15 வருட ஆராய்ச்சியின் பலனாக இந்தியாவில் முதல் முறையாகத் தயாரித்து இந்தியா முழுவதும் அதிக அளவில் வி.பி.பி. மூலம் அனுப்பி வரும் ஸ்தாபனம். சகல விபரங்களுக்கும் இனும் கேட்லாக் வாங்கிப் பார்க்கவும் இதில் உள்ள நம்பர்களைக் குறிப்பிட்டு எழுதினால் வி.பி.பி. மூலம் பொருட்கள் அனுப்பப்படும். (வி.பி.பி. சார்ஜ் தனி)



MERI GOLD COVERING WORKS. (Estd: 1963)
P.O. BOX 1405, 14, RANGANATHAN STREET
T. NAGAR MADRAS-600 017 INDIA

கேசவர்த்தினி....நீண்ட அடர்த்தியான கூந்தலுக்கான பரம்பரை இரகசியம்

நீங்கள் நாள்தோறும் உபயோகிக்கும் தேங்காய் எண்ணெயில் சிறிதளவு கேசவர்த்தினியை கலந்து தேய்த்தால், உங்கள் கூந்தல் நீண்டு, ஒளிகொண்டு திகழுவதைக் காண்பீர்கள். மேலும், உங்கள் கூந்தல் அடர்த்தியாகவும், கருமையாகவும் காணப்படும்.

இன்றே ஒரு பாட்டில் கேசவர்த்தினியை வாங்குங்கள்.



கேசவர்த்தினி

கூந்தல் தைலம்

கேசவர்த்தினி ப்ராடெக்ட்ஸ்
சென்னை-600 087



OBM 8712 TM



"அன்னைக்கு இட்ட தீ"

ர.ச.கிருஷ்ணன்

"தஹன ஜனித தாஹதாப
உபசமனார்த்தம்
கடோதகம் விபா."

— தகனத் தீயில் பிறக்கின்ற தாகமும், வெப்பமும் இந்த மண் பானை ஜலத்தினால் தணிக்கப்படட்டும்.

எச்சுமி என்கிற லட்சுமிக்கு, அம்மாவிற்கு சஞ்சயனம் முடிந்து மூன்றாம் நாள் கிரியை தொடங்கிவிட்டது.

வீடு, வாசல் என்று வசதியோடு வந்தவள். அவளுக்கு அந்திமக்கிரியைக்கு இடம் கிடைக்கவில்லை. கடைசியில் ஊர்க்கோடியில் அபரக்கிரியைக்கென்றே கட்டப்பட்ட சாவடியில் காரியங்கள் ஏற்பாடாகியிருக்கின்றன.

எச்சுமியின் ஆவி ரூபம் மண் பரப்பில் கல் ஊன்றி ஆவிர்பவித்திருக்கிறது. நிழலாக பச்சைத் தென்னங்கீற்றில் முடையப்பட்ட பந்தல். இருபுறமும் துவார பாலகர்களைப் போல் பிரித்து வைக்கப்பட்ட தென்னம் பிள்ளைகள். பக்கத்தில் வெட்டி வைக்கப்பட்ட இளநீர்க் காய்கள். அவளுடைய கடைசிப் பயணத்திற்கு ஒரே சாட்சியாக அவளைப் போர்த்த வலைத் துணி மடித்து வைக்கப்பட்டிருக்கிறது. பக்கத்தில் அழுது வடியும் ஒரு அகல் விளக்கு.

கோபால கனபாடிகளின் குரல் கணீரென்று எழும்புகிறது.

"இதோ பாரு, சாமா, காரியம் தொடங்கிவிட்டால் கலங்கக் கூடாது. மேலே காரியம் ஆகணும் பாரு..."

"உம், கையில் பானையை எடுத்துக் கொண்டு சொல்லு —

"தஹன ஜனித தாஹ தாப..."

கலங்கக் கூடாதாமே!

மாமா யாரிடமோ பிரலாபித்துக் கொண்டிருப்பது காதில் விழுகிறது.

"மஹா லட்சுமியாட்டம் நிறைந்த சுமங்கலி. நிமிஷமாப் போயிட்டாள்."

மஹாலட்சுமியாகவா வாழ வைத்தார்கள்? அவளை மட்டின லட்சுமியாகவல்லவா வதைத்தார்கள்?

ஊராரைப் பொறுத்தவரை எச்சுமி எச்சமாகத் தள்ளப்பட்டவள். அவள் ஒரு வாழா வெட்டி.

அப்பா வெட்டியாகத் திரிந்து அம்மாவை வாழாவெட்டியாக்கினார். அது மட்டும் யார் கண்ணிலும் படவில்லை.

சொத்தையெல்லாம் சீட்டு, குதிரை, கூத்து என்று வாரியிறைத்த ஜன்மம். அவரைக் கண்டிக்க ஊரில் ஜனம் கிடையாது. 'கொண்டவன் பாக்கியம்' என்று பாட்டி கரிப்பாள்.

சீதனமாக எச்சுமி கொண்டு வந்த சொத்து, என்ன, ஸ்வீகாரம் போனதில் கிடைத்த சொத்து என்ன, 'ராமய்யருக்கு இரட்டை பீட்டன் வண்டி' என்று ஏனங்குடி கிராமமே பேசிக் கொள்ளும்.

சீட்டாட்டப் பைத்தியம் பிசாசாக அப்பாவை உலுக்கும். நேரம், நாள், கணக்கு, பணம் தண்ணீராகக் கரைவது எதுவுமே அவருக்குப் புரியாது.

கணக்கில்லாமல் புரளுவதற்குப் பணம்; கணக்கு கேட்க ஆளில்லை என்று எல்லாவற்றையுமே ஊதிவிட்டவர்.

கடன்காரர்களின் நெருக்கல் அதிகமானால் கையில் கிடைப்பதைச் சுருட்டிக் கொண்டு மறைந்து விடுவார். இதில் தாரதம்யம் என்பதே கிடையாது.

தாத்தா செத்துப் போன இரண்டாம் நாள் இப்படித்தான் வீட்டை விட்டு ஓடிப் போனார். என் கை எள்ளுத் தண்ணியும்தான். தாத்தாவிற்குப் பிராப்தமாயிற்று.

அப்பா வீட்டை விட்டுப் போவதற்காகவே காத்திருப்பார்கள் அமீனா, கடன்காரர்கள் எல்லாம். வீட்டை மொய்த்துக் கொள்வார்கள். அவர்களுக்கு அம்மாவுடைய நகைகள் ஈடுகொடுக்கும்.

அப்பாவின் அறிமுகமே எனக்கு என் மூன்றாவது வயதில்தான். ராத்திரி பத்து மணி இருக்கும். தூங்கிக் கொண்டிருந்த என்னை எழுப்பி, 'உன் அப்பா வந்திருக்கார் பாருடா' என்கிறாள் அம்மா. மலங்கமலங்கப் பார்த்துவிட்டு ஒன்றும் புரியாமல் மீண்டும் அம்மாவிடமே ஒடுங்கிக் கொள்கிறேன்.

அவருடைய காடாறு மாதம் போதெல்லாம் ஊராருடைய வம்பு, இளக்காரம் இவற்றை நாங்கள் விழுங்கிக்கொள்ள வேண்டும்.

ஒருமுறை அவர் வீட்டை விட்டுப் போய் இரண்டு நாட்களாகி விட்டன. வீடு இன்

னும் திரும்பவில்லை.

வீட்டில் எல்லார் முகத்திலும் சவக்களை. துக்கம் விழுந்த வீடு போல இருக்கிறது.

அப்போது லனி — பக்கத்து வீட்டு ஏழு வயதுக் குழந்தை நுழைகிறாள்.

"மாமி, உங்ககிட்டே நேத்திக்கு என்னை சீயக்காய் கொடுத்தாளாமே. அதைத் திருப்பி வாங்கிக் கொண்டு வரச் சொன்னா."

"எதுக்கடி?"

"உங்களை மங்கலிப் பெண்டுகளுக்குச் சொல்லியிருந்தாளாமே. எங்க அக்கா

பாத்திரங்களை வாங்கிக் கொண்டு திரும்பிப் போன லனி வாசலில் என்னைப் பார்த்ததும், "சாமா, உங்க அப்பா எங்கே போயிருக்கார்" என்று கேட்கிறாள்.

விஷயம் புரிந்தது.

"கொண்டவனை வீட்டில் தக்க வைக்கத் துப்பு கிடையாது. மங்கலிப் பெண்டுகள் சாப்பிடப் போகிறாளாம்."

இது என் பாட்டி.

ஒரு சமயம் வாசலில் பக்கத்து அகத்து காமு மாமி நின்று கொண்டிருக்கிறாள். நிம



வையே சொல்லிட்டாளாம். உங்களை வர அவசியமில்லை என்று சொல்லச் சொன்னா."

"உங்க அக்காவையும் தவிர்த்துத்தானே என்னைப் பெண்டுகள் சொல்லியிருந்தா. எதுக்கு இப்போ இப்படி?"

"எனக்குத் தெரியாது மாமி. என்னை சீயக்காய் பாத்திரத்தைக் கொடுக்கறேளா என்னை சீக்கிரம் வாடின்னு சொன்னா."

றென்று ''எச்சுமி. உங்காத்துக்குப்பால் கறக்க இடையன் வந்திருக்கான் போல இருக்கு; கொல்லையில சத்தம் கேட்கிறது. பாரு'' என்று அம்மாவை விரட்டுகிறாள்.

அம்மா போன கையோடு, ''பெண்ணும் மாப்பிள்ளையும் வர போது. இவ ஏன் தோசித்



தனமா வாசல்லே நிக்கணும்?'' என்று யாரிடமோ சொல்லுகிறாள்.

அம்மாவை வதைப்பதில்தான் எத்தனை விதங்கள்?

நினைவுகள் எங்கெல்லாமோ கொண்டு போகின்றன.

அக்கா விசாலத்திற்கு விடிந்தால் முகூர்த்தம். கல்யாணத்திற்கு மூன்று நாட்களுக்கு முன்னால்தான் எங்கே எங்கேயோ தேடி அப்பாவை அழைத்து வந்திருக்கிறது. வேதாளத்தை முருங்கை மரத்திலிருந்து கீழே இறக்கி வந்தாலும் பிரச்னை தீரவில்லை.

கல்யாண செலவிற்கு வைத்திருந்த பணம் அவர் கைக்குக் கிட்டிவிட்டது. லோகமே தெரியாமல் மூன்று சீட்டில் மூழ்கியிருந்தார். கள்ளைக் குடித்த குரங்கிற்குத் தேளும் கொட்டினால் துள்ளலுக்குக் கேட்கவா வேண்டும்?

விரதத்திற்கு நாழியாகி விட்டது என்று அம்மா கையைப் பிசைகிறாள்.

சீட்டாட்ட ஜமா நடக்கிற இடத்திற்கே போகிறாள்.

''சித்தே இங்கே வரேளா. முகூர்த்தத்திற்கு நாழியாயிடுத்து.''

''இந்த ரவுண்டு முடியணும். போட்ட பணத்தைத் திருப்பி எடுக்காமல் எழுந்திருக்கப் போவதில்லை.''

''நீங்க சொல்றது உங்களுக்கே நன்னாயிருக்கா? இந்தப் பாழும் சீட்டாட்டத்தில் எப்போதாவது ஜெயிச்சுக் கொண்டு வந்திருக்கேளா? உங்க பெண்ணை நீங்க கன்னிகாதானம் செய்து கொடுக்கணும். அதாவது நினைவுல இருக்கா?''

சீட்டாட்ட கோஷ்டியில் சலசலப்பு.

பாங்கர் நாணுவையர் நெளிகிறார். அவர் கை பலத்திருக்கும் சமயம் அது.

''என்ன ஓய், ராமய்யர் உம் பொண்டாட்டி சொல்றதைக் கேட்டீரா? நீர் எப்போதாவது ஜெயிச்சிருக்கீரா ஐயா?''

நாணுவையர் உசுப்பிவிடவும் அப்பா சீறுகிறார்.

''என்னடி முண்டம். பொட்டச்சியா லட்சணமா அடக்கமா பேசுடி. நான் வர முடியாது. என்ன பண்ணுவே?''

''பொம்மனாட்டி நான் என்ன பண்ணுவேன். ஆம்பிளை நீங்க கேட்கிறேளே அதுவே போறாதா என் அபாக்கியத்திற்கு? உங்க பெண்ணோட கல்யாணத்திற்குத்தானே கூப்பிடறேன்? சம்பந்தியெல்லாம் காத்திண்டு இருக்கா. அவாளைக் காக்க வைச்சுட்டு இப்படி சீட்டாட்டத்திலே சீரழியறேளே. உங்களைக் கெஞ்சிக் கேட்டுக்கறேன். இன்னிக்கு ஒரு நாள் நான் சொல்றதைக் கேட்டு கல்யாணத்தை ஒப்பேத்திக் கொடுங்கோ.''

''என்ன வேய் ராமய்யர். இப்ப சீட்டைப் புடிக்கப் போறீரா. இல்லே பொண்டாட்டி புடவைத் தலைப்பைப் புடிக்கப் போறீரா. சட்டுனு சொல்லும்?''

தொடர்ந்து எகத்தாளச் சிரிப்பு.

பக்கத்தில் இருந்த கூஜா. வெற்றிலைப் பெட்டி இவை அம்மா மீது பறக்கின்றன.

''இதுதாண்டி, என்னோட பதில். இப்போ நீ இங்கிருந்து போகலேன்னு கொலே விழும். நீயும்உன் பெண்ணும்பூட்டிண்டுசாகுங்கோ. எனக்குக் கவலேயில்லே.''

சொத்தெல்லாம் ஏலத்துக்குப் போய்க் கொண்டிருக்கிறது. வீடு ஒன்றுதான் மிஞ்சி யிருக்கு. அதுவும் கழுத்தளவு கடனில் நிற் கிறது என்று பேச்சு.

அப்பாவுடைய நடவடிக்கைகளில் கொஞ் சமும் மாற்றல் இல்லே.

அன்று சாயங்காலம். விளக்கு வைத்து ஒரு மணி நேரமாகியிருக்கும்.

நாணுவையர் தயங்கித் தயங்கி நுழை கிருர். ச்ரிகை வேஷ்டி, விசிறி மடிப்பு அங்க வஸ்திரம் எல்லாம் அட்டகாசம்தான். சென்ட் கடையே உள்ளே வந்திருப்பதைப் போலக் குமட்டல் நெடி.

நாணம் என்பதையே அறியாத நாணு வையர் உரிமையுடன் ஊஞ்சலில் ஊஞ்சலில் வந்து உட்காருகிருர். வெற்றிலேக் காவிப் பல் இளிக்கிறது.

ஊஞ்சலின்மேல் இருந்த வெற்றிலேச் செல்லம் திறக்கப்பட்டு ஒரு கை சீவல் வாய்க்குப் போகிறது.

ரேழி கதவிடுக்கில் என்னே ஒரு கையால் இழுத்து இறுக்கிப் பிடித்துக் கொள்கிருள் அம்மா. அவள் குரல் ஹீனமாக ஒலிக்கிறது.

''அவர் அகத்தில் இல்லேயே...''

''அது எனக்குத் தெரியும். ராமய்யர்தான் என்னே இங்கே அனுப்பினன். அவன் இன் னைக்கு வீடு திரும்ப மாட்டான். குழந்தைக்குச் சாதம் போட்டுச் சீக்கிரம் தூங்கப் பண்ணு.''

அம்மா மூலேயில் முடக்கப்பட்ட பூனே யாகச் சீறுகிருள்.

கையில் அரிவாள் மனேயுடன் கூடத்துக்கு விரைகிருள்.

''இதோ பாருங்கோ, நீங்க இங்கே இருந்தா ஒன்று வெட்டு என் கழுத்தில் விழும். இல்லே, மீறி கிட்டே வந்தா உங்கள்மேல் விழும். இரண்டில் ஒன்று தெரிந்தே ஆகணும். இப்போ நீங்க வெளியே போகப் போறேளா இல்லேயா?''

வெலவெலத்துப் போகிருர் நாணு.

''இதற்கெல்லாம் ராமய்யர் பதில் சொல் லியே ஆகணும். தெரிஞ்சுக்கோ.''

உறுமலுடன் வெளியேறுகிருர்.

> மாதவிலக்கு முன்னிட்டு பல நிகழ்ச் சிகளே ரத்து செய்ய வேண்டாம். தினம் தினம் காலேயில், வெறும் வயிற்றில் (உடைத்த கடலே) பொரிக்கடலேத் தின் ருல் போதும்! ஒருநாள் தின்ருல், மாத விலக்கு ஒருநாள் தாமதமாகவே வரும். ஒரு வாரம் தாமதமாக வேண்டும் என் ருல், ஒரு வாரம் காலேப் பொழுதிலே தின்று விடவேண்டும்.
>
> — ஆஞ்சலாமேரி.

காலேயில் ஒன்றுமே தெரியாதவரைப் போல அப்பா நுழைகிருர்.

ஸ்மசான அமைதியில் காலம் நகருகிறது. சாப்பிட்டு முடித்ததும் அப்பா ஊஞ்சலில் அமருகிருர்.

''நாணு நேத்திக்கு சாயங்காலம் வந்திருந் தானு?''

''ஆமாம்.''

''அவன்கிட்டே ஏதோ எடக்கா பேசினு யாம்.வெட்டுவேன், குத்துவேன்னு சொன்னி யாமே.''

''ஆமாம். சொன்னேன். வெட்கமில் லாமல் அதையும் கேட்கிறேனே. மேலே பேசினுல் இப்பவும் அதுதான் நடக்கும்.''

''வீடு ஏலத்துக்குப் போகப் போறது. அதை நினேவுல வச்சுக்கோ. அவன் எனக் காக பத்திரத்தைக் கிழிச்சுப் போடறேன்னு சொன்னுன். அதைக் கூட்டிச்சுவராக் கிட்டே.''

''தூ... நீங்களும் ஒரு மனுஷ்யனுட்டம்.''

காறித் துப்புகிருள் அம்மா.

கையோடு என்னேயும் அழைத்துக் கொண்டு கட்டிய துணியோடு வீட்டை விட்டு வெளியே கிளம்பியவள், யார் வீட்டிலும் தங்க முடியாமல் பெரிய பண்ணேயார் ரெட் டியார் வீட்டின் முகப்பிலேயே நாள் முழுவ தும் தங்கியதும், இரவு தங்க இடமில்லாமல் வேறு கிராமம் போனதும், பிறகு அம்மா அப்பளம் இட்டு, அடுப்படியில் வெந்து வயிற்றைக் கழுவிய நாட்களும் எல்லாம் பயங் கர சொப்பனங்கள்.'

அம்மா சாகும் சமயம் பார்த்து கரெக் டாக அப்பா வந்து சேர்ந்துவிட்டார். அவள் கழுத்தில் மிஞ்சிய தாலித் தங்கத்திற்காக இருக்குமோ?

கழுகிற்குத்தானே மூக்கில் வேர்க்கும் என்பார்கள்?

நினேவு மூட்டத்தை சாஸ்திரிகள் கலேக் கிருர்.

''என்ன சாமா, கையில் பானேயை வெச் சுண்டு தெகைஞ்சு உட்கார்ந்துட்டே... உம், சொல்லு. ''தஹன ஜனித தாஹ தாப... உம்...

அப்பா கத்துகிருர்.

''என்னடா வாயடைச்சுப் போச்சா? உன் அம்மாவோட க்ருதயம்டா. சிரத்தையோட செய்.

ஸ்கூலில் பாரதியாரோட பாஞ்சாலி சபதம் படிச்சிருக்கேன். 'இது பொறுப்ப தில்லே தம்பி, எரி தழல் கொண்டு வா'ன்னு பீமன் கதறினுனும். அந்தப் படிப்பெல்லாம் வியர்த்தம். அம்மாவைப் பணயம் வைத்த வரைக் கொளுத்தாமல் இருந்துட்டேன்.

இப்பத்தான் மனுஷ்யர்களோட சின்னத் தனம் எல்லாம் புரியறது. அம்மாவை அப்பா எப்பவோ உயிரோட எரிச்சுட்டார். இப்ப நான் எரிச்சது அவளோட வெறும் சாம்பல் கூடுதான்.

சாம்பலேப் போய் தீ தீண்டுமா என்ன?

தகன தாபமாவது, தாஹமாவது... எல் லாம் வெட்டிச் சடங்கு...

சாமா எழுந்துவிட்டான்.

ஸுமீத்தின் தனித்தன்மை

அதன் உயிர்நாடியாக அமைந்திருக்கும் கனரக மோட்டார்

கனரக மோட்டார் 30 நிமிடங்களுக்குத் தடைபடாமல் இயங்கும்.
விசேடமாக டிசைன் செய்யப்பட்ட எஃகு பிளேடுகளுடன்
குறைந்த அளவுள்ள அரைவைக்கு ஏற்புடைய அடிப்படைச்
சமையல் வேலைகள் அனைத்தையும் மிக விரைவாக
முடித்துத் தருகிறது ஸுமீத் டொமஸ்டிக் கிச்சன் மெஷின்.





உலர் அரவை: மிளகாய் வற்றல், கரம் மசாலா 2 நிமிடங்களில்



ஈர அரவை: உளுந்து, அரிசி மற்றும் தேங்காய் சட்னி 2 நிமிடங்களில்




மாமிசத்தைப் பொடிக்க 1 நிமிடம். பருப்புகளைப் பொடிக்க சில விநாடிகள்



தயிர் கடைய மில்க் ஷேக் செய்ய, முட்டையைக் கலக்க 1 நிமிடம்

இப்போது ஃபுட் ப்ரோஸஸர் அட்டாச்மெண்டை இணையுங்கள்



ஸுமீத்துடன் மற்றுமொரு அனுகூலமும் இருக்கிறது. விரும்பினால் புதிய ஃபுட் ப்ரோஸஸர் அட்டாச்மெண்டை இணைத்துக் கொண்டு எத்தனையோ காரியங்களைச் சாதிக்கலாம். அது 3.88 லிட்டர் கொள்ளளவுடன் உடைக்க முடியாத ஒளிபுகும் கிண்ணத்தையும் 5 மாற்று பிளேடுகளுடன் கொண்டது. ஸுமீத் டொமஸ்டிக் பேசிக் யூனிட்டுடன் இந்த ஃபுட் ப்ரோஸஸர் அட்டாச்மெண்டை இணைத்து, அது புரியும் அற்புதங்களைப் பாருங்கள்.

ஸுமீத்®

400 வா. 220-240 வோ ~ 30 நிமிடங்கள் ரேட்டிங்

கடுமையான சமையல் வேலைகளைச் சமாளித்திடவே கட்டுறுதியோடு உருவாக்கப்பட்டுள்ளது.

எப்போது நாங்கள் இலவசமாக இயக்கிக் காட்டுகிறோம் என்பதைக் கவனித்து வாருங்கள்—
உங்களுக்கென ஸுமீத் சிறப்பாக இயங்குவதைக் காணுங்கள்.

சர்வீஸ் சென்டர்கள்:

கோயம்புத்தூர்: ஜே. இன்ஜினியரிங் கார்ப்பரேஷன், சேலம் ரோடு, கோயம்புத்தூர் 641 018, போன்: 24379/25566/37137.

சென்னை: ... அண்ட் என்ஜினியர்ஸ் 81, ... 111 மவுண்ட் ரோடு, சென்னை-600 006, போன்: 450700/452055; **விவேக் ஏஜென்ஸிஸ்** 92/1 ஆர். எச். ரோடு, சென்னை-600 004, போன்: 76923/75661; **மெஸர்ஸ் விவேக் அண்ட் கம்பெனி,** 167, ... சாலை, சென்னை-600 017, போன்: 444129; **மெஸர்ஸ் விவேக் அண்ட் கம்பெனி** 205, புரசைவாக்கம் நெடுஞ்சாலை, சென்னை-600 017, போன்: 663545; **வி.ஜி. பன்னீர்தாஸ் அண்ட் கம்பெனி,** ... 40 மவுண்ட் ரோடு, சென்னை-600 002, போன்: 840234/840184.

மதுரை: ஜே. இன்ஜினியரிங் கார்ப்பரேஷன், 327 வடக்கு மாசி தெரு, மதுரை-625 001, போன்: 24028

திருச்சிராப்பள்ளி: ஸ்டாண்டர்டு எலெக்ட்ரிக் கம்பெனி, ... ரோட், திருச்சிராப்பள்ளி-620 002. போன்: 24343 கிளைகள்: தூத்துக்குடி, திருநெல்வேலி, சேலம், சென்னை.

OBM/3183A-1-TAM

இப்படித் திருத்தினேன்



பேங்கில் ஆபீசராக கண்ணுக்கு லட்சணமான கணவர், தனிக் குடித்தனம். குதித்துக் கொண்டுதான் வந்து இறங்கினேன். வந்து இறங்கிய மூன்று, நான்கு நாட்களிலேயே அக்கம் பக்கத்தினரின் அரசல் புரசலான வார்த்தைகள் காதில் விழுந்தது. போதாத குறைக்கு திருமணம் ஆனதற்கு என்று வீட்டிலேயே பார்ட்டி வைக்க இவருடைய பேங்கில் பணிபுரியும் பெண்மணியும் என் காதைக் கடித்தாள். ஒரு நிமிடம் அதிர்ச்சியாக இருந்தாலும் மறு நிமிடம் என்னை சட்டென்று சமாளித்துக் கொண்டு, "ஓ! எனக்குத் தெரியுமே, கல்யாணம் ஆன அன்னிக்கே எல்லாத்தையும் எங்கிட்டே சொல்லிட்டாரே". நான் சிரித்தபடி சகஜமாக இருக்க, வந்தவள் ஏமாற்றத்தோடு கிளம்பினாள். எனக்கு ஒன்று மட்டும் புரிந்தது. ஏதோ சிக்கலில் மாட்டிக் கொண்டு இருக்கிறார். 'கல்யாணம் ஆவதற்கு முன்னால் எப்படி வேண்டுமானாலும் இருந்துவிட்டுப் போகட்டும். இனிமேல் ஒழுங்காக இருந்தால் சரி' நினைத்தவாறே அவள் சொல்லி விட்டுப் போனதை சொல்ல, 'ஓஹோ என்னை மோசமானவன்கறியா?' அவர் 'வள்' ளென்று எரிந்து விழ,

'ஒங்க மேலே நம்பிக்கை இல்லாமலா அப்படி சொல்லி அனுப்பி வச்சேன். நீங்க இராமர் மாதிரி. நீங்களே உங்களைப் பத்தி சொன்னா கூட நான் நம்ப மாட்டேன்'. நான் பெருமையுடன் சொன்னாலும் உள்ளுக்குள் ஒரே சந்தேகமாக இருந்தது.

சந்தேகத்தை அதிகப்படுத்துவது போல் அடுத்து வந்த ஒரு வாரமும் அவர் பேங்கிலிருந்து ஒன்பதரை மணிக்கு குறைந்து வீட்டிற்கே வருவதில்லை. பியூன் ஏழு மணிக்கே பேங்கை பூட்டிக் கொண்டு வந்து சாவியையும் கொடுத்து விட்டுப் போய்விடுவான். மனதை திடப்படுத்திக் கொண்டு கணவரிடம் நயமாக பேசிப் பார்த்தேன்.

'இத பாரு! நான் அந்த பொண்ணு வீட்டுக்கு போறது நிஜம்தான். எங்களுக்குள்ளே இன்டலெக்சுவல் ப்ரண்ட்ஷிப்தான். வேறு ஒண்ணுமே கிடையாது' அவர் சத்தியம் போட்டு மறுக்க, எனக்கு அந்த சத்தியமே போலி என்று தோன்றினாலும்,

'எனக்கு உங்களைப் பத்தி தெரியாதா? நீங்க இராமர் மாதிரி' மேலுக்குச் சொன்னாலும் உள்ளுக்குள் ஒரே வேதனை. என்ன செய்வது?

அப்போதுதான் சட்டென்று அந்த யோசனை உதயமாயிற்று. அன்று அவருக்குத் தெரியாமலே அவர் பேங்கிலிருந்து கிளம்பிய போது பின் தொடர்ந்தேன். சரியாக அவர் இறங்கும் போது நானும் இறங்கவே,

'ஏய், நீ ஏன் இங்கே வந்தே?' அவர் கோபிக்க,

'எத்தனை நேரம் நான் தனியா இருக்கிறது?'

'என்னை வேவு பார்க்க வந்தியா?' அவர் கத்த. 'ஏன் இப்படி தப்பா புரிஞ்சுக்கறீங்க? எனக்கும் ஒங்க ரெண்டோட பேசணும்னு ஆசையா இருக்கு. உங்க ரெண்டு பேரோட பேச்சிலேயும் என்னையும்தான் கலந்துகோங்களேன்' என்று நான் கெஞ்ச, என் கணவர் கோபத்தோடு அதிர்ச்சியும் அடைந்தார். 'உள்ள இருக்கறதுங்களைவிட இங்க இருக்கிறது எவ்வளவு ஷோக்கா இருக்குது பார்த்தியா? எதுக்கு மடையன் கையை ஓங்கறான்' வழியில் போகும் எவனோ ஒருவன் சொல்ல ஐந்து நிமிடத்தில் ஆட்டோ பிடித்து வீடு வந்து சேர்ந்தோம். 'அவர் போனால் நானும் வருவேன்' என்று நான் பயமுறுத்த, 'சரி கெட்டலையத்தான் போறேன் வச்சுக்கோ' அவர் கத்த, நான் ஒங்க மேலே சந்தேகப்பட்டு வரலே. இங்கு தனியா இருக்க முடியலே. நான் அந்த வீட்டு தோட்டத்திலே ஒக்காந்துக்கறேன். நீங்க எப்ப வறீங்களோ அப்ப நானும் உங்களோடயே வந்துடறேன்' என் பயமுறுத்தல் பலனளிக்கவில்லை என்பது அடுத்த நாள் வந்த போதுதான் தெரிந்தது. என்னை மட்டும் வெளியில் வரக்கூடாது என்று கண்டிஷன் போட்டுவிட்டு சென்று விட்டார்.

மறுநாள் நானே அந்தப் பெண்ணின் போன் நம்பரை கண்டு பிடித்து வீட்டுக்கு அழைக்க, முதலில் மறுத்தவள் கணவன் அழைத்ததாகச் சொல்லவும் வந்துவிட்டாள். இனிமேல் இங்கேயே சந்தித்துக் கொள்ளலாம் என்றும் அவள் வீட்டில் வேண்டாமென்றும் புன்முறுவலாக சொன்னபோது, அதிர்ந்துவிட்டாள். போதாத குறைக்கு என் கணவரிடம் அவள் வீட்டிற்கு வந்திருப்பதை தெரிவிக்க ஆவேசத்தோடு வந்தவர், 'அந்தச் சாக்கடையெல்லாம் வீட்டுக்கு வரவழைச்சு நான் பரம அயோக்கியன்னு ஊரெல்லாம் தண்டோரா போடறியா?' என்று ஓங்கி, ஓங்கி அறைய, அடுத்த அறையில் இருந்தவள் 'சாக்கடை' என்று சொன்னதுமே போனவள்தான். அதன் பிறகு இருவருக்குமே ஒருவர் முகத்தை ஒருவர் பார்க்கும் தைரியம் வரவே இல்லை.

இன்று நான் அழகான இருகுழந்தைகளின் தாய். என் கணவரின் கடந்த காலத்தைப் பற்றித் தப்பித் தவறிக்கூட பேச்செடுப்பதில்லை. இப்போது குழந்தைகளின் மீதும், என் மீதும் உயிராக இருக்கும் இவரா ஒரு காலத்தில் அப்படி இருந்தார் என்று ஆச்சரியமாக இருக்கிறது.

●●●●●●



என்னுடைய அக்காளை என்னுடைய அத்தான் (அத்தை மகன்) நேசித்து மணந்து கொண்டார். இனிமையான வாழ்வில் விதி சிரிக்க, தலைப்பிரசவத்தின்போது அழகான பெண் குழந்தையை ஈன்றவள் நினைவு திரும்பாமலேயே இறந்து போனாள்.

அக்காவின் மீது உயிரையே வைத்திருந்த அத்தானுக்கு அதிர்ச்சி. பிரியமானவள் தன்னை விட்டுப் போக காரணமாக இருந்தவள் என்று அந்தக் குழந்தை மீது துவேஷம். அவர் கண்களில் குழந்தை பட்டுவிட்டாலோ வெறித்தனமாக சத்தம் போடுவார். சதா திட்டு, 'வெறுப்பை உமிழும் வார்த்தைகள்' பாவம்! அந்த இளம் சிசு என்ன செய்தது? குழந்தை வளர வளர அதனுடைய வெறுப்பும் அதிகமானதே தவிர அன்பாக ஒரு வார்த்தை கனிவாக ஒரு பார்வை, ஊஹூம்! கல் கரையவில்லை. தாய் முகம் அறியாது, தந்தை அரவணைப்பு இல்லாது குழந்தையும் வளர்ந்தது.

இந்த நிலையில் நான் அவருக்கு இளைய தாரமானேன். என்னிடம் அன்பாக இருப்பவர், அவளைக் காரணமில்லாமல் கரித்துக் கொட்டுவதும் அடிப்பதும் வேதனையாக இருந்தது.

தந்தைக்கு மகளின் மீது அன்பும் ஆசையும் வரும்படி ஏதாவது செய்ய நினைத்தேன். அவர் முன்னால் அவளை வேண்டுமென்றே இம்சிக்கத் தொடங்கினேன். அவர் கண்களில் படும்படியாக அவளை மாவட்டச் சொல்வது, தண்ணீர் அடிக்கும்படி செய்வது என்று அவள் வயதுக்கு முடியாத வேலைகளை செய்யச் சொல்லி கட்டாயப்படுத்துவேன். அவர் சென்றதும், நானே வேலைகளை செய்து முடித்துவிட்டு, "வேலைகளை செய்யவில்லை. ராத்திரி பட்டினி கிட" என்று அவர் காது பட இரைவேன். ஒரு மூன்று மாதம், பெண்ணை படாதபாடு படுத்துவது போல நடித்தேன்.

என்னுடைய கொடுமைகளும், கண்டிப்பும் அதிகமாக அதிகமாக அவர் இளகத் தொடங்கினார். அனுதாபம் பிறந்து அது இயல்பாக பாசமாய் மலர்ந்தது. குழந்தையிடம் பிரியமாய் நடந்து கொள்ளத் தொடங்கினார். நான் திட்டினாலும் அவர் பரிந்து பேச ஆரம்பித்தார்.

ஒருமுறை நான் அளவுக்கு மீறி திட்டியதும் அவருக்கு ஆத்திரம் பற்றிக் கொண்டு வந்து, "தாயில்லாக் குழந்தை! சொந்த அக்கா மகளையே கொடுமைப்படுத்தறியே ராட்சசி!" என்று என்னையே இரண்டு அடி சாத்தினார் என்றால் பார்த்துக் கொள்ளுங்கள்.

அதன்பிறகு, அவர் மகள் மீது பாசம் பொழிந்தார். சில நாட்கள் நான் போட்ட சித்தி வேஷத்தால் அவர் திருந்தி, என் பெண்ணுக்கு நல்ல தகப்பனாய், ஆசானாய், சிநேகிதனாய் ஆனார்!

— வேணி பிரகாஷ், சேலம்.

மொழி பெண்களின் முணுமுணுப்பு.
இலக்கணம் இல்லாத

—வெர்ஜில்.

நேர்மையான தியாகமே வாழ்வின் பூரண இன்பம்.
பரிபூர்ண

—ராஜாஜி.

தொகுப்பு: எஸ். விஜயா சீனிவாசன்.

ஜீன்ஸ் உடையும் முதுகு வலியும்

மிக இறுக்கமான, அதிகமான பட்டிகள் வைத்துத் தைக்கப்பட்ட ஜீன்ஸ் உடை முதுகுவலியை உண்டாக்குகிறது என்று அமெரிக்க சர்வகலா சாலையைச் சேர்ந்த புரொபசர் எட்வர்டு மார்ட்டிமர் கூறுகிறார். தொடர்ந்து, மிக இறுக்கமாக ஜீன்ஸ் அணிந்த, பள்ளிக்குச் செல்லும் இரண்டு பெண்களுக்கு முதுகுவலி ஏற்பட்டதென்றும், அவர்கள் ஜீன்ஸ் அணிவதை நிறுத்தி, நன்றாக நேராக உட்காரப் பழகியவுடன் முதுகுவலி நின்று விட்டதென்றும் இவர் கூறுகிறார்.

— ராஜி.

பருப்பில்லாமல் கல்யாணமா? என்பார்கள். கல்யாணத்தில் பருப்பைப் போடுவதற்குக்கூட மறந்து விடலாம். ஆனால் பந்தியில் அப்பளத்தைப் பரிமாறாமல் விட்டால் பெரிய சம்பந்தி சண்டையே வந்துவிடும். சாம்பார் சாதம், ரசம் சாதம் ஆகியவற்றுக்கு தொட்டுக் கொள்ள காய்கறிகள், பரிமாறப் பட்டாலும் அப்பளத்தைத் தொட்டுக் கொண்டு சாப்பிடுவதில்தான் தனி ருசியே இருக்கிறது.

அப்பளம் சுவையானது மட்டுமல்ல, இல்லத்தரசிகளுக்கு 'ஆபத் பாந்தவனாக'க் கை கொடுக்கக் கூடியதும்கூட! தட்டில் சாப்பாட்டைப் போட்டுவிட்டுக்கூட நொடிப் பொழுதில் அப்பளத்தைப் பொரித்துவிடலாம், அல்லது சுட்டுவிடலாம். அப்பளம் புரோட்டின், கால்சியம், கார்போஹைட்ரேட் போன்ற சத்துக்கள் நிறைந்த ஒன்றாகும்.

இவ்வளவு பெருமை வாய்ந்த அப்பளம் இன்னும் 'கல்லிடைக் குறிச்சி அப்பளமாக இருந்துவிட்டால் சுவையோ சுவைதான். பெரிய நகரங்களில் கல்லிடைக் குறிச்சி அப்பளம் எனச் சாதாரண அப்பளத்தை விற்கிறார்கள். உண்மையான கல்லிடைக் குறிச்சி அப்பளத்தைத் தேடி கல்லிடைக் குறிச்சிக்கே போனோம்.



கல்லிடை குறிச்சியில் மொத்தம் பதினெட்டு தெருக்கள் இருக்கின்றன. இந்தப் பதினெட்டுத் தெருக்களிலும் அப்பளம் செய்யும் தொழில்தான் குடிசைத் தொழிலாக நடைபெறுகிறது. இந்தத் தொழிலில் அதிகமாக பெண்கள் ஈடுபட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. சுமார் 1500க்கும் மேற்பட்ட பெண்கள் இந்தத் தொழிலைச் செய்கின்றனர்.

கல்லிடை குறிச்சி சன்னதித் தெருவில் அப்பளம் செய்யும் தொழிலை மேற்கொண்டு இருக்கும் சப்பு அம்மாளைச் சந்தித்தோம். அவர் சொன்ன விஷயங்கள் சுவையானவை:



அப்பளம் இல்லாமல்



"பரம்பரை பரம்பரையாக இந்தத் தொழிலை நாங்கள் செய்து வருகிறோம். என் கணவர் காலமானதற்குப் பிறகு இந்தத் தொழிலை நான்தான் கவனித்து வருகிறேன். என்னுடன் என் பையன்கள் கவனித்து வருகிறார்கள்.

ஆரம்ப காலத்தில் நானே மாவை இடித்து, சேர்க்க வேண்டியவற்றை எல்லாம் சேர்த்து பிசைந்து, உருண்டையாக்கி அப்பளம் இடுவேன். அப்போதெல்லாம் ஒரு நாளைக்கு 500,600 என்று நானே அப்பளம் இடுவேன். கல்லிடைக் குறிச்சி அப்பளத்திற்கு தனி மதிப்பு உலகம் எங்கும் உண்டு. அமெரிக்காவில் போய் கேட்டால்கூட கல்லிடைக்குறிச்சி அப்பளத்தைப் பற்றி சொல்வார்கள். அப்பளத்தின் புகழ் உயர உயர தேவைகள் அதிகமானதால் இன்று குடிசைத் தொழில் போல் அப்பளத் தொழில் ஆகிவிட்டது. ஜாதி மதம் பேதமின்றி இந்த அப்பளத் தொழிலை பெண்கள் செய்கின்றனர். முஸ்லீம் இனத்துப் பெண்கள்கூட இந்த அப்பளத் தொழிலை செய்கின்றனர் என்றால் பார்த்துக் கொள்ளுங்களேன்."

கல்யாண மா?

கல்லிடைக் குறிச்சி அப்பளத்திற்கு அப்படி என்ன தனி மதிப்பு? தனி ருசி?

"தாம்பிரவருணி ஆற்றங்கரை தண்ணீர் அப்பளத்திற்கு தனி ருசி கொடுக்கக்கூடியது. ஒரு மிருது தன்மையை அப்பளம் எளிதில் பெறுவதால் கல்லிடைக் குறிச்சி அப்பளம் தனி மதிப்பு கொண்டது. ஆண்டாண்டு காலமாய் இங்குள்ளவர்கள் இதே தொழிலைச் செய்வதால் அனுபவ மிகுதியால் நல்ல முறையில் உருப் பெறுகிறது அப்பளம். முழுக்க முழுக்க இது கையாலேயே செய்யப்படுவதால், அனுபவம் மிக்க 'கைப் பக்குவ'மும் சேர்ந்து இன்னும் சுவை பெறுகிறது."

இந்தத் தொழில் பெண்கள் அதிகமாக ஈடுபட்டு இருப்பதற்குக் காரணமென்ன?

ஒரு பொருளை ருசியாக, பக்குவமாக, பொறுமையாக செய்யக் கூடியவர்கள் பெண்கள்தான். அப்பள மாவு நன்றாக பிசையப் பட்டு இருக்கிறதா? சேர்மானங்கள் எல்லாம் சரியான விகிதத்தில் சேர்க்கப்பட்டு இருக்கிறதா? பிசைந்த மாவை கல்லில் போட்டு இடிக்கும்போது நன்றாக இடிபட்டு இருக்கிறதா? இவைகளை எல்லாம் ஒரு பெண்ணால்தான் துல்லியமாகக் கணிக்க முடியும், கவனிக்க முடியும். எனவேதான் இந்தத் தொழிலில் அதிகப் பெண்கள் ஈடுபட்டு இருக்கின்றனர்.

அப்பளம் எப்படி உருவாகிறது?

இது தொழில் ரகசியம் அடங்கிய கேள்வி. அப்பளம் உருவாக பலவித நிலைகள் இருக்கின்றன. ஒவ்வொன்றாக சொல்கின்றேன்.

விருதுநகரில் இருந்து உளுத்தம் பருப்பு எங்களுக்கு வருகிறது. அவற்றை நன்றாகக் குத்திப் புடைத்து அதில் இருக்கும் கழிவுப் பொருட்களை வெளியேற்றுவோம்.

எங்கள் ஊரில் பருப்பை திரிப்பதற்கென்றே சில மில்கள் உள்ளன. இந்த மில்களில் உள்ள யந்திரங்கள் கல்லினால் ஆனவை. எனவே மாவு நன்றாகத் திரிக்கப்படும். சிலர் வீடுகளில் கையால் கல் யந்திரத்தை வைத்துக் கொண்டும் மாவாக திரிப்பார்கள். இப்போதெல்லாம் ஒரு மூட்டை,



இரண்டு மூட்டை என்று பருப்பு திரிக்கப்படு வதால் மில்களையே நாடுகின்றோம்.

திரித்த மாவை நன்றாக சல்லடையால் சலித்து சுப்பியை வெளியேற்றுவோம். இந்தக் கப்பியை மறுபடியும் உபயோகப்படுத்திக் கொள்ளலாம்.

உப்பை தேவைக்கு தகுந்தாற்போல் எடுத்துக் கொண்டு தண்ணீரில் கரைத்து அதனுடன் பிரண்டையையும் சேர்த்துக் கொள்ள வேண்டும். பிரண்டைக்குப் பதிலாக இப்போது அந்த எஸென்ஸ் கூட கிடைக்கின்றது.

மாவைத் தண்ணீரால் நன்றாகப் பிசைந்து பின்பு தேவையான அளவுக்கு அதனுடன் சுண்ணாம்பு சத்துத் தண்ணீரையும் சேர்த்துக் கொள்ள வேண்டும்.

சில பேர் அப்பளத்தில் சீரகம் இருக்க வேண்டும் என்று ஆசைப்படுவார்கள். சில பேர் மிளகு இருக்க வேண்டும் என்று ஆசைப் படுவார்கள். தேவைகளுக்கு ஏற்ப மிளகையோ சீரகத்தையோ மாவோடு கலந்து நன்றாகப் பிசைந்து பெரிய சதுர கல்லில் வைப்போம். ஐந்தாறு பெண்களாக சேர்ந்து கொண்டு தட்டையான இரும்பு பிடிமானம் கொண்ட மர உலக்கையால் செங்குத்தாக இடிப்பார்கள்.

வெள்ளை மஞ்சள் தன்மை கொண்ட பிசைந்த மாவை நன்றாக பூர்ண மஞ்சள் தன்மை அடையும் வரை இடிப்போம். பெருங்காயத் தண்ணீரை இப்போது அப்பளத்தின் மீது ஊற்றி இன்னும் கொஞ்சம் இடித்தால் நல்ல மணத்தோடு அப்பள மாவு கெட்டியாக இருக்கும்.

பெரிய கெட்டியான அப்பள மாவை சிறு சிறு உருண்டைகளாக்கி அப்பளம் இடுவோம். இப்படித்தான் அப்பளம் தயாரிக்கப் படுகின்றது.

இங்கு நிறைய அப்பள டிப்போக்கள் இருப்பதாகச் சொல்கிறீர்கள்? வீட்டுக்கு வீடு அப்பளம் இடுவதாகவும் சொல்கிறீர்கள்? இந்தத் தொழிலில் போட்டி உண்டா?

உண்மையில் சொல்லப் போனால் அப்பளத் தேவை எவ்வளவு இருக்கிறதோ அந்த அளவுக்கு கல்லிடைக் குறிச்சியில் அப்பளம் தயாரிக்க முடியவில்லை. எனவே போட்டி என்பதே இல்லை. இன்னும்கூட நிறைய அப்பள டிப்போக்கள் உருவானாலும் நல்லதுதான்.



காஞ்சிபுரம் என்றால் எப்படி வீட்டுக்கு வீடு தறி இருக்குமோ, காஞ்சிபுரம் பட்டு எப்படி புகழ் வாய்ந்ததோ, அது மாதிரி கல்லிடைக் குறிச்சி என்றால் வீட்டுக்கு வீடு அப்பளம் செய்யும் தொழில்தான்! கல்லிடைக் குறிச்சி அப்பளம் என்றால் அதற்கு தனி மதிப்புதான்!

கல்லிடைக் குறிச்சி அப்பளம் புகழ்வாய்ந்தது என்கிறீர்கள்? எந்தெந்த ஊருக்கு இங்கிருந்து அப்பளத்தை அனுப்புகிறீர்கள்?

இந்தியா பூராவும் போகிறது. சிங்கப்பூர், அரேபியா, அமெரிக்கா, லண்டன் இப்படி தூர தேசங்களுக்கும் போகிறது.

இந்த அப்பளத் தொழிலில் வேறு என்ன விசேஷம்?

மழை காலமானால் இந்தத் தொழில் நடைபெறுவதில்லை. நவம்பர் டிசம்பர் மாதங்களில் இங்குள்ள பெண்களுக்குப் பூரண ஓய்வு தான்.

அப்பளத்தை இட்டு முடிந்ததும் தரை வாட்டம் காண்பிக்க வேண்டும். உடனே அப்பளத்தை வெய்யிலில் போடமாட்டோம். தரை வாட்டம் என்றால் ஈரமான அப்பளத்தை காற்றோட்டம் மிகுந்த அறையில் தனித் தனியாக சாக்குகளின் மீது பரப்பி காய வைப்போம். ஒருநாள் இப்படி இருந்த பின்பு பிறகு அடுத்த நாள் இவைகளை ஒரு அரை காய்ச்சல் சூரிய ஒளியில் வைத்து பிறகு ஐம்பதோ நூறோ தேவைக்கு ஏற்ப கட்டு கட்டாக கட்டுவோம்.

கல்லிடை குறிச்சியின் பதினெட்டுத் தெருக்களையும் சுற்றியபோது அப்பள மாவு இடிபடும் ஒலியும் மரப்பலகையில் அப்பளம் இடும் ஒலியும்தான் கேட்டது.

பெரும்பாலும் பெண்களே ஈடுபடுகின்ற இந்தத் தொழிலில் அப்பளக் கட்டைக் கட்டுவதற்கு மட்டும்தான் ஆண்கள் துணை புரிகின்றனர்.

இந்தத் தொழில் கணவனை இழந்த பெண்களுக்கு ரொம்பவும் கை கொடுக்கும் தொழிலாகவே இருக்கின்றது என்று சொல்ல வேண்டும்.

குடிசைத் தொழிலாக இதை அங்கீகரித்து தமிழக அரசு இந்தத் தொழிலுக்கு வரி விதிக்கவும் இல்லை.

புகைப்படங்கள்: கல்லிடை டேவிட்

போட்டோ: திருநம்பூர் சங்கரசுப்பிரமணியன்




"என் சமையல் திறன் வளர
உதவியது கோபி"
GOPI
Kitchen Machine
வாழ்நாள் முழுவதும் இலவச சேவை.
"சமையலறையில் எனக்கு வேண்டிய எல்லா உதவிகளையும் செய்கிறது கோபி, ஏன் தெரியுமா?
கோபி மெஷினுடன் நவீன தொழில் நுட்பத்தையும், எந்தவிதக் கூடுதல் செலவின்றி, ஒன்றல்ல மூன்று ஜாடிகளும் கிடைக்கின்றது.
ஆகவே ப்ளெண்டிங், ட்ரை க்ரைண்டிங், வெட் க்ரைண்டிங், அல்லது எது வேண்டுமானாலும் கோபியில மட்டுமே நொடிகளில் செய்ய முடியும். கூர்மையான பிளேடுகளைக் கையாளுதல் போன்ற தொல்லை எதுவும் இல்லை.
ஒவ்வொரு ஜாடியையும் தனித் தனியாக உபயோகிக்கலாம். அவற்றை தனித் தனியாக வாங்க வேண்டிய அவசியமில்லை. அதனால் எவ்வளவு பணம் மிச்சப்படுகிறது தெரியுமா!
கோபி மெஷின் மிகவும் சிறந்தது. அதனால் தான் உங்களுக்கு 5 ஆண்டு உத்தரவாதமும் (மோட்டார் உட்பட) ஆயுள் முழுவதும் இலவசச் சேவையும் கிடைக்கின்றன.
ஒரு பெண்ணுக்கு இதைவிட வேறென்ன வேண்டும்? கோபி இருக்கும்போது நான் சமையல் கலை வல்லுனராகவே உணர்கிறேன்"
கோபியை இப்பொழுது உங்களுக்கு 'தெர்மாகோல்' பேக்கிங்குடன் அளிக்கின்றோம். தெர்மாக்கோல் பேக்கிங்கை 1) ஹாட்கேஸ 2) ஐஸ் பாக்ஸ 3) பிக்னிக் கேஸ் ஆக உபயோகிக்கலாம்.
இலவசம்
ஒவ்வொரு கோபி மிக்ஸியுடன் ஒரு பெரிய
நீர்லெப்
டெஃப்லான் பூசிய தோசைக்கல்
முந்துங்கள்! இச்சலுகை ஸ்டாக் கையிருப்பு உள்ளவரை மட்டுமே!
வேண்டுமானால் வாங்க கூடிய சேகரிப்பு மாத்திரம்.
கர்நாடகா, ஆந்திரா மற்றும் தமிழ்நாட்டிற்கு விநியோகஸ்தர்கள்:
திரிப்தா மார்கெட்டிங் பி. லிட்.,
139, பாரதி சாலை (பைக்ராஃப்ட்ஸ் ரோடு),
சென்னை 600 014. போன்: 86599
பெங்களூர் போன்: 563322 ஹைதராபாத் போன்: 221224.

Adhit/M/418



❝ பெற்று, பேணி வளர்த்த பெண்ணுக்கு கல்யாணமென்றால் பெற்றோர்களுக்கு மகிழ்ச்சிதானே?

எங்கள் பெண்ணிற்கு ஒரு நல்ல இடத்தில் கல்யாணம் நிச்சயமாகியிருக்கிறது.

"கல்யாணம் செய்துப் பார்" என்று பெரியவர்கள் சொல்வது உண்மைதான்!

எவ்வளவு அலைச்சல், எவ்வளவு ஏற்பாடுகள்!

வசதியான கல்யாண மண்டபத்தைத் தேர்ந்தெடுப்பதிலிருந்து, கல்யாணப் பத்திரிகைகள் அனுப்புவது வரை ஆயிரம் வேலைகள்!

ஸ்பெஷலாக நெய்த கூறைப்புடவை, எங்கள் மகளே டிசைன் செய்த தங்க நகைகள், பாத்திரம் பண்டங்கள் என்று நீண்ட பட்டியலே போட்டு வாங்கினோம்.

இதையெல்லாம் பொறுக்கியெடுக்க கடை கடையாக ஏறி அலைந்தாலும், எவர்சில்வர் பாத்திரங்கள் வாங்கும்போது எதை வாங்கலாம் என்பதில் எங்களுக்கு ஒரு சந்தேகமும் இல்லை.

வேறென்ன, சேலம் எவர்சில்வரில் செய்த பாத்திரங்கள்தான்!

அந்த காலத்தில் கிடைத்த பாத்திரங்களைப்போலவே நல்ல தரமானவை. கறும்புள்ளிகளோ, கறையோ பிடிக்காது. வாழ்நாள் முழுவதும் பளபளப்பு குறையாமல் உழைக்கக்கூடியவை.


வேறென்ன வேண்டும் எங்கள் மகளுக்கு! ❞

சேலம் எவர்சில்வரினும் தயாரிக்கப்பட்ட பாத்திரங்கள் எல்லா பிரபலமான பாத்திரக்கடைகளிலும் கிடைக்கும்.

சேலம் எவர்சில்வர்.
நம்பிக்கைக்குப் பாத்திரமான பாத்திரங்கள்.

ஸ்டீல் அதாரிட்டி ஆப் இந்தியா லிமிடெட்.
ஒரு இந்திய அரசு நிறுவனம்
சேலம் உருக்காலை
சேலம் 636 013 தமிழ் நாடு

Sista's-SSP. 366. 85 TM B



26

எல்லைகளின் விளிம்பில்..

அம்மாவின் வேகத்தைக் கண்டு பாலுவுக்கு வியப்பேற்பட்டது. வெளி விவகாரங்களில் அதிக சிரத்தை காட்டாத அம்மா எப்படி இப்படி மாறினாள் என்று வியப்பேற்பட்டது. மாலுவின் போக்கினாலா? என் திருமணத்தாலா?

அவன் வாசலுக்கு வந்து எட்டிப் பார்த்தான். மூன்று வீடுகள் தள்ளி ஒரு வீட்டின் முன் ஒரு சிறிய கூட்டம் இருந்தது. வீட்டை நோக்கிக் கார மாக வெளியில் நின்றவர்கள் கத்திக் கொண்டிருந்தார்கள்.

பாலு தெருவுக்கு வந்தான். அந்த வீட்டிற்குள் இருந்து. "பஞ்சாவ்! பஞ்சாவ்!" ('காப்பாற்றுங்கள்; காப்பாற்றுங்கள்!') என்று தீனமான கீச்சான குரல் கேட்டது.

வீட்டை ஒட்டிய பெரிய கேட் உள்புறமாகப் பூட்டப்பட்டிருந்ததால் வெளியில் நின்ற கும்பல் வீட்டுக் கதவைத் தட்ட முடியவில்லை என்று பாலு கவனித்தான்:

கூட்டத்திலிருந்த யாரோ ஒருத்தர் பெரிய குரலில் கத்தினார்.

"என்ன செய்கிறீர்கள் அந்தப் பெண்ணை? கதவைத் திறங்கள்!"

வீடு கம்மென்றிருந்தது. உள்ளேயிருந்து வரும் தீனக்குரல் அபயத்தை வேண்டிப் பிரலாபித்துக் கொண்டிருந்தது.

திடீரென்று அம்மாவின் குரல் கேட்டது.

"யாராவது கேட் ஏறிக் குதித்துக் கதவைத் தட்டுங்கள். ஜன்னல் வழியாகப் பாருங்கள்!"

ஏதோ ஸிக்னலுக்காகக் காத்திருந்தவர்கள் போல் இரண்டு மூன்று ஆண் பிள்ளைகள் கேட்டின் மீது ஏறிக் குதித்துக் கதவை திமுதிமுவென்று தட்டினார்கள். வெகு நேரத்துக்குப் பிறகு ஒரு ஜன்னல் திறந்தது.

ஒரு ஆண் எட்டிப் பார்த்துக் கோபத்துடன் கேட்டார்.

"எதற்கு இங்கே கூட்டம் போடுகிறீர்கள்? என்ன கலாட்டா இது?"

"யார் செய்வது கலாட்டா? மரியாதையாய் கதவைத் திற! அந்தப் பெண்ணை என்ன செய்கிறீர்கள்? கொலை செய்கிறீர்களா?"

தலைக்குத் தலை கூட்டம் கத்திற்று. "அடேய்! இது எங்கள் வீட்டு விவகாரம்! உங்களுக்கு என்ன அதைப் பற்றி? அடித்துக் கொள்வோம், உதைத்துக் கொள்வோம். நீங்கள் யார் கேட்க?"

கூட்டம் ஒரு விநாடி பேசாமல் நின்றது.

"உன் மருமகள் ஏன் காப்பாற்றுங்கள் என்று கத்துகிறாள்?"

"அவளுக்கு ஹிஸ்டீரியா! டிராமா ஆடப் பிடிக்கும். கூட்டம் வெளியில் இருக்கிறது என்று தெரிந்து, வேண்டுமென்று கத்துகிறாள். போங்கள் வேலையற்றவர்களா! உங்களுக்கு இந்தத் தெருவில் இருக்க எத்தனை சுதந்திரம் உண்டோ அத்தனை எங்களுக்கும் உண்டு. போங்கள்!"

பெண்ணின் குரல் இப்பொழுது அடங்கிப் போயிருந்தது. கூட்டம் என்ன செய்வது

வாஸந்தி

என்று புரியாமல் சில நிமிஷங்கள் நின்றது.

"ப்ரூஃப் இல்லாமல் நாம் எதுவும் செய்ய முடியாதுதான்" என்றுஒருத்தர் முணுமுணுத்தார்.

"அவன் சொல்கிற மாதிரி. இது அவன் வீட்டு விவகாரம். நாம எப்படித் தலையிட முடியும்?"

"ரொம்ப நன்னாயிருக்கே?" என்றாள் அம்மா. "அவர்கள் நாட்டுப் பெண்ணைக் கொலை செய்தாலும் நாம் சும்மா இருக்க முடியுமா?"

"அவர்கள் கொலைகாரர்கள் என்று நாம் எப்படி நினைக்க முடியும்?"

கூட்டம் மெல்லப் மெல்லப் பிசுபிசுத்துப் போயிற்று. கலாவின் வீடு பயங்கர மௌனத்தில் மெத்தனமாக நின்றது. அம்மாவும் மாலுவும் சோர்வுடன் திரும்புகையில் பாலுவும் அவர்களுடன் சேர்ந்து கொண்டான்.

"எனக்கு நம்பிக்கை இல்லே அவாளைப் பத்தி!" என்று அம்மா முணுமுணுத்தாள். "கொலைகாரப் பாவிகள்!"

"நாமா எதையும் ஊகிக்க முடியாதும்மா!" என்றான் பாலு மெள்ள.

"என்னமோ தெரியல்லே. அந்தப் பொண்ணுகிட்ட ஒரு பாசம் ஏற்பட்டுப் போச்சு எனக்கு. 'மாதாஜி மாதாஜி'ன்னு தன் குறைகளைச் சொல்லி அழும். இன்னிக்குஎன்னமோ ஆயிடுத்து அதுக்கு.எனக்கு உடம்பு பதறாது!"

"நம்மாலே முடிஞ்சதை நாம செஞ்சாச்சும்மா. அதுக்கு மேலே என்ன செய்ய முடியும்?" என்றாள் மாலு.

"அதைச் சொல்லு! அவாவா தலையெழுத்துன்னு ஒண்ணு இருக்கே!"

மாலு சிரித்தாள்.


"நேத்துதான் நீ லெக்சர் கொடுத்தே. தலையெழுத்தை மாத்த முடியும்னு."

"புத்தியிருந்தா மாத்தலாம்! அது இல்லேன்னா என்ன பண்றது?"

மாலு அம்மாவின் தலைக்குமேல் பாலுவைப் பார்த்துப் புன்னகைத்தாள்.

அம்மா மாறித்தான் போய்விட்டாள் என்று தனக்குள் நினைத்து பாலு சிரித்துக் கொண்டான்.

வீட்டிற்குச் சென்ற கொஞ்ச நேரத்துக்கு மாலுவும் அம்மாவும் அப்பாவும் அந்தப் பெண்ணைப்பற்றி பிரலாபித்தார்கள். அவன் சுரத்தில்லாமல் எழுந்து உடுப்பை மாற்றிக் கொண்டு "நான் கொஞ்சம் வெளியிலே



போயிட்டு வரேன்'' என்று உள்பக்கம் நோக்கிச் சொல்லிவிட்டுக் கிளம்பினான்.

வண்டியைக் கிளப்பிக்கொண்டே, ''நல்ல வேளை இந்தக் கார் நாகநாதனுடையது இல்லே!'' என்று சொல்லிக்கொண்டான். சொந்த சம்பாத்தியத்துடன் கொஞ்சம் கடன் வாங்கி வாங்கியது. இன்னும் கடன் இருந்தது. ஆனால் நாகநாதனுடைய காசு இதில் ஒட்டியிருக்கவில்லை.

மை காட்!

அவனால் இன்னும் ஜீரணித்துக் கொள்ள முடியவில்லை. எத்தனைப் பெரிய ஃப்ராட் அவர்! இத்தனைப் பெரிய தவறை செய்ய எப்படித் துணிந்தார்? நான் ஒரு வாரத்திற்கு முன் வேலையிலிருந்து ராஜினாமா செய்தது எத்தனை நல்லதாய்ப் போயிற்று!''

ஆனால் அம்மாவும் அப்பாவும் நினைப்பது போல் தலைகுனிவு ஏற்பட்டது ஏற்பட்டதுதான். நான் செய்யாத குற்றத்திற்காக அவருடன் விதி வசத்தால் ஏற்படுத்திக் கொண்ட சம்பந்தத்திற்காக இந்தத் தலை இனிமேல் குனியத்தான் வேணும்.

''வேலைக் கிடைக்காமல் திண்டாடப் போறே!''



சில சமயம், உருளைக்கிழங்கு வேகும் போது, கறுப்பு நிறமாக மாறுவதுண்டு. கறுப்பு நிறமாக மாறுவது தெரிந்தால், உடனே சில சொட்டுகள் வினிகர் விட்டால், கிழங்கு கறுப்பாக மாறாது.

—ராஜி.

என்னுடைய சகதர்மிணியின் சாபம்.

வேலைக் கிடைக்காமல் போகும். நாகநாதனின் மருமகன் என்று தெரிந்தால் நிச்சயம் கொடுக்க மாட்டார்கள். எனக்கும் அவருடைய விவகாரங்களில் சம்பந்தம் இருக்கலாம் என்று சந்தேகிப்பார்கள்.

பாதையைப் பார்த்து கனாட்பிளேஸுக்குத் திருப்புகையில் அவனுக்குச் சிரிப்புக் கூட வந்தது.

நிச்சயம் நான் இந்த மாதிரி ஒரு க்ளைமாக்ஸை எதிர்பார்க்கவில்லை. வெகு சொற்ப கால திருமண வாழ்வில் எத்தனை அதிர்ச்சிகள்! போதையேறிய பிரமோத் குப்தாவின் உளறலைக் கேட்ட அன்றுதான் க்ளைமாக்ஸ். அதற்குப் பிறகு ஏற்பட்ட அதிர்ச்சிகள் எல்லாம் ஆன்டி க்ளைமாக்ஸ். முதலாவதை ஏப்பம் விட்டவை.

மாலுவின் வார்த்தைகளை ஆரம்பத்திலேயே கேட்டிருந்தால் இத்தனை அதிர்ச்சிகளையும் தவிர்த்திருக்கலாம். ஆ... விதி... விதியாகத்தான் இருக்க வேண்டும். அதன் வெலாஸிட்டியைத் தடுக்க முடியாது. கீழ் நோக்கிச் சரிய ஆரம்பித்த பிறகு அதன் வேகத்தை எப்படித் தடுக்க முடியும்?

மாலு அபூர்வப் பிறவி. பிறக்கும் போதே முதிர்ச்சியோடு பிறந்தவள். அப்படித்தான் இருக்க வேண்டும். அவள் வயசில் எத்தனைப் பெண்கள் இவளைப்போல்தீவிரமாகயோசிக்கிறார்கள்? தங்கள் இனத்தைப் பற்றி, ஆத்மார்த்தமாகக் கவலைப்படுகிறார்கள்? அம்மா கூட இவள் சகவாசத்தினால் மாறிவிடுகிறாள். மாலுவுக்கும் திலீப் பானர்ஜிக்கும் இடையே இருக்கும் நட்பைப் பற்றித் தெரிந்தால் அம்மா எப்படி ரியாக்ட் பண்ணுவாள் என்று அவன் யோசித்தான். யோசனைத் திறன் பின்னுக்கு நகர்ந்தாலும் நகரலாம்...

கன்னாட் பிளேஸ் பாதாளப் பார்க்கிங் ஏரியாவில் காரை நிறுத்தி விட்டு அவன் குறிப்பிட்டச் சிந்தனை ஏதும் இல்லாமல் நடந்தான்.

"ஹாய்!" என்ற குரல் கேட்டுத் திடுக்கிட்டுத் திரும்பினான், ரமேஷ் நிற்பதைப் பார்த்தான். சட்டென்று நாகநாதனின் நினைவு வந்து மனத்திற்குள் ஒரு கூச்சம் ஏற்பட்டது.

"ஹாய்!" என்றான் அவன லேசாகப் புன்னகைத்து.

"எப்படியிருக்கே ரமேஷ்? பார்த்து எத்தனை நாளாச்சு!"

ரமேஷ் கொஞ்சம் தடித்திருந்தான். ஆனால் முகத்தில் கடாவை அலுப்பு இன்னும் தெரிந்தது.

"என்ன செய்யறது? ஏதாவதொரு பிரச்னை இருந்துண்டே இருக்கு!"

"என்னப் பிரச்னை? நல்ல வேலைக் கிடைச்சிருக்கிறதா சொன்னியே. காமன்ஸ் இந்தியாவிலே?"

"வேலை நல்ல வேலைதான். அப்பா காலமாயிட்டார் திடீர்னு!"

பாலு திடுக்கிட்டு நின்றான்.

"அப்பாவா? உங்கம்மாவுக்குன்னா எப்பவும் ஏதாவது உடம்புப்பே?"

"ஆமாம்! ஆனா அவர் போயிட்டார் டு கிவ் எ ஸர்ப்ரைஸ்!"

"ஐ ஆம் ஸாரி 'யார்'!"

ரமேஷ் சிரித்தான்.

"என்னுடைய ராசி பாலு! நா இப்ப ஜோஸ்யமெல்லாம் தீவிர்மாப் படிக்க ஆரம்பிச்சிருக்கேன் தெரியுமோ? என் ஜாதகப்படி நா ஏதாவது பாரத்தைத் தாங்கிண்டே தான் இருப்பேன். நிம்மதி இருக்காது. ரிலாக்ஸ் பண்ண முடியாது."

'என் ஜாதகத்தையும் பாரேன்!' என்று சொல்லக் கிளம்பிய நாவை பாலு அடக்கிக் கொண்டான். நமக்கு என்ன ஆகிவிட்டது என்று கவலைப்பட்டான்.

"அப்ப நா வரேன் பாலு! எனக்கு அவசரமா ஒரு இடத்துக்குப் போகணும்" என்று ரமேஷ் கிளம்பியதும் நாகநாதனின் விஷயம் நாளைக்குத்தான் பேப்பரில்வரும்என்று ஞாபகத்திற்கு வந்தது.

தனியாக எங்கேயாவது உட்காரலாம் என்று அவன் காப்பி ஹவுஸுக்குள் நுழைந்தான். ஏதாவது மூலை காலியிருக்கிறதா என்று அவன் கண்களால் துழாவுகையில் ஒரு மூலையிலிருந்து பிரமோத் குப்தா பலமாகக் கையசைத்து அழைத்தான்.

'அடக் கடவுளே' என்று அலுத்துக் கொண்டு, 'ஹாய்!' என்ற புன்னகையுடன் பாலு சென்றமர்ந்தான்.

அவன் உட்கார்ந்தவுடன் பிரமோத் அவனுடைய கையைப் பற்றி மெல்லிய குரலில்,

"எனக்கு நியூஸ் தெரியும்!" என்றான்.

"எந்த நியூஸ்?"

"நாகநாதன் அரெஸ்ட் ஆன நியூஸ். இதைத் தவிர வேற நியூஸ் இருக்கா?"

"இத்தனை பயங்கர நியூஸ் இல்லே!"

"என்ன அது?"

"நா போன வாரம் வேலையை ரிஸைன் பண்ணிட்டேன்."

"ஏன்?"

"சட்ட விரோதமா நடந்து கொள்ளச் சொன்னார்கள். ரிஜெக்ட் ஆன டெண்டரை பாஸ் ஆன் பண்ணணுமாம். நான் முடியாது துன்னுட்டேன். அதனாலே என்னை அவமதிக்கிறாப்பலே எனக்குக் கீழே இருக்கிற ஆபீஸ் மூலமாப் பாஸ் பண்ணிட்டார்கள். மிக அபாயமான காண்ட்ராக்ட் அது. நான்

இதோ எளிதில் உபயோகிக்கக்கூடிய ஒரு ஹேர்-டை, மிகமிகக் குறைந்த விலையில்!

கோத்ரெஜ் பவுடர் ஹேர் டை கான்ஸென்ட்ரேட் உங்களுக்காகவே விசேஷமான கலவை முறையில் தயாரிக்கப்படுகிறது.
இந்தியாவில் பவுடர் ஹேர் டை கான்ஸென்ட்ரேட் இது ஒன்றே. இது தானாகவே பரவுகிறது, ஆகவே நீங்கள் சிறிதளவே உபயோகித்தால் போதும்! மிகமிக முக்கியம், நீங்கள் நம்பமுடியாத அளவுக்கு குறைவான விலையில் இது கிடைக்கிறது!



கலப்பது சுலபம்
இந்தப் பவுடரை சிறிதளவு நீருடன் கலக்கவும். உபயோகிப்பதற்கு இப் போது தயார்.



உபயோகிப்பது சுலபம்
இதை சிரமமின்றி இலேசாகத் தடவுங்கள். தானாகவே ஒரே சீராக, மென்மையாக முடிமீது பரவி விடுகிறது. உங்கள் கேசத்துக்கு இளமையான அழகுத் தோற்றத்தைத் தருகிறது!





இந்தியாவில் தானாகவே பரவும் பவுடர் ஹேர்-டை இது ஒன்றே.

Godrej
பவுடர் ஹேர்-டை
கான்ஸென்ட்ரேட்

CLARIAN/GS/11/203 TAM

தரமோ நீங்கள் நாடுவது விலையோ உங்களுக்குப் பிடித்தமானது.

“வேறு எந்த வெண்ணெயும், ஆவின் வெண்ணெயைப் போல அதிக அளவு நெய் தருவதில்லை. இது என் அனுபவத்தில் கண்ட உண்மை.”



மேலான தயாரிப்பு முறைகள்— குறைவான ஈரப்பசை

புதிய சுத்தமான ஆவின் பாலின் சிறப்பு காரணமாக ஆவின் வெண்ணெய் மிகவும் தரமுள்ளதாக விளங்குகிறது. இது மட்டுமன்று.

நவீனமான, தானியங்கி இயந்திரத்தின் மூலம், பேக் செய்யப்படுமுன் அதிலிருக்கும் தண்ணீர் மிக மிக அதிக அளவில் நீக்கப்படுகிறது. இதன் பலன், அதிக அளவு கொழுப்புச் சத்து.

மற்றவற்றை விட 20-25 சதவிகித அளவு அதிக நெய்

அதிக அளவு கொழுப்புச் சத்து இருப்பதால் அதிக அளவு நெய் கிடைக்கும்.

மேலும், ஆவின் வெண்ணெய் சுகாதார முறைப்படி பேக் செய்யப்பட்டு புத்தம் புதியதாக விநியோகிக்கப்படுகிறது. தரத்தையும் சிக்கனத்தையும் நாடும் சென்னை நகர இல்லத்தரசிகள் இதை தேர்ந்தெடுப்பதில் வியப்பில்லை.

ஆவின் வெண்ணெய் மேலும் இரண்டு அளவுகளில் பேக் செய்யப்படுகிறது. 500 கிராம் ரூ. 15க்கும் 200 கிராம் ரூ. 6.20க்கும் கிடைக்கும். 20 கிலோ அளவு கட்டிகள் ஆர்டரின் பேரில் கிடைக்கும்.

எல்லா ஆவின் பாலகங்களிலும், சென்னையிலும் புறநகரிலும் தேர்ந்தெடுக்கப்பட்ட விற்பனையாளர்களிடமிருந்தும் கிடைக்கும்.

ஆவின்

TMP-1738

வெண்ணெய்

வெண்மையானது · தரமானது · சிக்கனமானது.

அதுக்கு உடந்தையா இருக்க மாட்டேன்னு ரிஸைன் பண்ணிட்டேன்!''

''தப்பிச்சே!''

பாலு விரக்தியுடன் சிரித்தான்.

''பிசாசு மாதிரி என்னைத் துரத்திண்டு என் மாமனார் சமாச்சாரம் வரலாம். வேலை கொடுக்க இப்பக் கம்பெனிகள் அதிகமாத் தயங்குவார்கள். நாகநாதனுடைய மாப்பிள்ளைன்னு தெரிஞ்சவுடனே.''

பிரமோத் சற்று நேரம் யோசனையுடன் அவனைப் பார்த்தான்.

''மைகாட், நா நிச்சயமா நினைக்கல்லே. நாகநாதனுக்கு இத்தனை பயங்கர தைரியம் இருக்கும்னு!'' என்றான்.

''ஒரு ஸவுத் இந்தியனைப் பத்தி இந்த மாதிரி விவகாரங்களை இதுவரைக் கேட்டதில்லே. அவர் ஒரு பயங்கர ஆள்னு எங்கப்பா சொல்லுவார். ஆனால் இவ்வளவு பயங்கரம்னு நிச்சயம் நினைக்கல்லே.''

அவன் சற்று மௌனத்திற்குப் பிறகு சொன்னான்.

''ஒரு விஷயம் உங்கிட்டச் சொல்லணும். சித்ராவைப் பத்தி.''

பாலு விருக்கென்று நிமிர்ந்தான். ''வேண்டாம் ஐ ஆம் நாட் இன்டரெஸ்டட். அவளைப் பற்றிப் புதுசா எதுவும் தெரிஞ்சு எனக்கு ஒண்ணும் ஆகப் போறதில்லே!''

பிரமோத் சங்கடத்துடன் மௌனமானான்.

''நான் அன்னிக்கு உளறினதை நினைச்சு வெட்கப்பட்டறேன் பாலு!''

''நாட் அட் ஆல்! நான் அதையெல்லாம் மறந்தாச்சு. சமாதானமாயாச்சு!''

''குட்!'' என்றான் பிரமோத் மெல்லிய நிம்மதியுடன். ''நீ ரொம்ப நல்ல பையன் பாலு! டு குட் ஃபர் சித்ரா! நீ வேலை விஷயத்தைப் பற்றிக் கவலைப்படாதே. என் கம்பெனியில் நான் உன்னை சேர்த்துக்கறேன். உன் பழைய சம்பளத்தில். உனக்குப் பிடிச்சா நீடித்திருக்கலாம்.''

பாலு வியப்புடன் சிரித்தான்.

''ஆர் யூ ஸீரியஸ்?''

''ஆப்ஸொல்யூட்லி!''

''தாங்க்யூ யார்!''

''நாட் அட் ஆல்! நாளை ஆபிஸுக்கு வா!''

வீட்டிற்குத் திரும்புகையில் மனத்தில் ஒரு சின்ன திருப்தி ஏற்பட்டது. ஏதோ பிராயச்சித்தத்திற்காகப் பிரமோத் இந்த வேலையைக் கொடுத்தாலும் நம் பிரச்னைத் தீர்ந்தது. தன் வாழ்வின் முதல் கட்டம் முடிந்து இரண்டாம் கட்டம் ஆரம்பிக்கப் போவதாகத் தோன்றிற்று. அதற்குள் எத்தனை மூப்பு ஏற்பட்டு விட்டது!

அவன் வீட்டை அடைந்தபோது தெருவே ஒரு மௌனச் சோகத்தில் ஆழ்ந்திருந்தாற் போல் ஒரு பிரமையேற்பட்டது. காலையில் விழித்தபோது அதற்கு விளக்கம் கிடைத்தது.

அம்மா கலவரத்துடன் மாலுவையும் அவனையும் எழுப்பிச் சொன்னாள்.

''அந்தப் பொண்ணு, கலா செத்துப் போயிட்டா!''

(அடுத்த இதழில் முடியும்)



நமது குழந்தைகளின் எதிர்காலத்தை

நிர்ணயிக்கப் போவது...

பிரதமர் ராஜீவ் உருவாக்கி
வரும் புதிய கல்வித் திட்டம்

இதுபற்றிய எல்லா விவரங்களையும்
ரசமான விதத்தில் அளிக்கிறது

கல்கி

டிசம்பர் 8 ௳

இதழ்...











இம்மாத இல்லத்தரசி

முதல் பரிசு:

பாகற்காய் தொக்கு

தேவையான பொருட்கள்:

பாகற்காய் — 1 கிலோ.
பெரிய வெங்காயம் — ½ கிலோ.
மிளகாய் வற்றல் — 200 கிராம்.
நல்லெண்ணெய் — 200 மி. கிராம்.
புளி — ½ கிலோ.
மஞ்சள் பொடி — 1 டீஸ்பூன்.
கடுகு — 1 டீஸ்பூன்.
உளுத்தம்பருப்பு — 1 டீஸ்பூன்.
உப்பு — தேவையான அளவு.

செய்முறை:

பாகற்காயைக் கழுவி இரண்டாகப் பிளந்து, விதைகளை எடுத்துவிட்டு, சிறு துண்டுகளாக

பெருங்காயம் — சிறு துண்டு.
உப்பு — தேவையான அளவு.
மஞ்சள் பொடி — 1 டீஸ்பூன்.
வெந்தயம் — 1 டீஸ்பூன்.
நல்லெண்ணெய் — 100 கிராம்.
கடுகு — 1 டீஸ்பூன்.

செய்முறை:

தக்காளிப் பழத்தை அலம்பிக் கொதிக்கும் வெந்நீரை விட்டு மூடி வைக்கவும். இஞ்சியை அலம்பித் தோல் சீவிக் கொள்ளவும். பச்சை மிளகாயைக் காம்பு கிள்ளி அலம்பி இஞ்சியுடன் நன்றாக அரைத்து எடுக்கவும். புளிப்பு ஆப்பிள் பழத்தை அலம்பித் தோல் சீவி, மாங்காய்த் துருவியில் துருவிக் கொள்ளவும்.

தக்காளிப் பழத்தின் சாற்றைப் பிழிந்து எடுத்துக் கொள்ளவும். அடுப்பில் கடாயை வைத்து வெந்தயத்தைச் சிவக்க வறுத்துக்

ஒரு இண்டாலியக் கடாயில் நல்லெண்ணெயை விட்டுக் கடுகையும், பெருங்காயத்தையும் போடவும். கடுகு வெடித்தவுடன் துருவி வைத்துள்ள ஆப்பிளைப் போட்டு அதனுடன் உப்பையும் போட்டு வதக்கவும். வதக்கி வரும்போதே தக்காளிப்பழச்சாற்றையும் போட்டு நன்றாகக் கிளறவும். எல்லாமாகச் சேர்ந்து நன்றாகச் சுருண்டு வரும் பொழுது வதக்கி வைத்துள்ள இஞ்சி, பச்சை மிளகாயைப் போட்டுக் கிளறவும். இறக்கும் பொழுது வெந்தயப் பொடியைப் போட்டுக் கிளறி இறக்கவும்.

இந்த ஆப்பிள் தொக்கு சாதத்தில் கலந்து சாப்பிடவும். சப்பாத்தி, பூரி போன்றவைகளுக்குத் தொட்டுக் கொள்ளவும். மிகவும் ருசியாகவும் சுவையாகவும் இருக்கும்.

— ஜி. பொன்னி, செகந்திராபாத் — 94.

மூன்றும் பரிசு:

கொள்ளுத் தொக்கு:

நறுக்கி, குறைந்த அளவு நீரில் வேக வைத்து எடுத்து, நீரை வடிய விடவும். வாணலியில் (மாக்கல் அல்லது கல்கத்தா) எண்ணெய் விடாமல் மிளகாய் வற்றலை வறுத்துக் கொள்ளவும். வெங்காயத்தை சிறு துண்டுகளாக நறுக்கிச் சிவக்க வதக்கவும். பாகற்காய், மிளகாய் வற்றல், வெங்காயம், புளி இவைகளை உப்பு தேவையான அளவு சேர்த்து அம்மியில் நன்கு அரைக்கவும்.

வாணலியில் நல்லெண்ணெய் ஊற்றிக் காய்ந்ததும், கடுகு, உளுத்தம்பருப்பு போட்டு வெடிக்கவிட்டு, பாகற்காய் விழுதைப் போட்டு, மஞ்சள் பொடி சேர்த்து வதக்கவும். சட்டியில் ஒட்டாமல் சுருண்டு வரும் போது இறக்கிவிடவும். ஆறிய பிறகு, சுத்தமான பாட்டிலில் போட்டு வைத்துக் கொள்ளவும். ஆறு மாத காலமானாலும் கெடாது. வாரம் ஒரு முறை கிளறிவிட்டு, வெயிலில் வைக்கவும். சாதத்தில் பிசைத்தும், தோசை, சப்பாத்தி, தயிர் சாதத்திற்கும் தொட்டுக் கொள்ளலாம். நீரழிவு நோய்க்காரர்களுக்கு மிகவும் ஏற்றது.

பின் குறிப்பு: பாகற்காய் வடித்த நீரை நீரிழிவுக்காரர்கள் சூப் செய்து சாப்பிடலாம்.

— ரஹிதா ஹுசேன், பெங்களூர்—8.

இரண்டாம் பரிசு:

ஆப்பிள் தொக்கு

தேவையான பொருட்கள்:

புளிப்பு ஆப்பிள் — 3.
தக்காளிப் பழம் — ½ கிலோ.
மிளகாய்ப் பொடி — 1 டீஸ்பூன்
பச்சை மிளகாய் — 25.
இஞ்சி — 10 கிராம்.
கொண்டு — ¼ கிலோ.
சாம்பார் வெங்காயம் (உரித்தது) — ஒரு பிடி.
தனியா — 1 டீஸ்பூன்.
பச்சை மிளகாய் — 10.
சீரகம் — 1 டீஸ்பூன்.
கறிவேப்பிலை — 1 கொத்து.
உப்பு — தகுந்த அளவு.

கொள்ளவும். அதிலேயே கொஞ்சம் எண்ணெயை விட்டு அரைத்து வைத்திருக்கும் பச்சை இஞ்சி மிளகாயைப் போட்டு நன்றாக வதக்கவும். அதனுடன் மஞ்சள் பொடியையும், 1 டீஸ்பூன் மிளகாய்ப் பொடியையும் போட்டு வதக்கி வைத்துக் கொள்ளவும். வறுத்த வெங்காயத்தைப் பொடி செய்து கொள்ளவும்.

இம்மாத இல்லத்தரசி போட்டியில் நடுவர்களாக இருந்தவர்கள்:

நேரு நகர் மாதர் சங்கம், நேரு நகர், சென்னை—44.

சேதாமணியன், சாரதா ராமஸ்வாமி, சாரதா வெங்கட்ராமன், எம். எஸ். கலா, ஹரிபசல் ராஜாமணி, தங்கமணி நடராஜன், சரோஜினி சுந்தரம், சந்திரா கிருஷ்ணமூர்த்தி.



செய்முறை:

கொள்ளை ஒரு மணி நேரம் ஊற வைக்கவும். ஊறியபின் களைந்து 3 டம்ளர் தண்ணீர் சேர்த்து குக்கரில் வெயிட் போட்டு நன்றாக விசில் வரும் வரை வேக வைக்கவும்.

வாணலியில் இரண்டு டீஸ்பூன் எண்ணெய் ஊற்றி தனியா, சீரகம், மிளகாய், வெங்காயம் முதலியவற்றை நன்றாகச் சிவக்க வதக்கிக் கொள்ளவும்.

இப்பொழுது வெந்த கொள்ளு (தண்ணீரை இருத்திவிட வேண்டும்) மேற்கூறிய வதக்கி வைத்த சாமான்களையும் தகுந்த அளவு உப்பையும் கலந்து ஆட்டுரலில் போட்டு நன்றாகக் கலக்குமாறு தொக்கி எடுக்கவும்.

கொள்ளை வேக வைத்த அதிகப்படி நீரில் சிறிதளவு தொக்கைக் கலந்து ரசம் செய்தால் சுவையாக இருக்கும்.

—என். சீதாலட்சுமி, பெங்களூர்—1.

ஆறுதல் பரிசு:

திராட்சைக் காய் தொக்கு

தேவையான பொருட்கள்:

திராட்சைக்காய் — 500 கிராம்,
உப்பு — ¼ ஆழாக்கு,
மிளகாய்ப் பொடி — ½ ஆழாக்கு,
வெந்தயம் — ஒரு டீஸ்பூன்,
பெருங்காயம் — ஒரு டீஸ்பூன்,
மஞ்சள் பொடி — அரை டீஸ்பூன்,
நல்லெண்ணெய் — அரை ஆழாக்கு.

செய்முறை:

முதலில் திராட்சைக்காயை நன்கு அலம்பி கொட்டை எடுத்து வைத்துக் கொள்ள வேண்டும். வெந்தயம் சிவக்க வறுத்துப் பொடி செய்து, பெருங்காயம் வறுத்துப் பொடி செய்து கொள்ள வேண்டும். பிறகு வாணலியில் ஒரு டீஸ்பூன் கடுகை வெடிக்கவிட்டு நறுக்கிய திராட்சைக்காய், உப்பு, மஞ்சள் பொடி போட்டு, எண்ணெய் விட்டு நன்றாக வதக்கவும். தண்ணீர் வற்றி நன்றாக வதங்கியதும் மிளகாய்ப் பொடி, வெந்தயம், பெருங்காயப் பொடி போட்டு ஏழு அல்லது எட்டு தடவை வதக்கவும். சுருள வந்ததும் இறக்கவும்.


—அம்பா ராமனுதன், கோயம்புத்தூர்—2.

ஆறுதல் பரிசு:

காரட், பீட்ரூட் தொக்கு.

கால் கிலோ காரட், கால் கிலோ பீட்ரூட் இவற்றைத் தோலைச் சீவி, கொப்பரைத் துருவியில் துருவிக் கொள்ளவும். சிறிது கடுகு, ஒரு ஸ்பூன் உளுத்தம்பருப்பு, ஒரு துண்டு பெருங்காயம் இவற்றை எண்ணெய் விட்டு வறுத்து எடுத்துக் கொள்ளவும். பச்சை மிளகாய், ஒரு டேபிள் ஸ்பூன் உப்பு, சிறிது புளி இவற்றையும் வறுத்த உளுத்தம் பருப்பு, துருவிய காரட், பீட்ரூட் யாவற்றையும் வைத்து நைஸாக அரைத்துப் பிறகு வாணலியில் எண்ணெய் ஒரு கரண்டி விட்டுக் கடுகு தாளித்து அரைத்த விழுதைப் போட்டுக் கிளறி எடுக்கவும்.


—வி. ஜெயலட்சுமி, சென்னை—35





30,00,000
அன்பர்கள் அன்றுடம்
நரசுஸ் காபியை அருந்துவதே
அதன் தரத்திற்கு சான்று.
ஜீவனுள்ள ஒரே காபி!
நரசுஸ்
தெர்மலோ முறை காபி!
நரசுஸ்
காபி கம்பெனி
சேலம் 636 007.
கிளைகள்: தமிழ்நாடெங்கும்.
ADWAVE NCC 2956 R

Get the feel of real leather at Leatherette




We have for you a wide range of the latest designs in Leatherware exclusively made for women – Handbags, Clutchbags, Sling bags, Ladies Wallets, Jewel Cases and many other novel items, all at a special PRICE just for you.

Adept

Leatherette

Raheja Complex (Basement)
834 Mount Road (Opp. Anna Statue)
Madras 600 002



உலகிலும் விளையாடும் விளக்கில்

(சென்ற இதழ் தொடர்ச்சி)

மாதவிலக்கு நிற்கும் சமயத்தில் பெண்ணின் உடலில் என்னென்ன மாற்றங்கள் நிகழும் என்று சென்ற இதழில் கடைசியாகக் கேட்ட கேள்விக்கு இங்கு டாக்டர்கொடி மணி பதிலளிக்கிறார்.)

டா: இதற்கு நான் சற்று விளக்கமாக விடையளிக்க வேண்டி இருக்கிறது. முதலில்,

ஜனன உறுப்புகள்: கருப்பையின் வெஜைனா எனப்படும் வாய்ப்பகுதி சுருங்கிவிடும். அங்கு சுரக்கும் ஒருவித திரவத்தின் அளவு குறைந்து விடுவதால் அப்பகுதி வறண்டிருக்கும். இதனால் இல்லற வாழ்வில் கணவனை திருப்தி செய்ய முடியாது. வலி ஏற்படும். இத்தகைய சமயங்களில் டாக்டரிடம் சென்றால் ஈஸ்ட்ரோஜன் கலந்த க்ரீம் ஒன்றைத் தருவார்கள். அதைப் பயன்படுத்தலாம்.

சினைப்பைகளும், கருப்பையும் சுருங்கிவிடும். கருப்பையில் சின்ன கட்டிகள் இருந்தால் அவையும் சுருங்கிவிடும். அடுத்து கருப்பையை இழுத்துப் பிடித்துத் தாங்கும் தசைநார்கள் தங்கள் விரிந்து சுருங்கும் எலாஸ்டிக் தன்மையை இழப்பதால் கர்ப்பப்பை இறங்கும். மூத்திரப்பையின் எபிதீலியம் மெல்லியதாக மாறுவதால் கிருமிகளால் மூத்திரப்பை பாதிக்கப்படும். அதனால் சிறுநீரை அடக்க முடியாது. அடிக்கடி சிறுநீர் கழிக்கும் உணர்வு ஏற்படும். சிறுநீர்க் குழாயின் துவாரம் சுருங்குவதால் சில சமயம் எபிதீலியம் எனப்படும் சதைப்பகுதி வெளியே பிதுங்கி புண் ஏற்படும். எத்தகைய உபாதை ஏற்பட்டாலும் மருத்துவ சிகிச்சை பெற வேண்டியது அவசியம்.

எலும்பு: மாதவிலக்கு நிற்கும் சமயம் ஈஸ்ட்ரோஜன் அளவு குறைவதால் எலும்புகள் தேயும். இதனால் வயதான பெண்கள் கீழே விழுந்தால் எலும்பு முறிவு எளிதில் ஏற்படும். இவை அநேகமாக மாதவிலக்கு நின்று 10 அல்லது 15 வருடங்கள் கழித்துத்தான் ஏற்பட வாய்ப்பு அதிகம். மேற்கை எலும்பு, மணிக்கட்டு எலும்பு, முதுகெலும்பு, விலா எலும்பு, தொடை எலும்பு இவற்றில் முறிவு ஏற்பட்டால் தக்க சிகிச்சை செய்து முழுப்பயனையும் பெறலாம். ஆனால் இடுப்பெலும்பு முறிவு ஏற்பட்டால் காலமெல்லாம் ஊனமாக அப்பெண் படுக்கையில் கிடக்க வேண்டியதுதான். எனவே வீடுகளில் தண்ணீர் சிந்தினால் உடனே துடைப்பதும், பாசி பிடித்த இடங்களைச் சுத்தம் செய்வதும், குளியலறை, கழிப்பறைகளைங்களை சொரசொரப்பாக அமைப்பதும், மிக மிக அவசியம். ஒரு பெண்ணிற்கு 35 வயதில் மணிக்கட்டு முறிவு ஏற்படுவதைவிட 55 வயதில் ஏற்பட 10 மடங்கு அதிக வாய்ப்பு உண்டு.

இதர மாற்றங்கள்: உடலில் உள்ள ரோமங்கள் உதிர்வதும், சில சமயம் மீசை போன்று முரட்டு ரோமம் மேலுதட்டிலும் தாடையிலும் தோன்றுவதும், மார்பகங்கள் சுருங்குவதும், வெளிச்சம் படும் பகுதிகளில் தோல் சுருங்குவதும் பெண்களின் அழகை பாதிக்கும் மாற்றங்கள். இதனால் பல பெண்கள் அழகு நிலையங்களுக்குச் சென்று அழகுபடுத்திக் கொள்கின்றனர். 40, 45 வயதிற்குமேல் கொஞ்சம் நரை, கொஞ்சம் சுருக்கம் இவற்றோடு காட்சி அளிப்பதும் ஒரு கம்பீரமான அழகுதான்.

டாக்டர், சில பெண்கள் மெனோபாஸ் சமயத்தில் திடீரென்று முகம், மார்பு, முதுகு இவற்றில் வெப்பம் பரவி சிறிது நேரத்தில் வியர்ப்பதாகக் கூறுகிறார்கள். இது எதனால்? எவ்வாறு குணப்படுத்தலாம்?

டா: பெண்களின் உடலின் தட்ப—வெப்ப நிலையை சீராக வைத்துக் கொள்ள ஈஸ்ட்ரோஜன் மிகவும் அவசியம். இந்த ஈஸ்ட்ரோஜன் அளவு குறைவதால், சென்ட்ரல் தெர்மோ ரெகுலேடரி ஃபங்ஷனில் குறைபாடு ஏற்படுகிறது. இதனால் சில பெண்களுக்கு முதலில் தலை கனம், தலைவலி, தலைசுற்றல், படபடப்பு என்று தொடங்கி வெப்பம் பரவும். இது முகம், கழுத்து, மார்பு, முதுகு என்று படிப்படியாகப் பரவும்.

சில வினாடிகள் சென்றபின் வெப்பம்தணிந்துவியர்வைபெருகும்.வெப்பம் பரவிய இடங்களில் வியர்வை அதிகமாக இருக்கும். இவ்வாறு ஏற்படுவதற்கு ஹாட் ஃப்ளஷஸ் (Hot flushes) என்று பெயர். ஒவ்வொரு முறையும் இது 1 நொடி முதல் 10 வினாடிகள் வரை நீடிக்கலாம்.

சிலருக்கு வாரம் இருமுறையும், சிலருக்கு ஒவ்வொரு இரண்டு மணி நேரத்திற்கு ஒரு முறையும், இன்னும் சிலருக்கு மிகக் கடுமையான நிலையில் ஒவ்வொரு 54 நிமிடத்திற்கும் ஏற்படும். மெனோபாஸிற்கு 1 வருடம் முன்னதாகவோ பின்னதாகவோ இது ஏற்படும். சில சமயம் 5 ஆண்டுகள் கூட தொடர்ந்து இருக்கும்.

இது இரவில் உறக்கத்தின் போது கூட ஏற்படுவதால் இப்பெண்கள் **தூக்கமின்மையால் அவதிப்படுகின்**றனர். இதைத் தவிர்க்க தூக்க மாத்திரை , சோர்வுக்கு மாற்று மருந்து, மன அமைதிப்படுத்தும் மாத்திரை இவைகளை உட்கொள்ளுகின்றனர். இவற்றால் எவ்விதப் பயனும் இல்லை. இவர்கள் இதற்குரிய மருத்துவச் சிகிச்சை பெற வேண்டும். தினமும் **ஈஸ்ட்ரோஜன் அடங்கிய ஒரு சிறிய மாத்திரையையோ அல்லது 15 நாட்க**ளுக்கு ஒருமுறை ஈஸ்ட்ரோஜன் அடங்கிய ஊசியையோ பயன்படுத்தி இத்தொல்லையிலிருந்து விடுதலை பெறலாம்.

ஆனால் இந்த ஹாட் ஃப்ளஷஸ் சில சமயம் ரத்தக் கொதிப்பினாலும், சர்க்கரை வியாதியினாலும், ஹைபர் தைராய்டு காரணமாகவும் வரலாம். எதற்கும் மருத்துவரை நாடுவது நலம்.

மாதவிலக்கு நின்ற பெண்களுக்கு வேறு வியாதிகள் வருமா?

டா: ஏன் வரக் கூடாது?. எந்த வியாதியும் வரலாம். பெரும்பாலும் 40 வயதுக்குமேல் குறிப்பாக ரத்தக் கொதிப்பு, சர்க்கரை வியாதி இவை வரலாம். பெண்களுக்குப் பெரும்பாலும் பாரிசவாயு வருவதில்லை. 55 வயதிற்குமேல் ஆண்களுக்கு மாரடைப்பு வரும் வாய்ப்பு 2 மடங்கு என்றால் பெண்களுக்கு 3 மடங்கு. பெண்களுக்கு சிறு வயதில் ஈஸ்ட்ரோஜன் தான் மாரடைப்பிலிருந்து பாதுகாப்பளிக்கிறது.


சாதம் நிறைய மிஞ்சிவிட்டால் கைபடாது, தண்ணீர் ஊற்றாமல் அப்படியே மூடி வையுங்கள்! மறுநாள் பாத்திரத்தில் நீரைக் கொதிக்க விட்டு, சாதத்தைப் பாத்திரத்தோடு வெந்நீரில் வையுங்கள். சாதம் பொலபொலவென்று அப்போது தான் ரெடியானது போல ஆகும். சுடச் சுட பரிமாறிவிடலாம்.



- அதிக பளபளப்பு—பெஸ்டோவின் விசேஷ ஃபார்முலா துணிகளுக்குத் தருகிறது அதிக பளபளப்பு, அதிக வெண்மை.
- அதிக மென்மை—கடுமையான வாஷிங் பவுடர்களைப் போல் பெஸ்டோ துணிகளுக்குக் கெடுதல் செய்வதில்லை. மேலும் உங்கள் கைகளை மென்மையாக வைக்கிறது.
- அதிக வெண்மை—துவைக்கத் துவைக்க துணிகள் பழுப்படைவதில்லை. ஆகவே வெளுக்க வெளுக்க வெண்மை நீடித்து நிலைக்கும்.


பெஸ்டோ—ஒரு கிலோவுக்கு
ரூ. 7.65 மட்டுமே!

* உள்ளூர் வரிகள் தனி



கோத்ரெஜ் பெஸ்டோ
ப்ளூ டிடர்ஜென்ட் பவுடர்

உயர் தரத்திற்கும் சிக்கனத்திற்கும்





Chhaya/PP/415

உபயோகப்படாத சாக்ஸ்களை வீசி எறிய வேண்டாம். எந்த வகையான தரையானாலும் கரி, சோப்பு நீர் ஊற்றிக் கழுவிவிடும் போது, சாக்ஸைக் கொண்டு மூலை முடுக்கெல்லாம் தேய்த்துப் பாருங்கள். சிரமமின்றி அழுக்கு நீங்கும். துடைப்பத்தாலோ, பிரஷ்ஷாலோ கைவலிக்க அழுக்குத் தேய்க்க வேண்டியதில்லை. அதே போல் கதவிலுள்ள அழுக்குகள் நீங்க, சோப்பு நீரில் சாக்ஸை நனைத்துத் தேய்க்கால் விரைவில் பளிச்சென்றாகும். [illegible] அடிக்கடி கதவுகளுக்குத் தேய்க்கக் கூடாது.

அதேபோல் குக்கர் சூடாக இருக்கும் போது, ஒரு சாக்ஸை எடுத்து நீரில் நனைத்துப் பிழிந்து விட்டு, குக்கரைத் தேய்க்கவும். [illegible] தேய்த்தால் அழுக்கு, கறை, கரி நீங்கி பளபளக்கும்.

—வசந்தகுமாரி

டாக்டர், நீங்கள் குறிப்பிட்ட பல மாற்றங்களுக்கும் தொல்லைகளுக்கும் ஈஸ்ட்ரோஜன் அளவு குறைவதுதான் என்று புரிகிறது. ஏன் மாதவிலக்கு நிற்கும் எல்லாப் பெண்களுக்குமே ஈஸ்ட்ரோஜன் கொடுக்கக் கூடாது?

டாங: பெரும்பாலும் எல்லாப் பெண்களுக்குமே எலும்புத் தேய்வை ஓரளவு குறைக்கக் கால்சியம், வைட்டமின் D மாத்திரைகளையும், ஈஸ்ட்ரோஜன் அடங்கிய மாத்திரைகளையும் கொடுக்கலாம். 10 ஆண்டுகள் வரை கூட இவைகளை உட்கொள்ளலாம். ஆனால் ஈஸ்ட்ரோஜன் சாப்பிடுபவர்களுக்கு மற்ற உபாதைகள் குறைந்தாலும் உடம்பு பெருத்தல், நீர் கோத்துக் கொள்ளுதல், மார்பகத்தில் வீக்கம், வலி, வயிற்றில்வீக்கம், ரணம்போன்ற தொல்லைகள் இருக்கத்தான் செய்யும். மேலும் எல்லோருக்கும் ஈஸ்ட்ரோஜன் மாத்திரைகளைக் கொடுத்து விட முடியாது. உதாரணமாக கர்ப்பப்பையில் புற்றுநோய், மார்பில் கட்டி, ரத்தக்கொதிப்பு, ஈரலில்வீக்கம்உள்ளவர்கள் ஈஸ்ட்ரோஜன் மாத்திரைகளை உண்டால் அவர்களின் நோயின் வீரியம்அதிகமாகும். வலிப்பு வருபவர்களுக்கும், ஒற்றைத் தலைவலி உள்ளவர்களுக்கும், பரம்பரையில் மாரடைப்பு உள்ளவர்களுக்கும் ஈஸ்ட்ரோஜன் மாத்திரைகளைக் கொடுக்கக் கூடாது.

மெனோபாஸ் அடைந்த பெண்கள் பெரும்பாலும் உடல் வலுவிழந்தவர்களாகவும், மனச்சோர்வடைபவர்களாகவும் இருக்கிறார்கள். இந்நிலையில் கணவன், குழந்தைகள், உறவினர்கள் இப்பெண்ணிடம் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும்?

டா: பலவீனமும் மனச்சோர்வும் மெனோபாஸினால் மட்டும் அல்ல. பலவீனம் வயது காரணமாக வரலாம். அல்லது அந்த வயதில் அப்பெண்ணிற்கு வந்துள்ள ரத்தக் கொதிப்பாலோ, சர்க்கரை வியாதியாலோ இருக்கலாம். உடல் தளர்ந்தால் மனம் தளர்வது இயற்கை. இங்கு இப்பெண்ணின் மனச்சோர்வுக்கும், டென்ஷனுக்கும் குடும்பத்தில் நிகழும் பல நிகழ்ச்சிகள் காரணமாக அமையலாம்.

உதாரணமாகப் பெண்ணிற்கு மாதவிலக்கு நிற்கும் காலத்தில் அவளுடைய கணவர் ஓய்வுபெறும் காலமாக இருக்கலாம். அல்லது அவர் தனது உத்தியோகத்தில் உச்ச கட்டத்தில் இருப்பதால் முன்புபோல மனைவியை அதிகம் கவனிக்க அவரால் இயலாது போகலாம். இதை அப்பெண்மணி தனக்கு அழகு குறைந்துவிட்டதால் நிராகரிக்கப்படுவதாக எண்ணி வருத்தப்படலாம்.

இதே சமயம் வீட்டில் திருமண வயதில் மகளும், படித்து வேலை தேடிக் கொண்டிருக்கும் மகனும், மருமகள் வந்திருந்தால் சாதாரண மாமியார்—மருமகள் தகராறுகளும் அப்பெண்ணின் மனச்சோர்வை அதிகப்படுத்துமே தவிர மெனோபாஸினால்தான் என்று கூறுவது தவறு. வயதுக்கு வந்த பிள்ளைகள் சிறுவர்களாக இருந்த போது எல்லாவற்றிற்கும் தாயை நாடியதை விடுத்து இப்போது தன்னிச்சையாகச் செயல்படுவார்கள். எனவே அப்பெண் எல்லோருக்கும் தான் **வேண்டப்படாதவளாகி விட்டோம் என்று எண்ணி டென்ஷனை உண்**டாக்கிக் கொள்கிறாள்..

எனவே மாதவிலக்கு ஏற்படுவதில் மாற்றம் இருப்பதை உணர்ந்ததும் ஒரு பெண் கணவருடன் மருத்துவரை அணுக வேண்டும். மனைவியின் உடலைப் பரிசோதித்து அது மெனோபாஸ்தான் என்று தீர்மானிக்கும் அதே சமயம் மருத்துவர், கணவரிடம் மனைவியின் உடலில் ஏற்பட்டுள்ள மாற்றங்களைக்கூறி அவளிடம் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்பதையும் பக்குவமாக விளக்குவார். குடும்பத்தி**லுள்ளவர்கள் அவளிடம் அன்பாக**வும், மரியாதையாகவும் நடந்து கொண்டால் சோர்வுற்ற அவள் மனம் புத்துணர்ச்சி பெறும்.

மெனோபாஸ் அடைந்த பெண்களின் ஆகாரம் எப்படி இருக்க வேண்டும்?

டா: இவர்கள் 40 வயதுக்கு மேற்பட்டவர்களாக இருப்பதால், கூடிய வரை உணவில் அரிசி சம்பந்தப்பட்ட பதார்த்தங்கள் குறைவாகவும், சர்க்கரை, உப்பு குறைவாகவும் இருக்க வேண்டும். எண்ணெய், கொழுப்பு இவற்றைத் தவிர்க்க வேண்டும். அசைவ உணவு சாப்பிடுகிறவர்கள் கொழுப்பான பதார்த்தங்களைத் தவிர்ப்பது நல்லது. கீரை வகைகள், காய்கறிகள் சாப்பிடுவது நல்லது. இரும்புச் சத்து, கால்சியம் அடங்கிய மாத்திரைகளைச் சாப்பிடலாம். உடல் பருமனைக் குறைத்தல் அவசியம்.

பேட்டி:

—தாம்பரம் லக்ஷ்மி சங்கர்.

இம்மாத இல்லத்தரசி போட்டி

பொருள்: தயிரால் பண்டங்கள்   **முடிவுதேதி: 15-12-85**

சமையல் கூப்பன்

.... என்ற தலைப்பில் சமையல் குறிப்பை இத்துடன் அனுப்பியுள்ளேன். இச் சமையல் குறிப்பு இதுவரை எந்தப் பத்திரிகையிலும், எந்தப் புத்தகத்திலும் வெளியானதல்ல என்று உறுதி கூறுகிறேன்.

கையொப்பம்

காட்பரிஸ்
போர்ன்விடா



சுறு சுறுப்புப் பானம்!



"ஒரு டம்ளர் பாலிலே இரண்டு ஸ்பூன் போர்ன்விடா அதுவே நல்லான சுவையான பானம்—அதை, என் குழந்தைகளுக்கு அன்றாடம் இருவேளை தருகிறேன்.

என் குழந்தைகளுக்கு, கோகோ, மால்ட், பால், சர்க்கரை ஆகியவற்றின் போஷாக்கினைத் தருகிறது போர்ன்விடா. அவர்கள் வளரும் காலம் முழுவதும் அவர்களுக்குத் தேவைப்படும் ஊட்டச் சத்தையும் சக்தியையும் அளிக்கிறது. அவர்கள் நல்ல வளர்ச்சி பெறுகிறார்கள். ஆகவே நல்ல வளர்ச்சி. போர்ன்விடா பயிற்சி."

போர்ன்விடாவின் இனிமைக்காலம். போர்ன்விடா அளித்தவளை பாசமனங்கள் நேசத்தோடு நினைத்து மகிழும் ஒருநாள்.





II

கோமளா வரதன்

"ம் பிஸிபேளா சாப்பிடுங்க. முழு பேர் தெரியுமா, பிஸிபேளா ஹுளி அன்ன, தட் மீன்ஸ், சூடாயிருக்கிற குழம்பு சாதம்... எப்படி....?" அடுத்த இலையிலிருந்து உபசரிக்கிறார் கிருபாகரன்.

முகூர்த்தம் நடக்கிறதா இல்லையா என்று கூடப் பார்க்காமல், அவரவர் பந்திக்கு முந்திக்கொள்ளும்நிலை இல்லாதபடி, முகூர்த்தம் முடிந்த பின், மணமக்கள் உட்பட அத்தனை பேரையும் ஒரு சேர உட்கார வைத்து, பரிமாறிய நேர்த்தியே அவனுக்குப் பிடித்திருக்கிறது. இலை பூராவும் துளித் துளியாக ஏகப்பட்டது பரிமாறி வைத்திருப்பதைப் பார்த்து அவன் மலைக்கையில்,

"என் பாலிஸியே இந்த மாதிரி ஸ்பெஷல் சமயங்களிலெல்லாம் நன்னா ஒரு பிடி பிடிச்சுடணுங்கறதுதான். நாசூக்கு பார்க்கக் கூடாது. ஈட் ஷேம்லெஸ்லி....

"அப்புறம் ஒரு வாரத்துக்கு அவஸ்தைப் படணும் டெபனட்லி...."

"ம், சிரொட்டி.....சிரொட்டி....."

"இங்கே போடுங்கோ...."

"ஐய்யய்யோ, என்னாலே முடியாது...."

"மைசூர் ஸ்பெஷாலிடியே சிரொட்டி தான். அது வேண்டாம்னா எப்படி.....? போடுங்க.... என்ன விமலா, உங்க ப்ரெண்ட் சிரொட்டி வேணாங்கறாங்க. போட்டுக்கச் சொல்லாம...."

பந்தி விசாரித்துக் கொண்டு வந்த விமலாவும் குஸிமாவும் கூட சேர்ந்துக் கொள்கின்றனர்.

"இனிமே சாப்பிட்டேன், என்னாலே எழுந்திருக்கவே முடியாது...."

"பரவாயில்லே. அவசரமில்லே. அங்கேயே உக்காந்திருக்கலாம். அடுத்த பங்க்ஷன் சாயங்காலம் ஆறரை மணிக்கு ரிஸப்ஷன் தான். அதுக்குள்ளே ஜெரிச்சுடும்...." எல்லோரும் அந்த ஜோக்கிற்கு சிரிக்க சரேலென்று நிமிர்ந்து பார்க்கிறாள் காதம்பரி.

அவனேதான்..... மணமேடையருகில் அவளைப் பார்த்துக்கொண்டிருந்தவன்தான். இவன் பார்த்த கணத்தில், ப்ளாஷ் அடித்த மாதிரி ஒரு புன்னகையில் ஒரு கணம் அவன் உதடுகள் விரிந்து பின் சேருகின்றன.

"பிரபு, மீட் காதம்பரி. டாக்டர் காதம்பரி. திஸ் ஈஸ் பிரபு. விமலாவோட கஸின்..."

"எனக்குக்கூட கஸின்தான் ஆகணும் இல்லே பிரபு...." என்கிறாள் குஸிமா.

"சரிதான், தமிழ்லே நாங்க ஒரு பழமொழி சொல்லுவோம். நாத்தனார்க்கு நாத்தனார்..."

"நாத்த.... நாத்தம்வாட்..... அப்படின்னு..."

"ஐய்யோ, நாத்தம் நாத்தமில்லே. நாத்தம்னு பேட் ஸ்மெல். நான் சொன்னது நாத்தனார். ஸிஸ்டர் இன் லா....."

"என்ன இவங்க சொல்றது நல்லாவே யில்லையே. லீக் த ஹி-பேக். ஆம்பிளை சிங்கமாட்டம் நான் நின்னுண்டு இருக்கேன். நம்ம லைக்னையே மாத்தி ஸிஸ்டர் இன் லா, அது இதுன்னு....."

அவன் தலையையுயர்த்தி அவளைப் பார்க்க, மறுபடியும் அதே புன்னகை பளிச்சிடுகிறது.

"ஹி ஹஸ் மை கொலீக். பி கேர்புல் பிரபு."

"மொசரு, மொசரு....." என்று தயிர் பரிமாறிக் கொண்டு வருகிறார்கள். குஸிமாவும் விமலாவும் மற்றவர்களை கவனிக்க நகர, பிரபு மட்டும் கிருபாகரனோடு பேசும் சாக்கில் நிற்கிறான். காதம்பரியைப் பார்க்கும் போதெல்லாம் அவன் முகத்தில் மின்னலடித்தாற்போல் அந்தப் புன்னகை தோன்ற தவறுவதில்லை.

"முடியலேன்னா, எழுந்திருங்க காதம்பரி. அவரோடு பண்ண வேண்டாம். போய் கை கழுவிக்குங்க பிரபு. ப்ளீஸ் டேக் ஹெர்..."

"ஷ்யூர், வாங்க...."

நாலு இலைகளைக் கடப்பதற்குள் பிரபு ரொம்ப பாப்புலர் ஆசாமியென்பது தெரிகிறது. எல்லோரும் அவனிடம் ஏதோ சொல்

ஓகிறார்கள். விசாரிக்கிறார்கள், எதிர்படுகிறவர்களெல்லாம் பேசுகிறார்கள், சிரிக்கிறார்கள்.

கை கழுவ நீர் கொடுத்து, துடைக்க துண்டு கொடுத்து, மறுபடி முன்புறம் வந்தவனுக்கு அழைத்து வந்து நாற்காலியை இழுத்துப் போட்டு உட்கார வைத்து, வெற்றிலைத் தட்டை நீட்டுகிறாள்.

''போடுவீங்களா....?''

''ம்.''

''டாக்டராச்சே, போடுவீங்களோ மாட்டீங்களோன்னு நினைச்சேன். பல்லிலே கறையாயிடுமே.....''

மௌனமாக வெற்றிலைகளைப் பொறுக்கிக் கொண்டிருந்தவள் விழிகளையுயர்த்தி அவனைப் பார்க்கிறாள்.

பளிச்சென்று மற்றுமொரு புன்னகை. இதென்ன இவனுக்கு டிரேட் மார்க்கா...

''என்ன பாக்கறீங்க. உங்க பேரு, காதம்பரி — நைஸ் நேம்.... இந்த பேரு கொஞ்சம் ரேர் இல்லே.... யார் செலக்ட் பண்ணி வெச்சாங்களோ....''

தாத்தாதான் வைத்தாராம். அதுவும் பிறந்த உடனேயே. தொட்டில்விட்டு பெயர் வைக்கக் கூட காத்திருக்கவில்லை. வெளி நாடுகளிலெல்லாம் செய்வது போல் பிறந்த உடனேயே பெயர் சூட்டப் பெற்றவள் அவள். அதுவே வித்தியாசந்தானே....


ஆனால் சொல்லவில்லை. ''இதென்ன கேள்வி. எல்லாருக்கும் போல அப்பா அம்மா தான்.....''

''இல்லே. சில சமயம் குப்ப ராஜு, ஹச்சப்பா அப்படின்னெல்லாம் ரொம்ப பழங்காலமா பேர் இருக்கிறவங்க, பெரியவங்களா போன பிறகு தாங்களாகவே கொஞ்சம் அன்யூஷ்வலா ஒரு பேரை செலக்ட் பண்ணி வெச்சுப்பாங்க. அந்த மாதிரியோன்னு.... போகட்டும். உங்களைப் பார்த்தாலும் ஒரு டாக்டர்னு நம்ப முடியல்லே....''

''அதென்ன அப்படி சொல்றீங்க?''

''வந்து.... நீங்க அங்கேயும் வித்தியாசமா தெரியறீங்க. யூ லுக் ஸோ யங்....''

குப்பென்று முகம் சிவக்கிறது காதம்பரிக்கு.



"அதாவது, வந்து.... டாக்டர்னு ஒரு கொண்டை, மூக்குக் கண்ணாடி. கண்டிப்பா மூக்குக் கண்ணாடி. இதுவரை ஸ்பெக்ஸ் போட்டுக்காத டாக்டரை நான் பார்த்ததில்லே. இப்படி எதுவுமில்லாம உங்களைப் பார்த்தா....." அவன் நிறுத்தி சிரிக்கிறான்.

"சொல்லட்டுமா..... யாரோ பிலிம் ஸ்டார்னு நினைச்சேன்...."

ஓ! அதுதான் அப்படி உற்று உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தானா. காலையில் முகூர்த்தத்தின் போது.....! ஏன் இப்படி எல்லோரும் நினைக்கிறார்கள். அவள் விசேஷமாய் அலங்காரங்கள் கூட செய்துக் கொள்வதில்லையே. தவிர அழகுக்கு இலக்கணமே சினிமா நட்சத்திரங்கள்தானா....

"நீங்க ஸைக்கியாட்ரிஸ்ட்டுன்னு கிருபா சொன்னார். அதனாலே உங்ககிட்ட கொஞ்சம் கேர்ஃபுல்லா இருந்துடறது நல்லதே. மனசிலே அடியில எதானா ஒளிச்சு வெச்சிருந்தாக் கூட கொக்கிப் போட்டு வெளியிலே இழுத்துடுவீங்க இல்லே?"

"ஏம்பா, அப்படி முக்கியமா எதானா ஒளிச்சு வெச்சிருக்கியா. இந்த பாச்சிலர்களையே நம்பக் கூடாது....." என்று சேர்த்துக் கொள்கிறார் கிருபாகரன்.

பிரபு பாச்சிலரா....

"ஏன் ஸார், பிறக்கச்சேயே நீங்க குஸுமாவோடு ஜதையாவா பிறந்திங்க, நீங்களும் பாச்சிலரா இருந்தவர்தானே. எத்தனை கொட்டம் அடிச்சிங்களோ, எல்லாத்தையும் மறந்துட்டு இப்போ இப்படி வாரலாமா..."

"நான் கிளம்பட்டுமா...." எழுந்திருக்கிறாள் காதம்பரி.

"என்ன எழுந்துட்டிங்க. ப்ாச்சிலர் ஜோக்ஸ் அடிக்கப் போறோம்னு நினைச்சுட்டீங்களா...."

முறைக்கிறாள்.

அவன் சிரிக்கிறான்.

இந்த ஆசாமியால் சிரிக்காமல் இருக்கவே முடியாதா? உதடு மட்டுமா, கண் மூஞ்சி எல்லாமே சிரிக்கிறதே. மனசுகூட அப்படித்தானோ..... இருக்கும். மனசு சிரித்தால்தான் கண் பிரதிபலிக்கும். முகம் சிரிக்கும் இல்லையோ.....

"என்ன கிளம்பிட்டீங்களா காதம்பரி... தாம்பூலம் எடுத்துகிட்டீங்களா....." கேட்டுக் கொண்டு வருகிறாள் விமலா.

"ம். போயிட்டு சாயங்காலம் ரிஸப்ஷனுக்கு வரேன்....

"நான் வேணுமானா உங்ககூட நடந்து வரட்டுமா?" கேட்கிறார் கிருபாகரன்.

"ஐய்யோ வேண்டாம். தெருக்கோடிக்கு துணையென்ன...."

"ஊர்க்கோடியானாகூட வேணும்பீங்க. உங்களாட்டம் ஒருத்தரை நான் பார்த்ததேயில்லே. இவ்வளவு பழகியும் இன்னும் சங்கோஜம். என்னைப் பாருங்க. குஸுமா இன்ட்ரொட்யூஸ் பண்ணினதுதான் சாக்குன்னு எத்தனை தரம் உங்க வீட்டுக்கு வந்து வலுவிலே உங்களை சிநேகம்பிடிச்சேன். ஏழெட்டு தரம் நானு வந்த பிறகுதானே நீங்க ஒரு தரம் வந்தீங்க."

வாஸ்தவந்தான். எல்லாருமே இங்கே சரளமாக, ரொம்ப சகஜமாகத்தான் பழகுகிறார்கள். இளைய தலைமுறையினர் என்றில்லை. பழங்காலமான விமலாவின் மாமியார்கூட காதம்பரிமுதல்தரம்போனபோதே ஏதோ ரொம்ப நாள் தெரிந்தவர் போல் 'திரும்பும்மா' வென்று சொல்லி கோர்த்த மகிழம்பூவை தலையில் சூட்டிவிட்டார்.

"இனிமே நீங்க போறும் போறும்கற வரையிலே வரேன். வந்து உட்கார்ந்தேன், எழுந்து போகவே மாட்டேன். போரடிக்கிறானே இப்படின்னு நீங்களே சொல்லுவீங்க."

"மாட்டவே மாட்டோம். கவலைப்படாதிங்க. ஏன் விமலா இப்பவே எழுதிக் கொடுத்திடலாமா, உங்க கம்பெனி போரடிக்காது, இனிதே வருகன்னு...." என்று சேர்ந்து வற்புறுத்துகிறான் ராஜப்பா, விமலாவின் கணவன்.

"இத்தனை பேரும் சேர்ந்துட்டிங்கன்னு ஒண்டியா நான் சமாளிக்க முடியுமா?"

"இன்னிக்கு ஞாயிற்றுக்கிழமையா. பாக்கணும் அடுத்த ஞாயிறுக்குள்ளே எத்தினி தரம் வரிங்கன்னு...."

"கரெக்ட் ராஜப்பா...."

"இதோ இன்னிக்கே இன்னும் கொஞ்ச நேரத்திலே திரும்பி வரப் போறேனே ரிஸப்ஷனுக்கு? வர வேண்டாமா....?"

"சரியான ஆளு நீங்க?"

"என்னவோ. சரின்னு சொல்றப்பவே கிளம்பிடறதுதான் நல்லது. வரட்டுமா...." சிரித்துக்கொண்டே கிளம்புகிறாள் காதம்பரி.

ஒருவருக்கொருவரிடம் பற்றும் அக்கறையும் இயல்பாகவே இவர்களிடம் இருப்பது போல் தோன்றுகிறது. வக்கிரங்களற்ற மனசு. குடைந்து குடைந்துப் பார்க்கத் தோன்றாத. கேட்கத் தோன்றாத சுபாவம். அவளைப் பற்றிகூட எதுவும் துருவித் துருவிக் கேட்கவில்லை. விமலாவே கூட 'தனியாகவா இருக்கீங்க' என்று அன்று கேட்டதோடு விட்டு விட்டாள். அப்புறம் அதைப் பற்றி பேசவேயில்லை. இப்படி யதார்த்தமாயிருப்பவர்களுடன் ஒன்றிவிடுவது எவ்வளவு சுலபமாயிருக்கிறது!

(தொடரும்)

தயிர் வடைக்கு ஒரு ஐடியா:

நன்றாக நீரைக் கொதிக்கவிட்டு இறக்கி வைத்துக் கொண்டு, வடையை எண்ணெயிலிருந்து எடுத்து, அப்படியே வெந்நீரில் போடுங்கள். ஐந்து நிமிடம் கழித்து எடுத்துத் தயிரில் போட்டால் நன்றாக உடனே ஊறும்! தயிரும் நிறையத் தேவைப்படாது! உடனே சாப்பிடலாம்.

— உமா குமார்.

இதோ ஹேர் ரிமூவர் பற்றி நீங்கள் அறிய விரும்பிய விவரங்கள் அனைத்தும்!

எனது கைகளிலும் கால்களிலும் உள்ள ரோமங்களைக் காணவே எனக்குப் பிடிக்கவில்லை. ஆனால் அவற்றை நீக்க பயம். நீக்கினால், அடர்த்தியாகவும் விரைவாகவும் வளராதா?

நீங்கள் எப்படி ரோமத்தை நீக்குகிறீர்கள் என்பதைப் பொறுத்தது அது. பிளேடு உபயோகித்தால், ரோமம் விரைவாகவும், முரடாகவும் வளரும்...சே! ஆனால் கோத்ரெஜ் ஹேர் ரிமூவர் பயன்படுத்தினால் அப்படி ஆகாது. ஏனெனில், இந்தக் க்ரீம், ரோமத்தை பெண்மையின் மென்மைக்கேற்ப இதமாக நீக்குகிறது, உங்கள் கைகள், அக்குள், கால்களில் உள்ள ரோமங்களை மட்டுமல்லாமல் முகத்தின்மீது உள்ளவற்றைக்கூட சுலபமாக அகற்றலாம்.

ரோமத்தை நீக்கும்போது வலிக்காதா?

இதுவும் நீங்கள் பின்பற்றும் முறையைப் பொறுத்திருக்கும். வேக்ஸிங் முறையைக் கையாண்டால் வலிக்கும். ஏனெனில், வேக்ஸிங் செய்யும்போது ரோமம் பிடுங்கப் படுகிறது....ஆ! ஆனால் கோத்ரெஜ் ஹேர் ரிமூவர் ரோமத்தை மெதுவாக, மிக மெதுவாக களைகிறது. உங்களுக்கு ரோமத்தை அகற்றுவதே தெரியாது.

எனது தோழி ஒருத்தி ரோமத்தை நீக்குவதை நான் பார்த்தேன். அவளது சருமத்தில் சிவப்பாய், திட்டுத்திட்டாய் தடிப்பு ஏற்பட்டது...

மிக மென்மையான சருமங்களுக்கு இது ஏற்படுவதுண்டு, குறிப்பாக வேக்ஸிங் வழியை பின்பற்றும்போது. ஆனால் கோத்ரெஜ் ஹேர் ரிமூவரில் இயற்கை ஸ்கின் கண்டிஷனரான மஞ்சள் கலந்துள்ளது. ஆகவே, நீங்கள், வேண்டாத ரோமத்தை வழித்து எடுக்கும்போதே சருமத்திற்கு மென்மையும் வழவழப்பையும் கூட வரவழைக்கிறீர்கள்.

ஹேர் ரிமூவர்கள் அசௌகரிய மானவை, நேரமும் வீணாகும் அல்லவா?

கோத்ரெஜ் ஹேர் ரிமூவரை தடவத் தேவைப்படும் அப்ளிக்கேட்டரும் அத்துடன் தரப்படுகிறது. க்ரீமை மேலே தடவிக் கொள்ளுங்கள். சிறிது நேரம் விட்டுவைத்து, துடைத்து விடுங்கள். அவ்வளவுதான், மிக எளிதானது! ஆனால், வேக்ஸிங் செய்தாலோ, ஒட்டும் வேக்ஸ், அதற்கென துண்டுத் துணிகள் என பல தொல்லைகள். அதற்கு செலவிடும் நேரமும் அதிகம்.


ஹேர் ரிமூவர்கள் நாற்றமெடுக்கும் இல்லையா?

கோத்ரெஜ் ஹேர் ரிமூவரில், மற்ற ஹேர் ரிமூவர்களில் உள்ளது போன்ற ரசாயன நாற்றம் கிடையாது. நேர்மாறாக, இதனில் இனிய வாசனை உண்டு. இனியென்ன? தயங்காமல் கையில்லாத ஜாக்கெட்டுகள் அல்லது ஸ்ட்ராப் இல்லாத ஃப்ராக்குகளை அணிந்து மகிழுங்கள். ஆனால் முதலில் கோத்ரெஜ் ஹேர் ரிமூவர் வாங்குங்கள்.



CHAITRA-G-268 TAM-R

தேநீரும் விருந்தோம்பலும் ஸாகர் ஸ்கிம் மில்க்கும்



உங்கள் இல்லத்திற்கு வருகை தரும் நண்பருக்கு முதலில் வழங்குவது எது ? நல்வரவு என்று சொல்லும் புன்னகையும் நல்லதொரு கோப்பை தேநீரும் தானே ! அது வழி வழியாய் வரும் உங்களுடைய கலாசாரத்தின் பிரதிபலிப்பு.

இம்மாதிரி சமயங்களில் பால்பாட்டில் காலியான பரிதவிக்கும் நிலையில் நீங்கள் இருந்தால் ? உடன் புதிய பால் கிட்டாத நிலையானுலோ ?

ஸாகர் ஸ்கிம் மில்க் பவுடர் உங்கள் பாரம்பரிய விருந்தோம்பலை நீங்கள் பேண உதவுகிறது. சிக்கனமாக, விரைவாக, எளிதாக. இனிப்புகளுக்கும் புட்டிங்குகளுக்கும் இது ஈடு இணையற்றது.

புதிய மணங்கவரும் பேக்கில்



ASP/SMP/5/84R

ஸாகர்

ஸ்கிம் மில்க் பவுடர்

கொழுப்பு இல்லாத பாலின் உன்னதமான குணங்கள் உண்டே இதில்.

விற்பனைக்கு விடுபவர்:
குஜராத் கோ-ஆப்பரேடிவ் மில்க் மார்க்கெட்டிங் பெடரேஷன் லிமிடெட், தபால் பெட்டி எண் 10, ஆனந்த 388 001, குஜராத்.

ராசி பலன்


டிசம்பர் 85

மேஷம்



நீங்கள் திட்டமிட்டிருந்த காரியங்களில் எதிர்பாராத வகையில் அரசாங்கத்தாலோ மற்றவர்களாலோ மாறுதல்கள் ஏற்பட்டுவிடும். இதனால் பொருள் நஷ்டம் ஏற்பட்டாலும் காரியங்கள் நிறைவேறிவிடும். ஓரளவு கால தாமதத்தைத் தவிர்க்க முடியாது. பிரயாணங்களினால் அலைச்சலும் சலிப்பும் ஏற்பட்டாலும் இறுதியில் நினைத்த பலன் கிடைத்துவிடும். சந்தோஷமே நிலவும். குடும்ப உறவுகள் சுமுகமாகவே இருக்கும்.

ரிஷபம்




எப்பொழுதும் ஒதுங்கியே இருக்கும் குணமும், அதிகம் பேசாத சுபாவமும் கொண்ட நீங்கள் உங்கள் பழக்க வழக்கங்களைக் கொஞ்சம் மாற்றிக் கொண்டீர்களானால் நல்ல பலன் கிடைக்கும். அனைவரிடமும் சண்டை போடும் குணத்தையும் விட்டு விடுங்கள். மனசாட்சிக்கு விரோதம் இல்லாத வகையில் மற்றவர்களுடன் ஒத்துப் போனால் வாழ்க்கையில் நல்ல முன்னேற்றம் கிடைக்கும். அதற்கான வாய்ப்புக்கள் வரும் போது அவற்றை விடாதீர்கள்.

மிதுனம்




சிறந்த இலட்சியமும், வாழ்க்கையில் முன்னேற்ற எண்ணமும் கொண்ட நண்பர்கள் இம்மாதத்திற்குள் உங்களுடன் வந்து சேருவார்கள். அவர்களின் மூலமாகப் பண வரவு ஏற்படும். உங்களுடைய பழக்க வழக்கங்களிலும் அதனால் மாறுதல் ஏற்படக்கூடும். வெளியூர் பயணங்களும் நினைத்தபடி திட்டங்கள் நிறைவேறுதலும் ஏற்படும். பொது மக்களிடையே பெயரும் புகழும் கலைஞர்களுக்கு உண்டாகும்.

கடகம்



உங்களைப் பொறுத்தவரை இம்மாதம் பணச் செலவு அதிகமாகவே இருக்கும். குடும்பத்தில் மற்றவர்களுக்கு சுகவீனம் ஏற்படுவதால் பொருள் நஷ்டமும், மனக்கஷ்டமும் உண்டாகும். அரசாங்க கோர்ட் வேலைகளினாலும் அலைச்சல்கள் ஏற்படலாம். எனினும் இவையனைத்தும் இம்மாதத்தின் இறுதிக்குள் தீர்ந்துவிடக் கூடிய வாய்ப்புக்கள் உண்டு. கணவரின் உறவினர்களின் வருகையால் பொழுது போக்கு அம்சங்கள் நிறைந்திருக்கும்.

சிம்மம்



நல்ல எதிர்காலத்தை ஏற்படுத்தக்கூடிய திட்டங்கள் நிறைவேறக் கூடிய வாய்ப்புக்கள் உண்டு. ஆனால் அதிகக் கற்பனைக் கோட்டைகள் கட்டுவதையும் மற்றவர்கள் மீது எப்பொழுதும் குறை கண்டு கொண்டே இருக்கும் குணத்தையும் நிறுத்த வேண்டும். உங்கள் முக ராசியின் காரணமாக அனைவருமே உங்களுடன் நல்லவிதமாகவே பழகுவார்கள். அதைப்

பயன்படுத்திக் கொண்டு உங்களுடைய வருங்காலத்தை அமைத்துக் கொள்ளுங்கள்.

கன்னி



இம்மாதம் ஆன்மிக சம்பந்தமான வேலைகளும் பிரயாணங்களும் மிகுந்திருக்கும். இதனால் மன நிம்மதியும் சந்துஷ்டியும் மிகுந்திருப்பதால் வருங்காலத்தைப் பற்றிய பயமும், தயக்கங்களும் நீங்கும். நீண்ட காலம் தடங்கல் பட்டிருந்த காரியங்கள் இம்மாதம் நினைத்தபடி கைகூட வாய்ப்புண்டு. இல்லறத்தில் பண வரவும், அமைதியும் நிலவும். குழந்தைகளினால் குதூகலம் உண்டாகும்.

துலாம்



இம்மாதம் பொதுவாக மற்றவர்களின் நல்லெண்ணம் உங்களுக்குக் கிடைக்காத மாதமாகவே இருக்கும். அலுவலகத்தில் உங்களைத் தவறாகப் புரிந்து கொள்ளும் நிலைமையும், குடும்பத்தில் சச்சரவுகளும் உண்டாகலாம். இதனால் ஒதுங்கியிருப்பதே நல்லது. யாருடனும் வீண் விவாதத்திலோ, பேச்சுக்களிலோ ஈடுபடாமல் பொழுது போக்கு அம்சங்களின் பக்கமாகவோ ஆன்மிக அமைதியைப் பெறுவதிலோ நாட்டம் செலுத்தினால் நல்லது.

விருச்சிகம்



குடும்பத்தினரிடையே மனம் விட்டுப் பேசும் பழக்கத்தை மேற்கொள்ளுங்கள். அதனால் உங்களைத் தவறாகப் புரிந்து கொள்ளும் போக்கை அவர்கள் மாற்றிக் கொள்ளக்கூடும். உங்களுடைய வருங்காலத் திட்டத்தை அவர்களிடம் விவரித்து உங்களுடைய சிரமத்தை எடுத்துச் சொல்லுங்கள். இதனால் பல மாற்றங்கள் ஏற்படுவதுடன், குடும்பத்தில் பல சுப நிகழ்ச்சிகளும் உண்டாகும்.

தனுசு



உங்களுடைய புதிய திட்டங்கள் அமோகமான வரவேற்பைப் பெறக்கூடிய வாய்ப்புக்கள் உண்டு. அரசாங்கத்திலிருந்து உங்களை கௌரவிக்கக் கூடும். விளையாட்டு வீரர்களுக்கும், வியாபார சம்பந்தப்பட்டவர்களுக்கும் புகழும், பண வரவும் ஏற்படும். கிடைத்த சந்தர்ப்பத்தையும், நட்பையும் பயன்படுத்திக் கொண்டீர்களானால் மள மள வென்று முன்னேறி விடுவீர்கள். குடும்பத்தினரின் பூரண ஒத்துழைப்பும், அக்கறையும் உங்களுக்குக் கிடைக்கும்.

மகரம்



சமீபத்தில் நீங்கள் தொடங்கியுள்ள வியாபார ஒப்பந்தங்களிலோ திட்டங்களிலோ சில மாறுதல்கள் ஏற்படலாம். அவற்றைக் கண்டு மன சஞ்சலப்பட வேண்டியதில்லை. மாற்றங்கள் முன்னேற்றத்திற்குச் சாதகமாகவே இருக்கும். குடும்பத்திலும் உங்களுக்குப் பிடித்த விதமாகவே காரியங்கள் நிறைவேறும். நீங்கள் மேற்கொள்ளும் வெளியூர்ப் பிரயாணங்கள் நல்ல பலனைத் தரும். பண வரவும் சரளமாகவே இருக்கும்.

கும்பம்



உங்களுடைய நெருங்கிய நண்பர்கள் அல்லது உறவினர்களின் மூலமாக நல்ல பல திட்டங்கள் உங்களுக்குக் கிடைக்கும். பெரியவர்களின் ஆலோசனைகள் சிறப்பாக அமைந்து அதனால் எதிர் கால வாழ்க்கைக்குப் பலமான அஸ்திவாரத்தை அமைப்பீர்கள். கடந்த காலத்தில் நீங்கள் செய்துவிட்ட தவறொன்று சில பாதிப்புக்களை ஏற்படுத்தலாம். நிவாரணத்தைத் தைரியமாகச் சிந்தித்து மேற் கொள்ளுங்கள்.

மீனம்



எந்தக் காரியத்தைச் செய்தாலும் அதிலேயே மூழ்கி அதிகமான பதட்டத்தை அடைவதால் திட்டங்களே பாழாகிவிடும் நிலையும் ஏற்படலாம். சிந்தித்து நிதானமாகச் செயல்பட்டீர்களானால் வெற்றி உங்கள் புறமே உண்டு. இதனால் குடும்பத்தாரிடையே ஏற்பட்டுள்ள மனக்கசப்பையும் நீக்கலாம். மேலதிகாரிகளிடமும் நல்ல பெயரைப் பெறுவீர்கள். நண்பர் ஒருவரால் பொருளாதாரச் சிக்கலும் நீங்கும்.

டாக்டர் பதில்கள்

த.த.ரஷ்யா



செல்வி ....

வயது 18. எனக்கு நிறைய பருக்கள் வந்ததால் கன்னத்தில் சிறு குழிகள் ஏற்பட்டுள்ளன. இதை சரி செய்ய ஏதாவது ஒரு எளிய வழி ஒன்றைத் தயவு செய்து கூறுங்கள்.

ஏற்கனவே ஏற்பட்ட பருக் குழிகளை சரி செய்ய இயலாது. பிளாஸ்டிக் அறுவை சிகிச்சை மேலைநாடுகளில் மேற்கொள்ளுகிறார்கள். அத்தகைய நிபுணரை அரசு மருத்துவமனைகளில் அணுகி கேட்டுப் பாருங்கள். வருவதற்கு முன் காப்பதே எளிது. சிறந்தது. குழந்தைச் செல்வங்களை அதிகம் பெற்றெடுத்தாலும் வாழ்க்கையிலேயே இவ்வாறு குழி விழுவதற்கும் வாய்ப்புகள் ஏராளம்.

சாந்தி, மணலூர்ப்பேட்டை

மணமாகவில்லை. நான் பார்க்க பெண்ணாகவே இல்லை. அதாவது பெண்ணுக்குரிய அழகு என்னிடம் இல்லை என்று என் தோழிகள் என்னைக் கிண்டல் செய்கிறார்கள். மார்பகம் பெரிதாக இல்லை என்று. அதற்கு ஒரு வழி இருந்தால் சொல்லுங்கள்.

உன் வயது தெரியவில்லையே சாந்தி. சாந்தமாக இரு. மணவாழ்க்கைக்கு மார்பின் அளவு முக்கியமல்ல. Paded Bra (பாடெட் மார்பணிகளை பயன்படுத்தி வெளிப்படையாக சரி செய்து கொள்ளலாம். மனதளவில் உனக்கு பெண்மனம். மற்ற இன உறுப்புகளின் வளர்ச்சி இருக்குமானால் உனக்கு விரைவில் சாந்தி முகூர்த்தம் ஏற்படுவது என்னவோ நிச்சயம். பாலூட்டுவதற்கும் மார்பின் அளவு முக்கியமல்ல. மற்ற முன் இதழ்களில் கூறிய உடற்பயிற்சியும் பயன்தரும். மேலைநாடுகளில் இதற்கான அறுவை சிகிச்சையும் உண்டு. ப்ளாஸ்டிக் அறுவை மருத்துவரை அணுகவும்.

கீதா. பாலக்காடு.

இப்போது சிசேரியன் செய்து கொள்வது சர்வ சாதாரணம் ஆகி விட்டது. சரி, வீட்டிற்கு வந்த பிறகு எத்தனை நாள் ஓய்வில் இருக்க வேண்டும்? எந்த மாதிரி உடற்பயிற்சி செய்ய வேண்டும்?

'என் வீட்டில்' குழந்தையை குளிப்பாட்ட யாரும் இல்லை. குழந்தையை நான் கீழே உட்கார்ந்து குளிப்பாட்டலாமா?

'சிஸேரியன்' அறுவை சிகிச்சை மூலம் குழந்தையை எடுப்பது என்பது புழக்கத்தில் அதிகமாக உள்ளதால் பல குழந்தைகள் தாய்மார்கள் உயிர்கள் காப்பாற்றப்படுகின்றன. பெரும்பாலும் 8—10 நாள்வரை மருத்துவமனையில் இருந்த பின் 'தையல்' பிரித்த பின் வீட்டிற்கு அனுப்புவது வழக்கம். வேறேதும் சிக்கல் இல்லையானால்.

இயற்கையாக மகப்பேற்றுக்கு பின்பும் தன்னையும் குழந்தையையும் பார்த்துக் கொள்ளக்கூடிய பணியை ஒரு வாரம் செய்த பின் சிறிது சிறிதாக மற்றப் பணிகளையும் செய்யலாம். அப்படியே இவ்வறுவை சிகிச்சை பின்னும் ஒரு மாதம் ஆனபின்னும் கனமான பொருட்களை (தண்ணீர் குடம், வாளி, ஈரத் துணிகள்) அல்லது மற்றொரு குழந்தை இவைகளை 3 மாதமேனும் தூக்குவதை அவசியம் தவிர்த்தல் வேண்டும். அப்படி ஒரு அவசியம் ஏற்பட்டால் உட்கார்ந்து கொண்டு அக் குழந்தையை மடியில் இருத்திக் கொள்ளல் வேண்டும்.

தொடர்ந்த இருமல், மலச்சிக்கல் இவை வராது தடுத்துக் கொள்ளல் வேண்டும். பணச் கணக்கும் பாராது, உன் கணவருக்கும் பின் விளைவுகளை (சிக்கல்களை) எடுத்துரைத்து உதவிக்கு வேறு ஆளோ, அல்லது பெருமளவுக்கு இவ்வகையான பணிகளுக்கு அவரையும் உதவச் சொல்லுங்கள். பல

விதங்களில் பலன் தரும். இருவருக்கிடையே அன்பும், பச்சாதாபமும் (Compassion & Sympathy) அதிகரிக்கவும், மற்றொரு பிறப்பைத் தள்ளிப் போடவும் குழந்தைகளுக்கு நல்ல பெற்றோர்கள் என்றும் மற்றவர்கள் கண்டு உறுத்த எடுத்துக்காட்டாகவும் உங்கள் குடும்பம் பல்கலைக் கழகமாக இருக்கும்.

வேறு வகை உதவியில்லையானால், சிறிய பாத்திரத்தில் தண்ணீர் எடுத்து நிரப்பலாம். அல்லது தண்ணீர் டியூபில் நிரப்பலாம். ஈரத் துணிகளை நடைகளை மிச்சப்படுத்த எண்ணாமல் சிறிது சிறிதாக பல நடைகளில் எடுத்துச் செல்ல வேண்டும். பெரிய பெட்ஷீட், போன்றவைகளை அலசுவதோ, துவைப்பதோ கூடாது.

எப்படி உங்கள் குழந்தைக்கு உணவை சிறிது சிறிதாக அதனதன் பசி வளர்ச்சிக்கு ஏற்ப அதிகரிக்கிறீர்களோ அதேபோல் உங்கள் பகுத்தறிவும் புகுத்தறிவும் நல்ல விகிதத்தில் கலந்து உங்கள் பணிகளையும் அதிகரித்துக் கொள்ளலாம். வாரங்கள் நாட்கள் என்று ஒரு கோடு போட்டு நிர்ணயிக்க இயலாது.

கே. வி. என். **சென்னை.**

எனக்கு வயது 22. எனக்கு உடம்புக்கு உஷ்ணம் அதிகம். மேலும் எனக்கு வெள்ளை படுவது ரொம்ப அதிகமாக உள்ளது. மாத விலக்கு ஆகும் அந்த 5 நாட்களைத் தவிர, மற்றநாட்களில்எனக்குஇந்தப்பிரச்னைதான். இதற்கு நான் ஒரு லேடி டாக்டரிடம் சென்று, வந்தேன். அவர் சில மாத்திரைகளும், அயர்ன் டானிக்கும் எழுதிக் கொடுத்தார்கள். அந்த மாத்திரைகளை 10 நாட்களுக்குச் சாப்பிட்டால் சரியாகிவிடும். பிறகு மறுபடி அதே பிரச்னைதான். எனக்கு இது ஒரு வருடமாக இருக்கிறது. என்னால் தாங்க முடியாமல்தான் தங்களுக்கு எழுதுகிறேன்.

K.V.N. அவர்களே, வயது 22. மணமானவரா, என்று தெரியவில்லை. உங்கள் பிரச்னைக்கு வேறு அரசு மருத்துவமனையிலோ சென்று வெள்ளையை கண்ணாடி தடவல் வழி பரிட்சை செய்து பின்பு சிகிச்சை பெறுவதே உசிதம். கருப்பை வாயில் ஏதும் தொல்லை உள்ளதா என்றும் பார்த்து அறிய வேண்டும். (2nd opinion). மற்றொரு தாய்சேய் நிபுணரை கலந்தாலோசிப்பதே நலம். மணமானவரானால் ஒரு சில நோய்களுக்கு இருவருமே (தம்பதிகள்) மாத்திரை உட்கொள்ள வேண்டும் ஒரே சமயத்தில்.

தாரா, **சென்னை—78.**

எனக்கு வயது 22. திருமணமாகி நான்கு வருடங்கள் ஆகின்றன. பத்து மாதத்தில் ஒரு குழந்தை இருக்கிறது. நான் கருத்தடை முறை ஏதேனும் பின்பற்ற நினைத்து மருத்துவரிடம் சென்று லூப் பொருத்திக் கொண்டேன். அதனால் எனக்கு அதிகமான இரத்தப் போக்குஏற்பட்டது.மருத்துவர்ஆலோசனைப்படி லூப்பை எடுத்துவிட்டேன். நான் கருத்தடை மாத்திரையை உபயோகிக்கலாமா? அதனால் உடலுக்குத் தீங்கு ஏதேனும் ஏற்படுமா?

அம்மா தாரா, நீங்கள் போய் லூப் பொருத்திக் கொண்டீர்கள். தற்சமயம் காப்பர் டி என்று ஒன்று பொருத்துகிறார்களே, எல்லா அரசு மருத்துவமனைகளிலும், எந்தச் செலவின்றியும் பொருத்திக் கொள்ளலாம். முதல் 2—3 மாதங்களுக்கு சிறிது தொல்லை இருக்கலாம் அல்லவா? புதிய செருப்பு போட்டுக் கொண்டாலோ, கண்ணி கழியும் நேரத்திற்குப் பின்பும் இல்லாததென்று? சரி, பரவாயில்லை தாராளமாககருத்தடை மாத்திரைகள் முறைப்படி தொடர்ந்து அதே நேரத்தில் எடுத்துக் கொள்வதால் நிச்சயம் பயன் உண்டு. முதல் 2—3 அட்டைகளுக்கு, கர்ப்ப காலத்தில் ஏற்படுவது போல் குமட்டல், தலை சுற்றல், ஏற்படலாம். ஏற்படும் என்று கட்டாயம் இல்லை. அதற்காக பொறுமை இழந்து விட்டுவிடாதே. சரிதானே. உன் எடை மற்ற பரிட்சைகளும் செய்து பார்ப்பார்கள். தொடர்ந்து முயற்சியும், மன உறுதியும் அவசியம் தேவை.

சுமதி, **போபால்.**

நான் 20 வயது நிரம்பியவள். 5, 6 மாதங்களாக எனது மார்பகத்தில் காம்பைச் சுற்றி வலி இருக்கிறது. இரு மார்பகத்திலும் வலி தோன்றி ஊசி குத்துவது போன்ற வலி தீர்ந்த பின்னும் மார்புக் காம்பைக் கையால் தொட்டால் லேசாக வலி இருக்கிறது. இந்த வலி சாதாரணமாக எடுக்கக் கூடிய வலி தானா? இல்லை என்றால் இது எதனால் ஏற்படுகிறது? இதற்கு என்ன செய்ய வேண்டும்?

மார்பு காம்பைச் சுற்றியுள்ள வலிக்கு மருத்துவர் பரிட்சை பார்த்த பின்னே கூற இயலும்.

சமீபத்தில் என் கணவருடன் நண்பர் வீட்டிற்கு நவராத்திரிக்குச் சென்றிருந்தோம். விடைபெறும்போது, வந்திருந்த பெண்கள் எல்லோருக்கும் ரவிக்கைத் துணியும், கூட வந்த ஆண்களுக்கு அழகான கைக்குட்டையும் (கர்சீஃப்) வெற்றிலைபாக்குடன் வைத்துத் தரப்பட்டது. வந்திருந்த ஆண்கள் கர்சீப் வழங்கியதை மிகவும் பாராட்டி ரசித்தனர். மனைவிக்கு புடவை, நகை என்று வாங்கித் தரும் கணவருக்கு இம்மாதிரி சிறு அன்பளிப்பு வழங்குவதை நாமும் பின்பற்றலாமே?

—லலிதா ரவி.

சொல்ல விரும்புகிறோம்

* 'ம' போட்டுத் தரவில்லை என்ற அற்ப காரணங்களுக்காக 'டைவர்ஸ்' செய்துவிடும் இக்காலத்தில் பொறுமையாயிருந்து கணவரைத் திருத்திய சகோதரிகளின் கட்டுரைகள் மனத்திற்கு ஆனந்தமளித்தது.

கோவை.

உமாசக்தி.

* மகளிர் பற்றிய ஜாவரின் அலசலில் பொதுவாக 'மேல் சாவினிஸமே' தலைதூக்கி நிற்பது குறிப்பிடத்தக்கது. எல்லாவற்றையும் விழுங்கிக் கொண்டு ஜீரணிக்க முடியாமல், இல்லறத்தின் 'கண்' ஆக உழல்கிறாளே பெண்? அதுதான் தாய்க்குலத்தின் தனிப் பெருமையும், பலமும்.

ஸ்ரீரங்கம்.

பத்மா கோபாலன்.

திருமதி விமலா ரமணியின் 'நிழல் சித்திரங்கள்' படித்தோம். ஒரு தரமல்ல, பல தரம். அது நிழல் சித்திரங்கள் என்பதைவிட 'அசல் சித்திரங்கள்' என்றே கூற வேண்டும். அரசன் அன்று கொல்வான், தெய்வம் நின்று கொல்லும் என்பதற்கிணங்க, சேஷாமணி, புவனாவின் கதை இருந்தது. மனத்தை நிறைத்தது.

சென்னை — 40.

சசிரம்.

* கவிஞர் முருகதாசனின் பேட்டி ரொம்ப ஓவர். இவருக்கு, அரும்பு மீசைக்காரர் ரா. ரமேஷ் பேட்டி ஒரு குட்டு. அந்தக் காலத்தில் கணவன், குடி, சிகரெட் எல்லாம் குடிக்க மாட்டான். அதான் அப்போ பெண்கள் கணவன் சாப்பிட்ட இலையில் சாப்பிட்டாள். தராசில் ஒரு பக்கம் கவிழ்கிறது என்றும் அது மறு தட்டின் வினையால்தான் என்பதை இவர்கள் அறியட்டும்.

இப்படிப் பெண்களை இழிவு படுத்தும் பேட்டிகளை பத்திரிகையிலே போடாதீங்க!

மயிலாடுதுறை.

கே. முத்துலட்சுமி.

* சேதாரம் இல்லாமல் நகை செய்ய முடியும் என்றல்லவா திருத்திக் காட்டியுள்ளார் இலக்கியம் காட்டும் அணிகலன்கள் கட்டுரையில் டி. இராதாகிருஷ்ணன்.

புதுடில்லி — 19.

சுதமதி.

* அன்றாடம் தரம் கெட்டுப் போகக் கூடிய பலதரப்பட்ட நகைகளைப் பாதுகாப்பது எப்படி என்று தரமான விஷயங்கள் — தந்து குடும்பங்களுக்குக் கிடைத்த வரப் பிரசாதம்.

அரகண்ட நல்லூர்.

செல்வி ஆர். மாரி.

* 'பத்திரிகையிலே போடாதீங்க!' பகுதியில் தானே வந்து பேட்டி கொடுத்து வெளியிட்ட அந்த ஜோடி பேருக்கும் எங்களது வாழ்த்துக்கள். அடுத்த பங்காளியைச் சமமாக போற்றும் [illegible] கள். கா. ரமேஷ், சிவன் என். கே. [illegible] எங்களது தீபாவளி இவர்களுக்கு [illegible].

மதுரை — 2.

வாழ்த்துக்கள் மணி & ரமணி

[illegible] மணி

* இவர்கள் யார் பகுதியில் பெண்குலத் திலகமான திருமதி இராதா தியாகராசனைப் பற்றிக் குறிப்பு வெளியிட்டிருந்தீர்கள். ஆனால் வேறு யாருடைய படத்தையோ பிரசுரித்திருக்கிறீர்களே!

கும்பகோணம்.

தி. சகலா.



இராதா தியாகராஜன்

ஸ்ரீ மஹா திரிபுரசுந்தரி

பரம்பொருளைத் தாயாகப் பாவித்து வழிபடுவது சுலபமானதும், நெருக்கமானதும் உரிமையானதும் கூட. ஆதி சங்கரர் "கெட்ட பிள்ளை தோன்றக்கூடும், ஆனால் கெட்டதாய் என்றுமே தோன்றுவது கிடையாது" என்கிறார்.

உபாத்தியாயனை விடப் பத்து மடங்கு அதிகமாக ஆசார்யனும், ஆசார்யனை விட நூறு மடங்கு அதிகமாக பிதாவும், பிதாவை விட தாய் ஆயிரம் மடங்கு அதிகம் மதிப்பும், மரியாதையும், பெருமையும் உடையவள் என்று தர்மசாஸ்திரம் கூறும். சாதாரணமாக உலகியலில் எவ்வளவு வயதானாலும் தாய் செலுத்தும் அன்பு குறைவதில்லை. அதுபோல அன்பே வடிவான தெய்வம் உயிர்களிடத்துச் செலுத்தும் அன்பும் குறைவதில்லை. வள்ளலார் இறைவனை, "தாயாகி தந்தையாகித் தாங்குகின்ற தெய்வம்" என்றும், தாயுமானவர்,

"கன்றினுக்குச் சேதா கனிந்திரங்கல் போல
எனக்கென்று இரங்குவாய் கருணை எந்தாய் பராபரமே."

என்றும் குறிப்பிடுவார்கள்.

பக்தி வெள்ளம் பெருக்கெடுக்கும்போது கூட அதைத் தாய் என்று அழைப்பது இயல்பாகும். தான் முற்பிறவிகளில் செய்த வினைகளின் பயனாய் தான் பயந்து நடுங்கும்படி கூற்றுவன் போர்க்கோலம் கொண்டு தன்னை அழைக்கும் போது அபிராமியை "அம்மா" என்று கூப்பிடுவதாக அபிராமி பட்டர், "இழைக்கும் வினை வழியே" எனத் தொடங்கும் அபிராமி அந்தாதிப் பாடலில் கூறுவார். எனவே பரம்பொருளைத் தாய் வடிவில் வழிபடுதல் தொன்றுதொட்டு இருந்து வரும் வழக்கமாக உள்ளது.

சக்தி இல்லாவிடில் உலகில் எல்லாம் ஜடமாக இருக்கும். சிவன் கூட சக்தி இல்லாவிடில் இயங்க முடியாது. உடலில் சக்தியில்லாதவனை "விஷ்ணு ஹீனன்" என்றோ, "ருத்ர ஹீனன்" என்றோ சொல்வதில்லை. "சக்தி ஹீனன்" என்றுதான் சொல்லுவார்கள். சிவம் சக்தி சேர்ந்தே இயங்கும்.

சிவ — சக்தி, லட்சுமி — நாராயணன், ராதா—கிருஷ்ணன், சீதா—ராமன், புருஷன்—பிரகிருதி எனப் பார்க்குமிடமெங்கும் சக்தி நீக்கமற நிறைந்துள்ளது. மகிமை வாய்ந்த பராசக்தியின் அம்சங்களே தேவர்கள். ஒரு தேவனிடம் உள்ள சக்தி மற்றொரு தேவனிடத்தில் இருப்பதில்லை. எல்லாவித சக்திகளும் அம்பாளிடம் ஒன்றியிருப்பதால் அவளை பராசக்தி என அழைப்பர். அனாதியான வேதம் பராசக்தியையும் மற்றுமுள்ள தேவர்களையும் குறியிட்டுக் காட்டும்.

"தேவி படைக்கும் காலத்தில் ஸரஸ்வதியாகவும், பரிபாலன காலத்தில் மகாலட்சுமியாகவும், அழிக்கிற காலத்தில் மகாதுர்க்கையாகவும் விளங்குகிறாள். மும்மூர்த்திகளும் ஜகதீஸ்வரியின் ஏவலினால் தத்தம் தொழிலைச் செய்ய இம்மூன்று தேவதைகளையும் வழிபட்டு வருகிறார்கள்" என்று அவளுடைய மகிமையை தேவீ பாகவதம் கூறும்.

காளிதாஸனும் தேவியின் சொரூப லட்சணத்தை சியாமளா தண்டகத்தில் மேற்கண்டவாறு கூறியுள்ளார். சிரசில் மதியும்; பெருத்த குசங்களும்; சிவந்த மேனியும்; செங்கரும்பு, பாசம், அங்குசம், மலர் பாணம் தாங்கிய நான்கு கரங்களுடன் கூடி இந்த உலகிற்கு ஒரே தாயாகத் தோன்றும் தேவிக்கு நமஸ்காரம் என்ற கருத்துத் தோன்ற,

"சதுர்புஜே சந்த்ரகலா வதம்ஸே
குசோன்னதே குங்குமராக ஸோணே;
புண்ட்ரேக்ஷு பாசாங்குஸ புஷ்பபாண
ஹஸ்தே நமஸ்தே ஜகதேக மாத:"

என்ற சுலோகத்தில் வர்ணித்துள்ளார். அபிராமிபட்டரும் இக்கருத்துக்களை உள்ளடக்கி,

"துணையும் தொழும் தெய்வமும் பெற்ற தாயும் சுருதிகளின்
பணையும் கொழுந்தும் பதிகொண்ட வேரும் பனிமலர்ப்பூங்
கணையும் கருப்புச் சிலையும் மென் பாசாங்குசமும் கையில்
அணையும் திரிபுரசுந்தரியாவது அறிந்தனமே."


லதா

என்ற அபிராமி அந்தாதிப் பாடலில் கூறியுள்ளார்.

இப்பாடலில், திரிபுரசுந்தரி ஆன்ம கோடிகளுக்கு உற்ற துணையாகவும் அவர்கள் வழிபட வேண்டிய ஒரே தெய்வமாகவும் விளங்குவதாகக் குறிப்பிட்டு: அவளே சகல ஜீவ ராசிகளையும் ஈன்ற தாயாகவும், வேதங்களின் சாகைகளாகவும், தளிர்களாகவும், வேராயும் இருப்பதாகவும் வர்ணித்துள்ளார். சாக்த சித்தாந்தத்தின் அடிப்படை கொள்கை, மஹா திரிபுரசுந்தரி என்ற புனித திருநாமத்தில் அடங்கியுள்ளது. எனவே இத்திரு நாமத்தை வாயினால் ஓதுவதும், சிந்தையிலே தியானம் செய்வதும் உயர்ந்த பயனை அளிக்கக் கூடியதாகும்.

ஸ்ரீ மஹாதிரிபுரசுந்தரி ஜகன்மாதாவாக, சிறப்பு மிக்க பேரரசியாக, சீரிய சிங்காதனத்தில் அமர்ந்து உலகை அடக்கி ஆள்பவளாக இருக்கிறாள் என்பதை "ஸ்ரீ மாதா, ஸ்ரீ மஹாராக்ஞீ, ஸ்ரீமத் ஸிம்ஹாஸநேச்வரி," என்ற மூன்று திருநாமங்களால் லலிதா ஸஹஸ்ர நாமம் சிறப்பித்துக் கூறும். வசந்த நவராத்திரி சமயத்தில் ஸ்ரீ மஹாதிரிபுரசுந்தரி மட்டும் தனித்துப் பூஜிக்கப்படுகிறாள்.

மாயூரம் அபிராமிதாஸன்.

வயிற்றுப் பூச்சிகள் ஒழிய...

வாத நாராயண மரத்தின் இலைகள் பாஞ்சாலி மரத்தின் இலைகள் போன்று இருக்கும்.

1 இந்த மரத்திலிருந்து 20 அல்லது 30 ஆர்க்குகள் பறித்துச் சுத்தமாக (பழுப்பு இலைகள் இல்லாமல்) அலம்பி, ஒரு பாத்திரத்தில் போட்டு, 2 அல்லது 3 டம்ளர் தண்ணீர் கொட்டி அடுப்பில் வைத்து வேக வைக்கவும்.

2 அடுப்பில் வாணலியை வைத்து அதில் 1 டீஸ்பூன் நெய்யை விட்டு, அதில் பெருங்காயம் குன்றிமணி அளவு, சீரகம் 1 டீஸ்பூன், மிளகாய் வற்றல் — 2 இவற்றைப் போட்டுச் சிவக்க வறுத்து, இறக்கும் போது மிளகு 1 டீஸ்பூன் போட்டு இறக்கவும். வறுத்த மிளகு, சீரகம், மிளகாய் வற்றல், பெருங்காயம், இவற்றை அம்மியில் வைத்துப் பொடி செய்யவும்.

3 வாத நாராயண தழை வெந்ததும் அதில் இந்தப் பொடியைப் போட்டு, புளி கொட்டைப் பாக்களவு, தேவையான அளவு உப்புப் போட்டு, கொதிக்க விடவும். 2 கொதி வந்ததும், 2 டம்ளர் தண்ணீர் விட்டு சிறிது நேரம் கழித்து இறக்கவும். இறக்கியபின் இதில் மீத முள்ள நெய்யில் கடுகு தாளித்துக் கொட்டவும்.

இந்த ரசம் சாப்பிட்டால் சில நிமிடங்கள் கழித்து பேதியாகும். மலத்தில் வயிற்றிலுள்ள கீரைப் பூச்சிகள், குடல் பூச்சிகள் போன்றவை வெளியேறி விடும். மற்றும் இந்த ரசத்தை சாப்பிட்டால் வாயு கோளாறு, கைப்பிடிப்பு, கால் பிடிப்பு போன்றவை நீங்கும். இந்த ரசத்தை என் பாட்டி எங்களுக்கு அடிக்கடி செய்து தருவாள். அனுபவத்தினால் எழுதுகிறேன்.

— எஸ். விஜயா.

இன்று வைக்கும் சாம்பார் இரவிற்குள்ளேயே ஊசி விடுகிறதா? தவறு சாம்பாரில் அல்ல; நீங்கள் தயாரிக்கும் சாம்பார்பொடியில்கடலைப்பருப்பைச்சேர்த்திருப்பீர்கள். கடலைப் பருப்பைத் தவிர்த்து, ¼ கிலோ மிளகாய், 100 கிராம் மிளகு, 2 ஆழாக்கு தனியா, 1 ஆழாக்கு துவரம் பருப்பு என்ற விகிதத்தில் சாம்பார் பொடி தயாரித்து வைத்துக் கொள்ளுங்கள். சாம்பார் பிரமாதமாக இருப்பதோடு, அடுத்த நாள் வரை கெட்டுப் போகாமல் இருக்கும். இது என் அனுபவம்.

—திருமதி தேவஞானம்


மண்ணுலகில்
புதியதோர் சாதனை!
அது என்ன?
"கி.பி. 2000 ஆண்டிற்குள்
அனைவருக்கும் நல் வாழ்வு" என்பதே.
ஓர் அமைதியான இரவுப் பொழுதில்,
பிரகாசமான ஒளி வெள்ளத்தில் பலத்த
சப்தத்துடன் விண் வெளிக் கலத்திலிருந்து
இறங்கினாள் ஒரு விண்ணுலகக் குழந்தை.
'புதியதோர் உலகம் செய்ய'
மண்ணுலகில் என்னென்ன
செய்கிறார்கள் என்பதை ஒரு விவசாயியுடன்
பல்வேறு இடங்களுக்குச் சென்று
பல்வேறு நிகழ்ச்சிகளைக் காண்கிறாள்.
புதியதோர் உலகம் செய்வோம்
இந்த வண்ணத் திரைப்படம்
தடுப்பு ஊசி பற்றிய
விவரங்களை விளக்கிக்
கூறுகிறது
இது ஒரு தமிழ்நாடு ஒருங்கிணைந்த
ஊட்டச்சத்துத் திட்டத்தின்
தொடர்புப் பிரிவு தயாரிப்பு
DIPR 1021-85-Efficient

தமிழ்நாடு அரசு - சமூக நலத்துறை

ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டம்

குழந்தை நல விழிப்புணர்ச்சி முகாம்: 2.10.85 முதல் 31.12.85 வரை

உடல் நலம்

தடுப்பூசி



பெற்றோர் கவனத்திற்கு

1. தாய்ப்பால் கொடுக்கவும்.
2. 4 மாதம் முடிந்ததும் இணை உணவு கொடுக்கவும்.
3. சின்னக் குழந்தைக்கு ஒரு நாளில் பலமுறை உணவு கொடுக்கவும்.
4. மாதந்தோறும் குழந்தையை எடை எடுக்கவும்.
5. குழந்தைக்கு தடுப்பூசி போடவும்.
6. வயிற்றுப்போக்குக்கு உப்பு, சர்க்கரை நீர் கொடுக்கவும்.
7. நோய்வாய்ப்படும்போது உணவை நிறுத்த வேண்டாம்.
8. கீரை, நெல்லிக்காய், பப்பாளி அளிக்கவும்.
9. சுத்தமான நீரையே அருந்தவும்.
10. சிறு குடும்பம் வளமான வாழ்வைத்தரும். அதிக இடைவெளியில் இரு குழந்தைகள் போதும்.

நோய் சிகிச்சை

முறைசாரா கல்வி

ஊட்டச்சத்து நலக் கல்வி

இணை உணவு

சமூக நல இயக்ககம்,
485 அண்ணா சாலை
சென்னை-600 035

சூசன் மாத்யூ, இ.ஆ.ப.
இயக்குநர், சமூக நலத்துறை,
சென்னை.

DIPR. 1021/85-Efficient

பல்லவி(!)களைப் பற்றி...

சென்னையில் பல்லவன் பஸ்களில் பயணம் செய்யும் பெண்களின் எண்ணிக்கை அதிகமாகிக் கொண்டே இருக்கிறது. இதற்காகவே, 'மகளிர் மட்டும்' போர்டு தாங்கி பல்லவிகள் (பல்லவனுக்குப் பெண்பால்!) உற்சாகமாக சாலைகளில் வலம் வருவதைக் காணலாம். பெண்களிடம் மட்டுமின்றி இளைஞர்களிடம் இதற்கு ஒரு தனி 'மவுசு'— அப்படிப்பட்ட 'லேடீஸ் ஸ்பெஷல்'களில் சம்பந்தமுடைய சிலரிடம் அதிலுள்ள குறைகளைப் பற்றிக் கேட்டபோது —

திருமதி ரேவதி கிருஷ்ணமூர்த்தி (அரசு ஊழியர்):

நான் தினமும் 'லேடீஸ் ஸ்பெஷல்'களில் ஆலந்தூரிலிருந்து 'ஹவுசிங் போர்டு' ஆபீஸ் வரை செல்கிறேன். பல சமயம் 'லேடீஸ் ஸ்பெஷல்'கள் ஆலந்தூர் (ஆஷர்கானா) ஸ்டாப்பில் நிற்காததால் கிண்டி வரை வேறு பஸ்களில் சென்று அங்கிருந்து 'லேடீஸ் ஸ்பெஷலை' பிடிக்க நேரிடுகிறது.

வசதிகளுக்கு இடையே சங்கடங்களும் இதில்தான் அதிகம். லேடீஸ் ஸ்பெஷல்களில் முக்கிய இடைஞ்சல் கண்டக்டர்கள் தான்! டிக்கெட் கொடுக்கிறேன் பேர்வழி



என்று பெண்களை வெட்கப்படாமல், கூசாமல் இடித்துத் தாண்டிக்கொண்டு செல்கிறார்கள். மற்ற பஸ்களைப் போல 'பாட்டா' கிடைப்பதில்லை என்கிற எரிச்சலில் பஸ்ஸை பல ஸ்டாப்பிங்குகளில் நிறுத்துவதில்லை. அப்படியே பஸ்ஸில் இடமிருந்தாலும் ஸ்டாப்பைத் தாண்டி தள்ளியே நிறுத்தி, அரைகுறையாக ஏறும்போதே, வண்டியை கிளப்பி விடுகிறார்கள்.

ஒருமுறை இப்படி நிகழ்ந்த போது கண்டக்டரிடம் விளக்கம் கேட்க, அவரோ வண்டியை நிறுத்திவிட்டு வாய்க்கு வந்தபடி கத்த ஆரம்பிக்க, மற்ற பெண்களோ, நான்தான் தவறு செய்தது போலவும், அதனால் அவர்களுக்குத்தாமதம்ஏற்படுவதுபோலவும் என்னை 'முறைக்க'..... 'போதும் இந்தச் சீர்திருத்தம்..... நமக்கேன் வம்பு' என்றே தோன்றிவிட்டது.

இதையெல்லாம் பார்க்கும்போது, சம உரிமையைப் பெண்களுக்கு அளிக்க எண்ணுபவர்கள், பெண் போலீஸ், 'போஸ்ட் வுமன்'களை ஏற்படுத்தும்போது இனி 'லேடீஸ் ஸ்பெஷல்'களிலாவது பெண் கண்டக்டர்களை நியமித்தால், பெண்களின் சிரமங்களைப் புரிந்து கொண்டு, அனுசரணையாகச் செயல்படுவார்கள். வீண் தாமதங்கள் இருக்காது. மற்றொன்று மாலையில் வேலைக்குச் செல்லும் பெண்களுக்காக உமன்ஸ் ஸ்பெஷல்கள் காலையை விடக் குறைவு. கல்லூரி மாணவிகளுக்குத் தரும் இந்தச் சலுகை எங்களுக்கு 'பி. டி. சி.' தர மறுக்கிறது.''

திரு. தவசிநாதன் (பஸ் கண்டக்டர்)

மற்ற பொது மக்கள் தொடர்புள்ள வேலைகளைவிட எங்களின் வேலை ரொம்பக் கஷ்டம். காரணம், குறிப்பிட்ட நேரத்தில், லேட்டாகாமல் போகணும். டிக்கெட்டுகள் கொடுக்கணும். சீசன்களை 'பஞ்ச்' பண்ணணும். 'என்ட்ரி' போட்டுஸ்டேஜ் 'குளோஸ்' பண்ண



னும். இத்தனையும் கூட்டத்தின் நடுவில், வேகமாகச் செய்யணும். இதெல்லாம் பற்றி பயணிகள் கவலைப்படறதில்லை. பிறருக்கு டிக்கெட் வாங்கக்கூட உதவி செய்யறதில்லை. 'உமன்ஸ் ஸ்பெஷ'லில் இது அதிகம்.

டிக்கெட் குடுக்கப் போகிறபோது ஒதுங்கி வழிவிடறதும் கிடையாது. தெரியாமல் அவர்கள்மேல் பட்டுவிட்டாலும் சண்டைக்கு வருகிறார்கள். அசிங்கமான 'கமெண்டு'களை அடிக்கிறார்கள். இதெல்லாம் நான் பெரிசு படுத்தறதில்லை. 'பாட்டா' இதுல எங்களுக்கு குறைவுங்கறதுக்காக, அவர்களிடம் வெறுப்பை காண்பிக்கறதில்லை. இதுக்காக பெண் கண்டக்டர்கள் தேவைங்கறது சரியில்லை. அசம்பாவிதம், விபத்து, தகராறு என்று வரும்போது பெண் கண்டக்டர்களால் சமாளிக்க முடியாது.

பஸ்கள் நிற்கறதில்லேன்னு சொன்னால், இருக்கிற சர்வீஸில் தான் வண்டி விடுகிறார்கள். 'கபாசிடி'யை விட அதிகமாக எவ்வளவு தான் ஏத்த முடியும்? இது பற்றி பி.டி.சி. நிறுவனத்திடம் தான் முறையிட வேண்டும்.

கே. ரவீந்திரன் (பல்லவன் போக்குவரத்துக் கழக சேர்மன்)')

கடந்த முப்பது வருடங்களுக்கும் மேல் பெண்களுக்கென 'லேடீஸ் ஸ்பெஷல்' விடுவது பி.டி.சி.தான். இரண்டு மாதங்களுக்கு



ஒருமுறை நகரில் ஓடும் இந்த பஸ்களைப் பற்றி 'சர்வே' எடுக்கிறோம். இதன் அடிப்படையில்தான் தேவைப்படும் நாட்களில் இவற்றை அதிகமாக்குவதும் வேண்டாத போது குறைப்பதும் நடக்கிறது. ஆனால் தற்போதுள்ள நிலையில் இந்த 'உமன்ஸ் ஸ்பெஷல்'களை அதிகமாக்குவது என்பது முடியாதது.

அதனால்தான் பள்ளி மற்றும் கல்லூரி முதல்வர்களிடம் நகரில் நெரிசலைத் தவிர்க்க, நேரத்தை மாற்றி எட்டு மணிக்கு முன்போ, இரண்டு மணிக்குப் பின்னரோ அமைக்குமாறு பலமுறை கேட்டுக் கொண்டோம். ஆனால்சில பள்ளிகளும் ஓரிரு பெண் கல்லூரிகள் மட்டுமே இசைந்துள்ளார்கள். இவர்களுக்காக பல ஸ்பெஷல்களை ஏற்படுத்தித் தந்துள்ளோம். மற்றவர்களும் இதற்கு ஒப்புக் கொண்டால், நெரிசலைத் தவிர்ப்பதோடு, பல 'உமன்ஸ் ஸ்பெஷல்'களை அதிகப்படியாகவே ஏற்படுத்தித்தர தயாராக உள்ளோம்.

மேலும், மாலையில் வேலைக்குப் போகும் பெண்கள், எங்கள் 'சர்வே' படி 'ஷாப்பிங்' மற்றும் பல வேலைகளை முடித்துவிட்டு வேறு வேறு நேரங்களில் பயணம் செய்கிறார்கள். அதனால் அப்போது 'உமன்ஸ் ஸ்பெஷ'லை அதிகப்படுத்த அவசியமேற்படவில்லை.

பெண் கண்டக்டர்கள் தற்போது இருக்கிறார்கள். ஆனால் அதற்காக எல்லா 'லேடீஸ் ஸ்பெஷ'லிலும் அவர்களை நியமித்தால் மற்ற நேரங்களில் அவர்களுக்கு வேலை இருக்காது. அதனால் இது முடிகின்ற காரியம் இல்லை. ஆக, பொதுமக்கள், குறிப்பாக கல்வி நிறுவனங்கள் எங்களுடன் ஒத்துழைத்தால் இதுபோல பல மடங்கு ஸ்பெஷல்களை விட முடியும். ஆனால், நெரிசலைப் பற்றிப் பேசுபவர்கள், எங்களுடன் ஒத்துழைக்க மறுக்கிறார்கள்.

பேட்டி: **எஸ். ஆர். சங்கர்.**

---

* **தினமும் சென்னையில் பெண்களுக்கென ஐநூற்று எட்டு பஸ்கள் ஓடுகின்றன.**
* **'மகளிர் மட்டும்' செல்லும் மொத்த தடங்கள் நூற்றி நாற்பத்தியாறு!**
* **இந்தியாவிலேயே பெண் கண்டக்டர்கள் உள்ள முதல் இடம் பல்லவனில் தான்! ஏழு பெண் கண்டக்டர்கள் உள்ளனராம்!**
* **சென்னையிலேயே அதிகமாக 'லேடீஸ் ஸ்பெஷல்' உள்ள பஸ் 7C. ஒரு நாளைக்கு பன்னிரண்டு சர்வீஸ்களாம் (Singles)**
* **அதுமட்டுமல்ல, இந்தியாவிலேயே 'லேடீஸ் ஸ்பெஷல்' வேறு எங்கும் கிடையாதாம்!**

முற்றிய பாகல், புடலை விதைகளை வீசி எறியாமல் நன்கு வெயிலில் காய வைக்கவும். பின்பு உப்பு சேர்த்த தயிரில் 1 நாள் ஊற வைத்துப் பின்பு வெயிலில் நன்றாகக் காய வைக்கவும். இதைப் பத்திரப்படுத்திக் கொண்டு, வேண்டும் போது எண்ணெயில் பொரித்துச் சாம்பார், ரசம் சாதத்திற்குத் தொட்டுக் கொள்ளலாம். சுவையாக இருக்கும்.

— வசந்த குமாரி.

சமூக சேவைக்கு என்ன செய்யலாம்?







“எங்கள் சமூகத்திலே பெண்கள் வெளியே வந்து பொதுக் காரியங்களில் பங்கு கொள்வது என்பதே பாவமாகக் கருதுகிறார்கள். ஆனால் என்னால் அப்படி இருக்க முடியவில்லை. சினிமா பார்ப்பதும், சாப்பிடுவதும்; தூங்குவதும்தானா வாழ்க்கை....?”

என்கிறார் மைசூர் தமிழ்ச் சங்கத்தின் பெண்கள் பிரிவின் முக்கிய அங்கத்தினரான சூர்யா கணேஷ்.

“எல்லோருடைய எதிர்ப்போடும் ஒரு கடை வைத்திருக்கிறேன். அதற்கான சாமான்கள் வாங்க மெட்ராஸுக்கோ, பெங்களூருக்கோ நானேதான் போகிறேன். வாழ்க்கையைப் பயனுடையதாக வாழ வேண்டும் என்பதுதான் என்னுடைய எண்ணம்.”

என்கிறார் இவர்.

சூர்யா கணேஷ், சந்திரா ராஜா, வி. கீதா போன்ற பலரின் பெருமுயற்சியுடன் மைசூர் தமிழ்ச் சங்கத்தின் பெண்கள் அமைப்பு ஆரம்பிக்கப்பட்டதாம்.


“இந்தப் பெண்கள் சங்கம் ஆரம்பிக்கப்பட்ட பிறகுதான் மைசூரில் இத்தனை தமிழ்க் குடும்பங்கள் இருக்கின்றனவா என்று ஆச்சரியமாக இருக்கிறது. இப்போது ஆரம்ப நிலையில் இருந்தாலும் நாங்கள் சமூக சேவையை இன்னும் தீவிரமாக ஆரம்பிக்க வேண்டும் என்றிருக்கிறோம். என்ன செய்யலாம்?” என்று என்னை ஆலோசனை கேட்டார்கள். பல யோசனைகளைக் கூறினேன். அந்தக் குடும்பத் தலைவிகள் உற்சாகத்தோடு வரவேற்றார்கள்.

என்னுடன் மங்கையர் மலர் பற்றி ஆர்வத்துடன் பேச வந்த திருமதிகள் கீதா, சூர்யா, சந்திரா, ராஜேஸ்வரி, லட்சுமி, பாக்யா, நாகலட்சுமி, ராணி, செல்வி, வினு, தாரா, மாலினி, ராஜீ இவர்களில் சிலர் அட்டைப் படத்திலும் இருக்கிறார்கள்.

வண்ணப்படம்: யோகா.










வீட்டிலேயே செய்யலாம்



பினாயில்

தேவையான பொருட்கள்

சிற்றாமணக்கு எண்ணெய் — 1 கிலோ
ரோசனம் — ¼ கிலோ
லேட் கிரியோஸோட் ஆயில் — 300 கிராம்
காஸ்ட்டிக்சோடா தண்ணீர் — 200 கிராம்

செய்முறை

வீட்டிற்குத் தேவைப்படாத பாத்திரமாக எடுத்துக் கொள்ளுங்கள். இது போன்ற வீட்டிலேயே செய்யக் கூடிய பொருட்களைச் செய்வதற்கென்றே இந்தப் பாத்திரத்தை ஒதுக்கிவிடுங்கள்.

குறிப்பிட்ட பாத்திரத்தில் முதலில் ரோசனத்தைப் போட்டு அடுப்பில் ஏற்றவும். மெல்லிய தீயில் நன்கு உருகி வரும். முழுவதும் உருகி கொதிக்க ஆரம்பிக்கும் நேரத்தில் ஆமணக்கு எண்ணெயை விடவும். கை விடாமல் நன்கு கிளறிக் கொண்டே இருக்க வேண்டும்.

இரண்டும் இணைந்து நன்கு கொதிக்க ஆரம்பிக்கும் நேரத்தில் காஸ்டிக் சோடா நீரையும் விட்டு மேலும் கிளறவும்.

அடுப்பைத் தணித்துப் பாத்திரத்தை இறக்கி ஆடாமல் இரண்டு மணிநேரம் வைத்திருக்கவும். கலவை நன்கு ஆறிய பிறகு கிரியோசோட் ஆயிலையும் கலந்து நன்கு துடைத்த பினாயில் பாட்டில்களில் ஊற்றி வைத்துக் கொள்ளவும்.

வாசனை சீயக்காய்த்தூள்

நன்கு உலர்ந்த சீயக்காய்த் தூள் — ½ கிலோ
உசிலை இலை — 2 கிலோ
கஸ்தூரி மஞ்சள் — 200 கிராம்
கார்போக அரிசி — 50 கிராம்
பூலாங்கிழங்கு — 50 கிராம்
கோரைக்கிழங்கு — 50 கிராம்
கோஷ்டம் — 50 கிராம்
பாசிப் பயிறு — 50 கிராம்

செய்முறை

எல்லா சாமான்களையும் வெய்யிலில் வைத்து நன்கு காய வைத்துக் கொள்ளவும். பிறகுசீயக்காய்மிஷினில்கொடுத்து அரைத்து வைத்துக் கொள்ளவும். நல்ல வாசனையும், துளி எண்ணெய்ப் பிசுக்கு இல்லாமல் செய்யும் பொடி இது.

புவனேஸ்வரி.



எங்கள் கல்லூரியில் (மதுரை சரசுவதி நாராயணன் கல்லூரி) பயிலும் எஸ். ரமேஷ் சந்திரபோஸ் 4 வது செமஸ்டர் பரீட்சை எழுதப் போகும் நேரத்தில் உடல்நிலை பாதிக்கப்பட்டு இரண்டு கிட்னிகளுமே செயலற்று விட்டது என்று வேலூர் (சி. எம். சி.) மருத்துவமனை மருத்துவ நிபுணர்களால் அறிவிக்கப்பட்டது. செயலற்ற கிட்னிகள் இரண்டிற்குப் பதிலாக மாற்று கிட்னி பொருத்த வேண்டும். (Transplantation of Kidney) அறுவை சிகிச்சைக்கும், டயாலசிஸ் மற்றும் 4 மாத கண்காணிப்புச் செலவுக்கும், மருந்து, மாத்திரை, ஊசி ஆகியவற்றிற்கான செலவுக்கும் மொத்தம் ரூ. 80,000/— (எண்பது ஆயிரம்) ஆகும். மேலும் எந்தவித ஆதரவில்லாத நிலையில் உள்ள அவரது கஷ்ட நிலையை மனத்திற் கொண்டு, கருணை மிகுந்த பொது ஜனங்களிடமிருந்து நிதி உதவியை எதிர்பார்க்கிறோம். ரமேஷின் தந்தை முகவரிக்குப் பணத்தை அனுப்புமாறு கேட்டுக் கொள்கிறோம்.

முகவரி: திரு. ஜி. சுப்புராஜ், 113, தேசிக விநாயகர் கோவில் தெரு, கோ. புதூர் மதுரை—625 007.

இப்படிக்கு,
உடன் பயிலும் மாணவர்கள்

திருமண மலர்

தென்கலே, பாரத்வாஜ கோத்திரம், சுவாதி நட்சத்திரம் எஸ்.எஸ்.எல்.சி. வரை படித்து, தையல் ஹையர் பாஸ் செய்துள்ள குடும்பப்பாங்கான பெண்ணுக்கு நிரந்தர வேலையில் உள்ள வரன் தேவை. பெட்டி எண்: 2847.

இந்து சைவ பழக்கமுள்ள தெய்வ பக்தியுள்ள 45 மத்திய அரசுத் துறையில் (ரயில்வே) 2300/— வேலை பார்க்கும் மனைவி இழந்த ஆணிற்கு சைவ பழக்கமுள்ள இந்து மதத்தைச் சார்ந்த 30—35 க்குள் குடும்பப்பாங்கான மணமகள் தேவை. மிக ஏழையாக இருந்தாலும் அரசு பணியில்லாதவர்களும் விண்ணப்பிக்கலாம். வரதட்சிணை தேவையில்லை. பெட்டி எண்: 2848.

வசதியுள்ள 26 வயது இந்து ரெட்டியார் வகுப்பை சேர்ந்த மணப்பெண்ணுக்கு மணமகன் தேவை. நல்ல கௌரவமான குடும்பத்தை சேர்ந்த வேலைக்குச் செல்லும் குடும்ப விவரத்தை எழுதி விண்ணப்பிக்கவும். பெட்டி எண்: 2849.

வடமாள், ஐயர், பாரத்வாஜ கோத்திரம், ரோஹிணி நட்சத்திரம், நல்ல தோற்றம், உயரம் 5' 3''. 24 வயது, எம்.எஸ்ஸி. பி.எட் பெண்ணிற்கு, நிரம்பப் படித்த, நல்ல வேலையிலுள்ள 31 வயதுக்குக் குறைவான ஐயர் மணமகன் தேவை. பெட்டி எண்: 2850.

வடமாள் நைத்ரப காஸ்யப பரணி 25 வயது 150 செ.மீ. மாநிறம் கண்ணாடி அணிந்த பி.யு.சி. டைப் ஹிந்தி ராஷ்டிரபாஷா டெலிபோன் டெலக்ஸ் படித்த பெண்ணிற்கு 30 வயதுக்குள் 1500 க்கு மேல் வருமானமுள்ள நல்ல உத்தியோகத்தில் பணிபுரியும் மணமகன் தேவை. பெட்டி எண்: 2851.

வடமாள் ஐயர், மகம் 2 ஆம் பாதம், கௌதம 23 வயது. பி.காம் படித்த வேலைக்குச் செல்லும் 5' 1½'' உயரமுள்ள பெண்ணிற்கு படித்த, நல்ல உத்தியோகத்தில் உள்ள வரன் தேவை. உட்பிரிவுகள் சம்மதம். பெட்டி எண்: 2852.

வடகலை ஐயங்கார், ஸ்ரீவத்ஸ கோத்திரம், தாய் தந்தை இல்லாத சுமாரான அழகுள்ள திருவாதிரை நட்சத்திரம். சத்துணவு பால்வாடி மையத்தில் பணிபுரியும் 34 வயது பெண்ணுக்கு, 40 வயதிற்குள் நல்ல வேலையும் குணமும் வரதட்சணை எதிர்பார்க்காத பரந்த மனப்பான்மையுள்ள வடகலை/தென்கலை ஐயங்கார் மணமகன் தேவை. எளிமையான முறையில் திருமணம் செய்து தரப்படும். பெட்டி எண்: 2853.

வடகலை, ஸ்ரீவத்ஸ கோத்திரம், ஸ்வாதி 31 வயது, 5' 4'' உள்ள, தனியார் நிறுவனத்தில் 1200 ரூ சம்பாதிக்கும் சிவப்பான, அழகான, பட்டதாரி பெண்ணுக்கு அதே வகுப்பைச் சேர்ந்த 36 வயதுக்கு மேற்படாத நல்ல உத்தியோகத்தில் உள்ள மணமகன் தேவை. பெட்டி எண்: 2854.

அஷ்ட சஹஸ்ரம் வாதூல கோத்திரம் கேட்டை வயது 23. டிப்ளமா முடித்து 1986 ல் பி.ஈ. முடிக்கும் திருச்சி மத்திய அரசு பணியில் ரூ 1500/— சம்பளம் வாங்கும் பையனுக்கு அதே பிரிவைச் சேர்ந்த 22 வயதுக்குள் பட்டதாரி பெண் தேவை. பெட்டி எண்: 2855.

வன்னியகுல க்ஷத்திரியர் வயது 25. எம்.ஏஸ்ஸி. எம்.பில் படித்த குடும்பப்பாங்கான அழகிய பெண்ணுக்கு அதே இனத்தில் உயர்ந்த உத்தியோகத்தில் உள்ள மணமகன் தேவை. ஜாதகம் மற்ற எல்லா விவரங்களுடன் விண்ணப்பிக்கவும். பெட்டி எண்: 2856.

கார்காத்த வெள்ளாளர் பிள்ளை இனத்தைச் சேர்ந்த 26 வயது 5' உயரம் சிவந்த மேனியுடைய பெண்ணிற்கு எஸ்.எஸ்.எல்.சி. வரையிலாவது படித்த, சுமார் 30 வயதுள்ள வேலைபார்க்கும் அல்லது சுய தொழில் புரியும் சைவப்பிள்ளை தேவை. அதே வகுப்பைச் சேர்ந்தவரும், சென்னையிலிருப்பவருமானால் நல்லது. மற்ற சைவக் குடும்பத்தாரும் விண்ணப்பிக்கலாம். பெட்டி எண்: 2857.

வன்னியர், வாணிபம், தாரமிழந்தவர், 5½' உயரமும், சிவந்த நிறமும், எடுப்பான தோற்றமும், வசதியுள்ளவருக்கு, எஸ்.எஸ்.எல்.சி. க்கு குறையாமல் படித்து, குடும்பக்கலை நன்கறிந்த பிராமண பேரின நங்கை மட்டுமே 35 வயதுக்குள் தேவை. குழந்தைகள் இல்லாத விதவைகளும், வேலைக்குச் செல்லாது வீட்டு மனைவியாக இருந்து வாழ விரும்புபவர்கள் மட்டும் முழு விபரத்தோடு எழுதுக. குறிப்பால் பகுத்துணரும் ஆற்றலும், இசை நுட்பமும், வாளிப்பான உடல்வாகும் வாய்க்கப் பெற்றிருத்தல் நலம். பெட்டி எண்: 2858.

தென்கலை அய்யங்கார், பாரத்வாஜ கோத்ரம் சதய நட்சத்திரம் 27 வயது எம்.ஏ. படித்த ஸ்டேட் பேங்கில் வேலையில் உள்ள பெண்ணிற்கு தகுந்த வரன் தேவை. வடகலையும் வரவேற்கின்றோம். சிறப்பாகத் திருமணம் செய்து கொடுக்கப்படும். விவரங்களுக்கு ஜாதகத்துடனும், முழு விவரங்களுடனும் எழுதவும். பெட்டி எண்: 2859.

வடகலை அய்யங்கார் கௌண்டின்ய கோத்திரம் உத்திர நட்சத்திரம் 35 வயது. எம்.எஸ்ஸி படித்த பேங்க் ஆபீஸர் வரனுக்கு (சம்பளம் 3000 ரூபாய்) தகுந்த பேங்க் அல்லது சென்ட்ரல் கவர்மெண்ட் வேலையில் உள்ள பெண் தேவை. தென்கலையும் வரவேற்கின்றோம். ஜாதகத்துடனும், மற்ற விவரங்களுடனும் தொடர்பு கொள்ளவும். பெட்டி எண்: 2860.

வடகலை அய்யங்கார், பாரத்வாஜ கோத்திரம், தஞ்சை ஜில்லா, வயது 30, பூராட நட்சத்திரம், பி.யு.சி. தையற்கலை தேர்ச்சி, வீட்டு வேலைகள் நன்கு பழக்கப்பட்ட பெண்ணிற்கு வரன் தேவை. ஜாதகம் மற்றும் விவரங்களுடன் தொடர்பு கொள்ளவும். பெட்டி எண் 2861.

கௌசிக கோத்திரம், பிரஹசரணம், மூலா நட்சத்திரம், ஹைதராபாத்தில் மத்திய அரசு நிறுவனத்தில் பணிபுரியும் 27/175/1400 பையனுக்கு மத்திய அரசு/வங்கி அல்லது மாற்றல் பெறக் கூடிய வேலையிலிருக்கும் பெண் தேவை. உட்பிரிவுகள் சம்மதம். ஜாதகத்துடன் விண்ணப்பிக்க. பெட்டி எண்: 2862.

கவரா நாயுடு வகுப்பைச் சேர்ந்த 30 வயது பையன், பி.காம் பெங்களூரில், மத்திய அலுவலகத்தில் வேலை. சம்பளம் ரூ 1200/—. அல்லூரிலோ, அல்லது அங்கு மாற்றலாகக் கூடிய உத்தியோகத்தில் உள்ள பெண் தேவை. வரதட்சிணை தேவையில்லை. இந்து மதத்தில் எம்மதமும் சம்மதம். பெட்டி எண்: 2863.

கொங்கு வேளாளக் கவுண்டர், வயது 26. பி.யு.சி. படித்த தனியார் நிறுவனத்தில் 600 சம்பளம் பெறும் வரனுக்கு படித்து வேலைக்கு செல்லும் பெண் தேவை. ஜாதி மத பேதமில்லை. விதவைகளும் விண்ணப்பிக்க லாம். வரதட்சணை தேவையில்லை. பெட்டி எண்: 2864.

க்ஷத்திரிய ராஜு தெலுங்கு (வயது 30) வகுப்பைச் சார்ந்த, எம்.ஏ. படித்து சென்னையில் போலீஸ் சப் இன்ஸ்பெக்டராகப்பணிபுரியும்நல்லஅழகானதோற்ற முடைய மணமகனுக்கு, அதே வகுப்பைச் சார்ந்த அழகான, படித்த மற்றும் கொஞ்சம் உயரமுள்ள கவுரவமான குடும்பப்பாங்கான மணமகள் தேவை. பெட்டி எண்: 2865.

அஷ்டசகஸ்ரம் காசிப கோத்திரம் மூலா நட்சத் திரம் 2 ம் பாதம் வயது 24. பி.ஏ. படித்து போஸ்டலில் வேலை பார்க்கும் பெண்ணிற்கு சம்பளம் ரூ 1000 மாற்றல் கிடைக்கும். பட்டதாரி பையன் 32 வயதுக்குள் மத்திய அரசு பாங்கு வேலை பார்க்கும் பையன் தேவை. உட்பிரிவு சம்மதம். சென்னையில் வேலை இருந்தால் உத்தமம். உயரம் 5' 2''. பெட்டி எண்: 2866.

பி.எஸ்ஸி, பி.எட். முடித்து கான்வெண்டில் (நெய் வேலியில்) மாதம் ரூ 1000/— சம்பாதிக்கும் சோழிய வெள்ளாள (அசைவம்) 24 வயது பெண்ணிற்கு அதே பிரிவில் நல்ல குடும்பத்தைச் சேர்ந்த நல்ல குணமுள்ள வேலையிலுள்ள பட்டதாரி மணமகன் தேவை, பெண் சற்று கறுப்பாக இருந்தாலும் நல்ல அழகு. நல்ல குணம். ஜாதகத்துடன் விண்ணப்பிக்கவும். பெட்டி எண்: 2867.

பிரஹசரணம் கர்க்க கோத்திரம். சதயம் வயது 35, எஸ்.எஸ்.எல்.சி. டைப்ரைட்டிங், இங்கிலீஷ், தமிழ் ஹையர் டி.டி.சி. கோர்ஸ் பாஸ் செய்துள்ள செவ்வாய் தோஷமுள்ள பெண்ணிற்கு மணமகன் தேவை. உட்பிரிவுகள் சம்மதம். எளிய திருமணம். உயரம் 5' 3''. நல்ல நிறம். பெட்டி எண்: 2868.

புதுவை மாநிலம் வன்னியர் சமூகத்தைச் சார்ந்த, ரூ 5000/— மாத வருமானம், வயது 30, உயரம் 5' 10'' கொண்ட தொழில் அதிபருக்கு பண்பு, திறமை, குணம், அழகு வாய்க்கப் பெற்ற மணமகள் தேவை. பெட்டி எண்: 2869.

வயது 34, தெலுங்கு க்ஷத்திரியர், வால்மீகி கோத் திரம் பி.ஏ. பட்டதாரி, நடுத்தரக் குடும்பத்தைச் சேர்ந்த பெண்ணுக்கு அதே இனத்தைச் சேர்ந்த 35 வயது முதல் 40 வயது நிரம்பிய பட்டதாரி, நிரந்தர வேலை யிலுள்ள மணமகன் தேவை. பெட்டி எண்: 2870.

வடமாள், கௌண்டின்ய கோத்திரம், எஸ்.எஸ். எல்.சி. 5' 1'', 1948 ல் பிறந்த நற்குணமுள்ள, அழ கான, குடும்பப் பொறுப்புள்ள பெண்ணுக்கு, நற் குணமுள்ள நிரந்தர வேலையிலுள்ள மணமகன் தேவை. பெண்ணுக்கு சென்னையில் ஒரு வீடு உள்ளது. பெட்டி எண்: 2871.

கௌசிக கோத்திரம், வடகலை சதயம் 33, 5' 1'' அழகு, குணம், பக்தி, குடும்பப்பாங்கான பி.யு. டெலி போன், டெலக்ஸ், ஆங்கிலம் ஹையர் டைப்ரைட்டிங் கில் தேர்ச்சி பெற்ற, தற்காலிக வேலையில் உள்ள பெண்ணுக்கு நிரந்தர அரசு/தனியார் வேலையில் உள்ள, படித்த மணமகன் தேவை. உட்பிரிவுகள் சம்ம தம். பெட்டி எண்: 2872.

பிரஹசரணம் வாதுல கோத்திரம் ஆயில்ய நட்சத் திரம் எஸ்.எஸ்.எல்.சி. படித்த நல்ல குணமும் வீட்டு வேலைகளில் தேர்ச்சியும் உடைய குடும்பப்பாங்கான 32 வயதுப் பெண்ணுக்கு நிரந்தர வருமானமுடைய மணமகன் தேவை. எளிய திருமணம். பெட்டி எண்: 2873.

சௌராஷ்டிர குலம், வயது 20, உயரம் 5' 2'' எலக்ட்ரானிக்ஸ் டிப்ளமா படித்துள்ள கௌரவமான குடும்பத்தைச் சேர்ந்தசுத்தஜாதகமுள்ளபெண்ணிற்கு அதே குலத்தில் நல்ல குடும்பத்தைச் சேர்ந்த தகுந்த வேலையில் இருக்கும் பட்டதாரி மணமகன் தேவை. ஜாதகத்துடன் விண்ணப்பிக்கவும். பெட்டி எண்: 2874.

ஆற்காடு முதலியார் வகுப்பைச் சேர்ந்த மாநில அரசாங்கப் பணியில் மாத வருமானம் ரூ 900/— பெறும் பெண்ணிற்கு (வயது 27 உயரம் 5' 3'') அதே வகுப்பில் 30—34 வயதுள்ள மாநில, மத்திய அரசில் பணிபுரியும் மணமகன் தேவை. சேலம், தரும புரி, பெரியார் மாவட்டத்தைச் சேர்ந்தவராயிருப்பின் நலம். பெட்டி எண்: 2875.

வடமாள் அஸ்வதி நைத்ருவ காச்யப கோத்திரம் கோவையை சேர்ந்த அய்யர் பையனுக்கு (34/165/ 1000 ரூ/பி. காம்) மிகமிக கடவுள் நம்பிக்கையுள்ள மிகவும் குடும்பப்பாங்கான படித்த பெண் தேவை. வரதட்சணை கிடையாது. நிபந்தனை எதுவும் கிடை யாது. பெண்ணின் குணத்திற்கு மட்டுமே முதலிடம். விரிவான குடும்ப விவரம், ஜாதகத்துடன் அனுப்ப வும். பெட்டி எண்: 2876.

தெலுங்கு விஸ்வ கர்மா பொற்கொல்லர் இனம் வயது 25 சிவந்த நிறம் சைவம். சொந்தத் தொழில் மூலம் மாத வருமானம் ரூ 900/—. இவருக்கு இதே இனத்தைச் சேர்ந்த ஓரளவு படித்த அழகிய குணமுள்ள மணமகள் தேவை. விருப்பமுள்ளவர்கள் ஜாதகம், அது ஜாதகத்துடன் தொடர்பு கொள்ளவும். பெட்டி எண்: 2877.

47/65/ரூ 3000 நல்ல வேலை சொந்த வீடு பார்க்க லட்சணமான, மனைவியால் கைவிடப்பட்ட பிரா மணருக்கு புஷ்டியான, சாந்தம், பக்தி, பொறுமை, சுத்தம், ப்ரேமம், உறவு காத்தல், பொறாமையற்ற, பதி விரதா தர்மம் உள்ள ஐயர் பெண்மணி 35—50 தேவை. விதவை, அனாதை, கன்னி, விவாகரத்து ஆனவர், சிறு ஊனம் உள்ளவர் சம்மதம். வேலை வேண்டாம் செலவே கிடையாது. சிம்பிள் ரிஜிஸ்தர் கல்யாணம். பெட்டி எண்: 2878.

திருநெல்வேலி சைவ வேளாள வகுப்பைச் சேர்ந்த 26 வயதுள்ள மாநில சர்க்காரில் வேலை பார்க்கும் அழகுள்ள பெண்ணுக்கு அதே இனத்தைச் சேர்ந்த மத்திய/மாநில/பாங்கில் பணிபுரியும் 27—30 மாப் பிள்ளை தேவை. ஜாதகம் மற்றும் விவரங்களுடன் Terms Negotiable பெட்டி எண்: 2879 ஐ தொடர்பு கொள்ளவும்.


செங்குந்த முதலியார், வயது 28, உயரம் 5' 4'' பூசம். நல்ல குணம், சிவந்த நிறம், அழகு உடைய, அரசுடைமையான வங்கியில் பணிபுரியும் பட்டதாரிப் பெண்ணிற்கு பொருத்தமான வரன் தேவை. பெட்டி எண்: 2880.

கம்மவார் நாயுடு (தஞ்சை ஜில்லா) கார்த்திகை, விருஷப ராசி 23 வயது/5' 3'' பி.ஏ. ஹோம் எகனா மிக்ஸ், சமையல், கைவேலை, வட மத்திய, தென் மாநிலங்களின் பாஷைகளும் தெரிந்த (தந்தை மத்திய அரசு கெஜட்டெட் ஆபீஸர்), அழகான ஒரே பெண் ணுக்கு, அதே பிரிவைச் சேர்ந்த, நல்ல உத்தியோகத்தில் உள்ள தகுதியான மணமகன் தேவை. குடும்ப விவரம், ஜாதகத்துடன் தொடர்பு கொள்ளவும். பெட்டி எண்: 2881.

பிரஹசரணம், பாரத்வாஜ கோத்திரம், சித்திரை நட்சத்திரம் 31 வயதுள்ள, தனியார் கம்பெனியில் மாதம் ரூ 1500/— சம்பளம் பெறும் அழகுள்ள மண மகனுக்கு, பேங்க், அரசு அல்லது அரசு சார்ந்த பணி யிலிருக்கும் 27 வயதிற்குட்பட்ட அழகும், நற்குண முமுள்ள மணமகள் தேவை. ஜாதகத்துடன் தொடர்பு கொள்க. பெட்டி எண்: 2882.

மத்திய அரசின் அஞ்சற்துறையில் பணியாற்றும், மாதம் ரூ 1100, வயது 30, மதுரை மாவட்டத்தைச் சேர்ந்த, இந்து ஆதி திராவிடர் (பறையர்) வகுப்பு, நடுத்தர குடும்பத்தைச் சேர்ந்த B.A. Discontd. மணமகனுக்கு படித்த, அரசாங்க உத்தியோகத்திலுள்ள மணமகள் தேவை. மணமகனுக்கு எவ்வித கெட்ட பழக்கமும் கிடையாது. பரந்த எண்ணங்கள் உடைய வர். மணமகனைப் பற்றிய முழு விவரங்களுடன் மட் டும் தொடர்பு கொள்ளவும். பெட்டி எண்: 2883.


கொசுக்கள் உங்கள் தூக்கத்தைக் கெடுக்கின்றனவா?
உபயோகியுங்கள் ஓடோமாஸ்-
உறங்குங்கள் நிம்மதியாக
இப்போது 100 கிராம் எக்கானமி பேக்கிலும் கிடைக்கிறது
ODOMOS mosquito repellent
ओडोमॉस मच्छर का दुश्मन
odomos
ஓடோமாஸ்
கொசுக்களின் எதிரி
BALSARA
CHAITRA-B BLS 546 TAM


பத்மம் தையல் பிரிவு
மகளிருக்கு மட்டும்
பத்மம் சில்க்ஸ் அண்டு சாரீஸ் பிரத்தியேகமாக அறிமுகப்படுத்தும் மகளிருக்காக மட்டும் செயல்படும் தையல் பிரிவு- மகளிருக்கான சுரிதார்கள், மாக்ஸிகள், சோளிகள், ஜாக்கெட்டுகள், நைட்டீஸ்கள், (இரவு உடைகள்) மற்றும் குழந்தைகளுக்கான ஆடைகளை சீரான கட்டணத்தில் உத்தரவாதத்துடன் தைத்து வழங்குகிறது.
பத்மம் - தையல் பிரிவு உங்களது துணிகளை குறிப்பிட்ட காலத்தில் உத்தரவாதத்துடன் தைத்து வழங்குகிறது. பத்மம் தையல் பிரிவு வாடிக்கையாளர்களின் அவசரகால தேவைக்கான தையல் வேலைகளுக்கு பிரத்தியேக கட்டணம் ஏதும் இன்றி துரிதமாக தைத்து வழங்குகிறது. இன்றே வருகை தாருங்கள்! விதவிதமான இன்றைய நாகரீக மாதிரிகளில் ஆடைகளை தைத்திட எங்களது தையல் பிரிவுக்கு ஒரு முறை வருகை தாருங்கள்!
பத்மம் PADMAM
சில்க்ஸ் அண்டு சாரீஸ்
193, அண்ணா சாலை, (ஆயிரம்விளக்கு கேப் எதிரில்)
ஆயிரம்விளக்கு, சென்னை-600 006.

ஸ்ரீவத்ஸ கோத்திரம் பிரஹசரணம், விசாகம் முதற் பாதம் 22 வயது 5' 2'' பி.எஸ்ஸி படித்து கோவையில் தனியார் பாலிடெக்னிக்கில் ரூ 600 சம்பளத்தில் வேலையில் இருக்கும் பெண்ணிற்கு பட்ட படிப்பு படித்து நல்ல வேலையில் இருக்கும் மணமகன் தேவை. ஜாதகத்துடன் விண்ணப்பிக்கவும். பெட்டி எண்: 2884.

பலிஜா நாயுடு 25, 150 செ.மீ. எஸ்.எஸ்.எல்.சி. தட்டெழுத்து ஆங்கிலம், தமிழ், தேர்ச்சி பெற்றுள்ள தையல் டி.டி.சி. பயிற்சி பெற்றுள்ள பெண்ணுக்கு, அரசு வேலை, தனியார் நிறுவனம், பணிபுரியும் 32 வயதுக்குள் உள்ள மணமகன் தேவை. பெட்டி எண்: 2885.

மாநில அரசில் சென்னையில் வேலை, பட்டபடிப்பு சம்பளம் 1000க்கு மேல் வயது 34. பிற்பட்ட ஜாதி சைவம் திருமணமாகாதவர். இளமைத்தோற்ற பெண்ணுக்கு அந்தஸ்துக்கு ஏற்றபடிப்பும் வேலையும் பொருத்தமாயுள்ள நடுத்தர குடும்பப் பையன் தேவை. இந்து எந்த ஜாதியும் சம்மதம். பெட்டி எண்: 2886.

பி.எஸ்ஸி வரை படிப்பு, நல்ல உயரம், அழகு, வயது 26 (8ல் செவ்வாய்)& பி.ஏ. வரை படிப்பு நல்ல அழகு வயது 23, வகுப்பு மொ. ஆண்டார்பண்ணை (கவுண்டர்). தொழில்: சொந்த இடத்தில் சொந்த பவர் லூம் பேக்டரி, வருமானம் 3000 ரூ. மாவட்டத் தலைநகரில் 2 பங்களா, சுமார் 3 போக நெல் விளைச்சல் பூமி 6 ஏக்கர். படிப்பும், அழகும், குணமும் நல்ல குடும்பத்தைச் சேர்ந்த ஜாதகங்கள் எதிர்பார்க்கப்படுகிறது. பதிவுக் கடிதத்தில் பதில் எதிர்பார்க்கப்படுகிறது. பெட்டி எண்: 2887.

வடகலை அய்யங்கார், 24 வயது, சென்னை ம.வி. கம்பெனியில் வேலை பார்க்கும் பெண்ணிற்கு, சென்னை நகரில், மத்திய அரசு, பாங்க் போன்ற நல்ல வேலையில் இருக்கும் வரன் தேவை. பெண்ணிற்கு, பிற்காலம் ரூபாய் 50 ஆயிரம் மதிப்புள்ள சொத்து கிடைக்கும். பாரத்வாஜ கோத்திரம், ரோகிணி நட்சத்திரம், வடகலை/தென்கலை பேதம் இல்லை. பெட்டி எண்: 2888.

வேளாளர் பிள்ளை, வயது 25, உயரம் 5' 5''. சென்னையில் பெரிய நிறுவனத்தில் ரூ 1300/— மாத சம்பளம் பெறும் வசதியான மணமகனுக்கு குடும்பப்பாங்கான, அழகான மணமகள் தேவை. ஜாதகம், குடும்ப விவரத்துடன் தொடர்பு கொள்க. பெட்டி எண்: 2889.

வாத்தியமாள் ஆத்ரேய கோத்திரம் 31/150 செ.மீ. நல்ல நிறமுள்ள அழகான எஸ்.எஸ்.எல்.சி. வரை படித்த குடும்பப்பாங்கான பெண்ணிற்கு நல்ல வேலையில் உள்ள மணமகன் தேவை. வசதியான கௌரவமான குடும்பம். ஜாதகம் விபரங்களுடன் விண்ணப்பிக்கவும். உட்பிரிவுகள் சம்மதம். பெட்டி எண்: 2890.

வன்னியகுல க்ஷத்திரியர் வயது 32, உயரம் 5 அடி. பி. ஏ., படித்த வேலைக்குச் செல்ல விரும்பாத, சைவ உணவு பழக்கமுள்ள பெண்ணிற்கு நல்ல வேலையில் உள்ள மணமகன் தேவை. இந்து மதத்தைச் சார்ந்த, தாரமிழந்தவரும், விவாகரத்துப் பெற்றவரும், எந்த ஜாதியினரும் விண்ணப்பிக்கலாம். பெட்டி எண்: 2891.

திருநெல்வேலி சைவ வேளாளர் இனத்தைச் சேர்ந்த, சென்னையில் இரயில்வே ஏ. எஸ். எம். ஆகப் பணிபுரியும் 29 வயது பட்டதாரி வாலிபருக்கு மணமகள் தேவை. அதே இனத்தைச் சேர்ந்த தகுதியானவர்கள் முழு விவரங்களுடன் விண்ணப்பிக்கவும். பெட்டி எண்: 2892.

கவரா நாயுடு வகுப்பைச் சேர்ந்த, குடும்பப்பாங்கான வீட்டு வேலைகளில் நன்கு தேர்ச்சி பெற்ற, நல்ல குடும்பத்தைச் சேர்ந்த பி.ஏ. பி.எட். படித்து, வேலையில் இல்லாத, சிவப்பு நிறமுள்ள பெண்ணுக்கு, வயது 28, நட்சத்திரம் உத்திரட்டாதி, அதே இனத்தைச் சேர்ந்த நல்ல வேலையில் இருக்கும் தகுந்த மணமகனின் பெற்றோர் முழு விவரங்களுடன் ஜாதகத்துடன் விண்ணப்பிக்கவும். பெட்டி எண்: 2893.

வடகலை, வாதூல கோத்திரம், விசாகம் 3ம் பாதம், வயது 27, உயரம் 5' 4,'' பி. காம், தட்டெழுத்து ஆங்கிலம், தமிழ் ஹையர், சுருக்கெழுத்து லோயர் பாஸ் செய்து நர்ஸரி பள்ளியில் வேலை பார்க்கும், குடும்பப்பாங்கான வீட்டு வேலைகளில் நன்கு தேர்ச்சி பெற்ற சிவப்பு நிறமுள்ள பெண்ணிற்கு, அதே பிரிவில் ஒழுக்கமும், இடகாத்திரமும் உள்ள நல்ல குடும்பத்தைச் சேர்ந்த நன்கு படித்து நல்ல வேலையில் உள்ள 32 வயதிற்குள் உள்ள வரன் தேவை. விவாகம் நல்ல முறையில் செய்து தரப்படும். முழு விபரங்களுடன் ஜாதகத்துடன் விண்ணப்பிக்கவும். விலாசம்: டி. எஸ். சுந்தரராஜன், நெ. 2, ஸ்ரீராகவம், சுப்பிரமணியபுரம், 8 வது வடக்கு அழகப்பாபுரம் போஸ்டு, காரைக்குடி—3. (623 003).

சென்னையில் கம்பெனியில் கிளார்க் 900/— பிற்பட்ட ஜாதி, சைவம், பண்பாடுள்ள, தீயபழக்கமற்ற, 30 வயதுப் பையனுக்கு சென்னையில் வேலை பார்க்கும் வெளியூரானாலும் மாற்றி வரக்கூடிய குடும்பப்பாங்கான பெண் தேவை. வரதட்சிணை வேண்டாம். ஹிந்து எந்த ஜாதியும் சம்மதம். பெட்டி எண்: 2894.

வேளாளப் பிள்ளை, வயது 29, உயரம் 5' 6'' சொந்தத்தில் தொழில் செய்யும் (தேயிலைத் தோட்டம்) வசதியான, நிரந்தர வருமானமுள்ள, படித்த மணமகனுக்கு, அழகான, படித்த மணமகள் தேவை. உட்பிரிவுகள் பேதமில்லை. குடும்ப விவரம் ஜாதகத்துடன் விண்ணப்பிக்கவும். பெட்டி எண்: 2895.

அகமுடைய முதலியார் வகுப்பு, 27 வயதான, பி.காம் பட்டதாரி, அரசு நிறுவனத்தில் நிரந்தர வேலையில் மாதம் ரூ. 1200/— சம்பாதிக்கும் வரனுக்கு அதே வகுப்பைச் சார்ந்த, படித்து வேலையில் இருக்கும் (அ) குடும்பப்பாங்கான மாநிறம், 25 வயதுக்குள் இருக்கும் மணமகள் தேவை. ஜாதகக் குறிப்புடன் விண்ணப்பிக்கவும். பெட்டி எண்: 2896.

காசியப கோத்திரம், வடமாள் ஐயர், பி.ஏ.பி.எட்., அரசு பள்ளியில் ஆசிரியையாகப் பணிபுரியும் 29 வயதுப் பெண்ணுக்கு நல்ல வேலை அல்லது பிஸினஸ் செய்யும் தகுதியுள்ள மணமகன் தேவை. பெட்டி எண்: 2897.

காசியப கோத்திரம் .வடமாள் ஐயர், எம். ஏ. படித்துக் கல்லூரியில் உதவிப் பேராசிரியையாகப் பணிபுரியும் 34 வயதுப் பெண்ணுக்குப் படித்த நல்ல வேலை அல்லது பிஸினஸ் செய்யும் தகுதியுள்ள மணமகன் தேவை. பெட்டி எண்: 2898.

நான்கு வருடங்களுக்கு முன் திருமணமாகி 3 மாதங்களுக்குள் பல கொடுமைகளுக்கு ஆளாகித் தற்போது விவாகரத்துப் பெற்றுள்ள 36 வயது, காசியப கோத்திரம், அழகுள்ள ஐயங்கார் பெண்ணிற்கு அதே இனத்தைச் சேர்ந்த பரந்த மனப்பான்மையும்

திருமணமலர்ப் பகுதியில் விளம்பரம் செய்ய கட்டணம் ரூ 30/— தொகையை 'மங்கையர் மலர்' என்ற பெயருக்கு போஸ்டல் ஆர்டராக மட்டுமே அனுப்ப வேண்டும். ஒரு விளம்பரத்தில் ஒருவருக்கு 30 வார்த்தைகளுக்குள் விவரங்கள் தர வேண்டும். பதில் அனுப்புபவர்கள் 'விளம்பரதாரர், பெட்டி எண்...... c/o. மங்கையர் மலர், கிண்டி சென்னை 600 032 என்ற விலாசத்துக்கு அனுப்பவும். தனிப்பட்ட கடிதப் போக்குவரத்து கிடையாது.

இரக்க சிந்தையும், நல்ல குணமும், பழக்கமும் உள்ள சென்னையில் நல்ல உத்தியோகத்தில் உள்ள, 45 வயதுக்குட்பட்ட வரன் தேவை. மனைவியை இழந்த குழந்தைகள் இல்லாதவர்களும் விண்ணப்பிக்க லாம். பெட்டி எண்: 2899.

மாநில அரசில் வேலை பார்க்கும் தாரம் இழந்த, குழந்தையற்ற, மாதம் ரூபாய் ஆயிரம் வாடகையாக வரும் ரூபாய் மூன்று லட்சத்திற்கு மேல் பெறுமானம் (அனைத்து வசதிகளுடன் புதிதாகக் கட்டப்பட்ட 8 வீடுகள் கொண்ட காம்பவுண்டு) சொத்துக்கு உரிமை உள்ள 35 வயது, உயரம் 180 செ.மீ. இந்து சேனைத் தலைவர் முதலியார் மாப்பிள்ளையாகிய என் ஒரே பையனுக்கு. இவ்விடம் மாற்றலாகி வர விருப்பம் தகுதியுடைய அரசில் வேலை பார்க்கும் அல்லது வசதி உள்ள பெண் தேவை. சாதி, மத பேதம் இல்லை. விதவை, மணமுறிவுற்றோரும் தொடர்பு கொள்ளவும். முகவரி: லக்ஷ்மி அம்மாள், எண்: 11, மூர்த்தி நாயனார் தெரு, பாளையங்கோட்டை, திருநெல்வேலி—627 002.

அஷ்டசகஸ்ரம், கௌண்டின்ய கோத்திரம், ஆயில்யம் 3ம் பாதம், பி. ஏ., 5' 4'' உயரம், வீட்டு நிர்வாகம், டெய்லரிங், எம்ப்ராய்டரி நன்கு தெரிந்த 36 வயது பெண்ணிற்கு, நிரந்தர வேலை பார்க்கும் மணமகன் தேவை. உட்பிரிவுகள் சம்மதம். பெட்டி எண்: 2900.

வரதட்சணை எதுவுமே ஏற்காத தூய இந்து தேவர் (மறவர்), 29, பட்டதாரி, கிராமச் சார்பு சுய தொழில் களில் சராசரி மா. வ. ரூ. 3000/— (மூவாயிரம்) பாரம்பரியம் மிக்க குடும்பத்துக்கு ஏற்ற குணம் நிறைந்த படித்த துணை தேவை. இன வேறுபாடு இல்லை. இலங்கை தமிழ்ப் பெண், அதிக விருப்பம். தொடர்பு கொள்க. பெட்டி எண்: 2901.

வடமான், பாரத்வாஜ கோத்திரம், ஆயில்யம் 4ம் பாதம், கர்நாடகாவில் மெடிகல் காலேஜ் ஆஸ்பத் திரியில் ரூ. 1200/— சம்பளம் பெறும் 24 வயது வரனுக்குப் படித்த ஸ்டெனோ/பாங்கில் வேலை பார்க் கும் சென்னையிலிருக்கும் மணமகள் தேவை. வரதட் சணை தேவையில்லை. ஜாதகத்துடன் விண்ணப்பிக்க வும். எஸ். முத்துகிருஷ்ணன், சப்—போஸ்ட் மாஸ்டர், நீடூர்—609 203.

வடகலை ஐயங்கார், ஸ்ரீவத்ஸ கோத்திரம், கேட்டை 4ம் பாதம், 28 வயது, 5' 4'' மாநிறம், பி. எஸ்ஸி. வேலைக்குப் போகாத, சுத்த ஜாதகமுடைய, பெண் ணிற்கு, நல்ல வேலையிலுள்ள வரன் தேவை. உட்பிரிவு கள் சம்மதம். (சகோதரிகள் மட்டும் கலப்பு மணம் செய்தவர்கள்.) பெட்டி எண்: 2902.

தென்கலை, பாரத்வாஜ கோத்திரம், உத்திரம், 29 வயது, 5' 4'' உயரம், பி. காம் (ஜி. டி. எம். எம்.) படித்த மாநில அரசு கம்பெனியில் (சென்னை) ரூ. 1000/— சம்பளம் பெறும் வரனுக்குப் படித்த நல்ல வேலையில் உள்ள வரன் தேவை. வடகலையும் சம்மதம். பெட்டி எண்: 2903.

ராணிப்பேட்டையில் உத்தியோகத்திலுள்ள ஆத் ரேய, வடமான், விசாகம், 30/5' 6''/1200 பட்ட தாரிக்கு வங்கி பணியிலுள்ள அல்லது பி.எஸ்ஸி. பி. எட்., படித்த ஆசிரிய பணியிலுள்ள அல்லது இல் லாத நல்ல குடும்பத்துப் பெண் தேவை. கர்நாடக இசை அறிந்திருப்பது விரும்பத்தக்கது. ஜாதகத்துடன் தொடர்பு கொள்ளவும். பெட்டி எண்: 2904.

Vanniakula Kshtriya, pure vegetarian Girl, Graduate unemployed aged 32, height 5' domestically well trained fairly good looking with excellent family background seeks suitable Groom. Widower, or Divorcee also welcome. Caste no bar. Box No. 2905.

Wanted fair looking Graduate Girl for Malabar Iyer Boy aged 31 years employed in Nationalised Bank. Brahacharanam, Koundinya Gothram Aayiliam Star. Subsect no bar. Apply with Horoscope and full details to Box No. 2906.

Wanted suitable Tamil-Yadava alliance for Graduate Girl 25/158, public sector employed, domestically well trained. Please correspond with details to Box No. 2907.

Alliance for son 33, Athreya, Brahacharanam Kettai, 5' 5" fair, Diploma in Engineering, permanently returning from Gulf and for daughter 26, Swathi, 5' 3" fair, B.Com., working in a small firm in Bombay. Other sub-sects no bar. Decent but simple marriage. Contact Box No. 2908.

Alliance sought for virtuous affluent Graduate unemployed good looking youngish looking wheatish complexioned Kausiga Iyengar Girl aged Thirty Seven from any Brahmin Groom well educated and well employed. Box No. 2909.

Marriage alliance for a divorcee Vadama, Koundinya, Visakam Girl of age 30, without encumbrance, studied upto School final, unemployed fair, goodlooking, homeloving 150cm. Desirability brahmin, widower or divorcee with one or two children, well settled in life. Box No. 2910.

Alliance invited from non-bharadwaja gothram boys around forty/forty two for goodlooking girl having Mars in Seventh House. Proposal with and withouthoroscope considered. Apply to Box No. 2911.

Alliance invited for Hindu Adi-dravida graduate girl 25, now doing final M.B.B.S. slim, fair, homely from Bank Officers, Doctors, Gazetted Officers, State/Central from same community. Box No. 2912.

Alliance invited from employed girls (transferable job), home-loving (domestically well-versed), fair, for Vadama Iyer (smartha), Srivatsa Gothram, young looking Bachelor, 39, height 5' 3", graduate, employed in Public Sector earning Rs. 1500/- Correspond with Horoscope Bio-data and other full family details to Box No. 2913.

Mutual alliance invited for Iyer family Vadama Girl B.Sc., B.Ed. aged 36 her brother 34 B.Com. Staff Officer, Reserve Bank. Subsects no bar. Box No. 2914.

For Vadama, Vadoola Gothram Sathayam Star, aged 30, Graduate Girl, Grooms from respectable family with decent job required. Sai devotees prefered. Suddha Jatakam, only daughter. Box No. 2915.

Alliance invited for Madhva Kannada boy aged 30, Vasistta Gothram, Central Govt. drawing salary Rs. 1450/- p.m. and his sister aged 24 studied upto P.U.C. domestically trained. Mutual alliance preferrable, 2nd son. Parents alive. Box No. 2916.

Hindu, Adidravida Tamil youth 36, M.A. in English Literature, Bank Officer drawing Rs. 4000/- invites matrimonial correspondence from smart, beautiful charming educated girls. Caste no bar. Box No. 2917.

Alliance invited from non-Bharadwaja Gotra Boys for a very fair Girl, aged 27 years from a very respectable family, is well trained in domestic arts. Post Graduate and an Officer in a private firm at Madras. Write to Box No. 2918.

Suitable non-Garg Vadagalai Iyengar Grom for convent educated Vadagalai Iyengar Graduate Girl, 29 years, 5' 2" employed at New Delhi. Rs. 1000/- p.m. Box No. 2919.

Wanted beautiful educated bride from any Chettiar Community for Vania Chettair handsome graduate groom 28 years 5' 8" drawing five figures salary abroad. Reply with horoscope and family details

to Box No. 2920.

Wanted suitable qualified decently employed Bridegroom for Brahacharnam Iyer Girl Gautama Star Mrigasirsham 31/160 fair good-looking Graduate decent marriage. Boys settled in Bombay preferable. Write details with Horoscope to Box No. 2921.

Alliance invited from Non Bharadwaja Iyer Bank/Govt. employed for Girl Vadama 26 years PUC., Teacher domestically well versed. Star Pooram, Suddha Jathakam. Early decent marriage. Apply to Box No. 2922.

Wanted Non Bharghva Kotharam Bride for Thenkalai Graduate Boy aged 30 years 178 cm. height. Having Business in Chemicals and Fertilizer, earning Rs. 5000/- p.m. Star Puradam. Subsect no bar. Apply to Box No. 2923.

Alliance for Bombay based qualified well placed Executive 39/160. Palghat Koundinya Iyer Moolam Divorced within months after marriage. Horoscope matching essential. No demands. Simple marriage. Correspond to Box No. 2924.

தஞ்சாவூர் சோழிய வெள்ளாளர் அசைவம், பட்டப்படிப்பு, சொந்த வியாபாரம், கௌரவமான வசதியுள்ள குடும்பம், ஐந்தேமுக்கால் அடி உயரம், நல்ல பர்சனாலிட்டி அழகிய தோற்றம் உள்ள பையனுக்கு இதே இனத்தில் படித்த, அழகான, குடும்பப் பாங்கான பெண் தேவை. கண்டிப்பாய் ஜாதகத்துடன் தொடர்பு கொள்ளவும். பெட்டி எண்: 2925.

மதுரையில் தமிழ்நாடு அரசுத்துறையில் — மாத சம்பளம் ரூ. 1200/ பணிபுரியும் தென்கலை அய்யங்கார் பாரத்வாஜ கோத்திரம் வயது 31, பி. காம் பட்டதாரிக்கு அதே வகுப்பைச் சேர்ந்த அரசு / பொதுத் துறை நிறுவனத்தில் மதுரையில்/மதுரைக்கு மாற்றல் செய்து கொள்ளக் கூடிய வேலையிலுள்ள மணமகள் தேவை. பெட்டி எண்: 2926.

குடும்பப் பாங்கும் நிர்வாகப் பொறுப்பும் உள்ள 27 வயது, பி. எஸ்.ஸி. பட்டதாரிப் பெண்ணுக்கு முற்போக்குச் சிந்தனையும், உத்தியோகமும் உள்ள பட்டதாரி மணமகன் தேவை. செங்குந்தர் பிரிவு. உகந்தவராய் இருந்தால் உட்பிரிவினரும் வரவேற்கப் படுகிறார்கள். பெட்டி எண்: 2927.

சௌராஷ்டிர குலம், டிப்ளமா சிவில் இஞ்சினியர் வயது 27/உயரம் 5' 3"/வருமானம் ரூ. 1500/— சென்னை தனியார் நிறுவனத்தில் வேலை செய்பவருக்கு, அதே குலத்தைச் சேர்ந்த தனியார் அல்லது அரசு நிறுவனத்தில் வேலை பார்க்கும் அல்லது வேலைக்குச் செல்லத் தகுதியுள்ள அழகும், பண்பும் உள்ள மணமகள் தேவை. ஜாதகம், குடும்ப விவரங்களுடன் தொடர்பு கொள்ளவும்: பெட்டி எண்: 2928.

31/170/ரூ. 1,500 எம். ஏ. எம். எட்., மேலும் படித்த தமிழ்நாடு அரசு மேல்நிலைப்பள்ளியில் முதுகலைப் பட்டதாரி ஆசிரியராகப் பணியிலுள்ள சொத்துள்ள, வசதியுள்ள தெலுங்கு வெலநாடு கௌண்டின்ய கோத்திரம், பிராமண மணமகனுக்குப் படித்த, வேலையிலுள்ள மணப்பெண் தேவை. உட்பிரிவுகள் சம்மதம். பெட்டி எண்: 2929.

வட ஆற்காடு, பாரத்வாஜ கோத்திரம், ரேவதி நட்சத்திரம், 36 வயது 5' உயரம், நல்ல நிறம், எஸ்.எஸ்.எல்.ஸி. பாஸ் செய்துள்ள வடமாள் அய்யர், பெண்ணிற்கு சுமார் 39—42க்குள் நல்ல வேலை/வியாபாரம் உள்ள வரன் தேவை. ஜாதகம் இல்லை. நன்றாக கலியாணம் செய்து தரப்படும். பெட்டி எண்: 2930.

சென்னையில் அரசு அங்கீகரித்த தனியார் பள்ளியில் ஆசிரியை, வயது 31, மாதச் சம்பளம் ரூ. 1100/— பெறுபவருக்கு, நாயுடு/ரெட்டி மணமகன் தேவை. எளிய திருமணம். பெட்டி எண்: 2931.

சென்னையில் மத்திய அரசு பணியில் ரூ. 1200/—, பட்டதாரி, பேரி செட்டி வகுப்பைச் சேர்ந்த 26 வயது, செவ்வாய் தோஷமுள்ள பெண்ணுக்கு, செவ்வாய் தோஷமுள்ள செட்டியார் வகுப்பைச் சேர்ந்த படித்துப் பட்டம் பெற்று நல்ல வேலையில் உள்ள மணமகன் தேவை. ஜாதகத்துடன் விண்ணப்பிக்கவும். பெட்டி எண்: 2932.

தேசிய மயமாக்கப்பட்ட வங்கியில் பணிபுரியும் 25/174/ரூ. 1200 இந்து, தெலுங்கு வன்னியர் இனத்தைச் சேர்ந்த பட்டதாரி இளைஞருக்கு படித்த, வங்கி அல்லது அரசுத் துறையில் பணிபுரியும் அழகும், குணமும் உள்ள தெலுங்கு அல்லது தமிழ் பேசும் பெண் தேவை. சாதி பேதமில்லை. ஜாதகம் மற்றும் குடும்ப விவரத்துடன் விண்ணப்பிக்கவும். பெட்டி எண்: 2933.

தஞ்சை மாவட்ட, சைவ, வெள்ளாள பிள்ளை, வயது 28, பி. எஸ்.ஸி படிப்பு, சென்னையில் கம்பெனியில் அதிகாரி வேலை, சென்னையில் சொந்த வீடும், கிராமத்தில் நஞ்சை நிலமும் உள்ள மணமகனுக்கு, அதே வகுப்பைச் சேர்ந்த, அழகுள்ள, படித்த, வேலையில் இல்லாத மணமகள் தேவை. குடும்ப விவரத்துடனும் பெண்ணின் ஜாதகத்துடனும் விண்ணப்பிக்கவும். பெட்டி எண்: 2934.

எஸ். எஸ். எல். ஸி. வரை படித்த 43 வயது, நிரந்தர வருமானம் உள்ள, பிராமண அய்யருக்கு, 32—36 வயதில் வேலைக்குப் போகும்/போகாத குடும்பப் பாங்கான பெண் தேவை. நட்சத்திரம் அனுஷம், பாரத்வாஜ கோத்திரம், வரதட்சணை வேண்டாம். எளிய முறையில் திருமணம். பெட்டி எண்: 2935.

மத்திய அரசில் இளம் விஞ்ஞானியாக மைசூரில் பணியாற்றும் 28 வயது இந்து நாடார் பெண்ணுக்கு அதே வகுப்பைச் சேர்ந்த சுமார் 32 வயதுள்ள மைசூரில் பணியாற்றும் மணமகன் தேவை. வெளிநாட்டில் பணியாற்றும் மணமகனாயின் திருமணத்திற்குப் பின் வெளிநாட்டிற்குப் பணியை மாற்றிக் கொள்ள இசைவோம். பெட்டி எண்: 2936.

பிரஹசரணம், கௌண்டின்ய கோத்திரம், வயது 22, மிருகசீருஷ நட்சத்திரம், சிவப்பு நிறம், 5' 2" பி.காம்., இறுதி ஆண்டு படித்துக் கொண்டிருக்கும் டைப்ரைட்டிங் ஆங்கிலம் தமிழ் ஹையர் பாஸ் செய்த வேலைக்குச் செல்லும் தகுதியுடைய குடும்பப்பாங்கான பெண்ணிற்கு நிரந்தரமான உத்தியோகத்தில் இருக்கும் மணமகன் தேவை. எளிய முறையில் திருமணம் நடத்தப்படும். உட்பிரிவுகள் சம்மதம். தாரமிழந்தவர்களும், டைவர்ஸ் செய்தவர்களும் விண்ணப்பிக்கலாம். பெட்டி எண்: 2937.

State Bank employed, Teller, 32/158 cms/Rs. 2500/-, 24, Manai Telugu Chettiar, seeks fair, good-looking beautiful, bank employed Bride. Caste, religion no bar. Apply to Box No. 2938.


Wanted Telugu Brahmin Bridegroom Graduate/Post-graduate well employed in Central/Banks/Private sector for a Mulakanadu Telugu Brahmin Kashyapa Graduate Bride employed 27, Visakam first Patham. Subsect no bar. Immediate marriage. Box No. 2939.

Alliance invited with Horoscope from Post-Graduate/professionally qualified Telugu-Mangala/Naidu Grooms preferably Madras based for fair, Graduate, Government employed Girl 25/155/Revathy. Decent family. Reply to Box No. 2940.

Edited, Printed and Published by V. Murali on behalf of Messrs Bharathan Publications Private Limited, at the Bharathan Press, Race Course Road, Guindy, Madras-600 032. (Phone: 431543)
Assistant Editor: Manjula Ramesh.



காலைப் புதுமை மாலைவரை நீடிக்கச் செய்யுங்கள்!
புதியது
Godrej
NEW CINTHOL
DEODORANT AND COMPLEXION SOAP
CINTHOL
உண்மையான புத்துணர்ச்சி. மற்ற சோப்புகள் தரும் குறைந்த நேர புத்துணர்ச்சி அல்ல. நாள் முழுவதும் உடலின் வியர்வை நாற்றமின்றி திகழும் புத்துணர்ச்சி! புதிய ஸின்த்தால் மட்டுமே அதனைத் தரவல்லது. இப்போது, ஒரு புதிய அற்புத நறுமணம் ஸின்த்தாலில் உள்ளது.
மேலும் அதன் சக்திவாய்ந்த வியர்வை துர்நாற்றம் போக்கும் தன்மை, சரும கிருமிகளை ஒழித்து உங்களை நாள் முழுவதும் நாற்றமின்றி புத்துணர்ச்சியுடன் வைத்திடும்.
ஸின்த்தால் மட்டுமே
உங்களை புத்துணர்ச்சியுடன் வியர்வை நாற்றமின்றி நாள் முழுவதும் வைத்திடும்.
Godrej



ஜான்ஸன்ஸ் பேபி கிரீம்
பச்சிள மேனிக்கு மென்மையான பராமரிப்பு.



உங்கள் குழந்தையின் பச்சிள மேனி அனைத்துக்கும் இதமான பாதுகாப்பு

ஜான்ஸன்ஸ் பேபி கிரீம் பச்சிள மேனிக்கு மென்மையான பராமரிப்பு.

உங்கள் குழந்தையை போன்ற மிருதுவான, மென்மையான, பச்சிளமேனிக்கு தேவை 'ஒரு விசேஷமான கிரீம்-அதுவே. ஜான்ஸன்ஸ் பேபி கிரீம்.

தூய்மையான, மென்மையான ஜான்ஸன்ஸ் பேபி கிரீம் உங்கள் செல்லக் குழந்தையின் முழங்கால், முழங்கை, தோள்பட்டை மற்றும் மூக்கு இவற்றை பாதுகாத்து சுகமளிக்கிறது.

உலகிலேயே ஒப்பிலா மணியல்லவா உங்கள் அன்பு குழந்தை? அந்த குழந்தைக்கு உபயோகிப்பீர் ஜான்ஸன்ஸ் பேபி கிரீம் ஒன்றே.

Johnson & Johnson

பச்சிள சருமத்தை மிக சிறப்புடன் அறிந்துள்ளோர் வழங்குவது ஜான்ஸன்ஸ் பேபி கிரீம்

OBV 5809 TM


புதுமைக்கும் தரத்திற்கும்
புதியதொரு நிறுவனம்
நம்பிக்கைக்கும் நாணயத்திற்கும்
நல்லதொரு நிறுவனம்
லலிதா
Jewellery Mart
ஜுவல்லரி மார்ட்
123, உஸ்மான் ரோடு, பனகல் பார்க்,
தி.நகர், சென்னை-600 017.
தொலைபேசி : 445939, 442601
Lalitha®
Jewellery Mart
சிறப்பு சேமிப்பு
திட்டங்களுக்கு
நேரில் அணுகவும்



சலவை தோறும் பொலிவு...சலவைக்கு சலவை...பவர் பேக்டு ஸர்ஃப் புத்தாடைபோல் வெண்மை பொலிய வெளுக்கிறது!


வெளுக்கும் ஒவ்வொரு சட்டைக்கும், ஒவ்வோர் ஆடைக்கும் வெண்மை மிடுக்கு, புதுமைக் கருக்கு-அளிக்குது பவர் பேக்டு ஸர்ஃப். அன்றன்றே வாங்கி அணிவது போல் என்றென்றும்...கோடித் துணிபோல் கோலப் புதுமை.

இதுவரை இல்லாத ஏற்றமான சக்தி செறிந்து வருகுது பவர் பேக்டு ஸர்ஃப்... பேராற்றல் மிகுந்தது. பேணிக் காப்பதில் உயர்ந்தது. ஆழ ஊடுருவித் துப்புரவாக்கும் சக்திபடைத்தது; அடைந்திராத அமோகமான நுரைவளம் மிகுந்தது.

விடாத அழுக்கையும் விரட்டியடிக்கும், வெண்மையினை வாழ்விக்கும், காலமெல்லாம் துணிப் புதுமை காக்கும்.

வெண்ணிறமோ, வர்ணமோ...விசேஷத் துணிகள், அன்றாடத் துணிகள் எல்லாமே ஒளிமிளிரும் ஒப்பற்ற வெள்ளைவெளேர்... ஸர்ஃப் சலவையிலே...நித்தமும் நிலைபெறுமே புத்தாடைக் களையுடனே.

சலவைப் பவுடர்கள் பலநூறு இருக்கலாம், ஆனால் உங்கள் குடும்பத் துணிகளுக்கு நம்பிக்கையானது ஸர்ஃப் ஒன்றுதான்... ஸர்ஃப் அன்றி வேறில்லை.



ஸர்ஃப் சலவை: ஒப்பற்ற வெள்ளைவெளேர், சகல துணிகளுக்கும் புதுமை ஜோர்!

இந்துஸ்தான் லீவரின் தரமான தயாரிப்பு.

LINTAS SU 323 2517 TM



daCunha GCM 123/86 TM

REGISTERED No. TN MS (S) 231

Registered as a Newspaper in Srilanka



daCunha/CLM/5/85 TM